விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 19 ஞாயிற்றுக்கிழமை (02.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 165

# சீனாவுடன் இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம்

## விபரங்களை வெளியிட சீனா மறுப்பு

இலங்கை இராணுவத்திற்கு பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்பங்களை வழங்க சீனா இணக்கம் தெரிவித்துள்ளது. சீன வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஹாங் லி, பீஜிங்கில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், சீனாவும், இலங்கையும் தமக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் விரிவு படுத்திக் கொள்ள இணக்கம் கண்டுள்ளன என்றார். (23ஆம் பக்கம் பார்க்க)

## தலதா மாளிகைக்கு ஜனாதிபதி விஜயம்



(கண்டி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ நேற்று கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பின்னர் அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்கர் உடுகம ஸ்ரீ புத்திரக்கித்த தேரரை சந்தித்து ஜனாதிபதி ஆசிபெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே மகா சங்கத்தினருக்கு தானமாக வழங்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் பூஜைப் பொருட்களின் தரத்தை உறுத்திப்படுத்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்றுக் காலை (23ஆம் பக்கம் பார்க்க)

## அடம்பிடிக்கும் விகாராதிபதி

மட்டக்களப்பு நகரில் (வடக்கு பிரதான நுழைவாயில்) பிள்ளையாரடி வளைவில் புத்தர் சிலை வைப்பதற்கு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ள தடைக்கு எதிராக தான் கொழும்பு மேல் நீதிமன்றத்தை நாடப் போவதாக மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமன ரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

குறித்த இடத்தில் புத்தர் சிலை வைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிக்கு எதிராக கடந்த புதன்கிழமை அந்தப் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பாக பொலிஸார் முன்வைத்த அறிக்கையை பரிசீலித்த நீதிமன்றம், அதற்கான வேலைகளுக்கு தடை விதித்தது.

இது குறித்துக் கருத்து தெரிவித்த அம்பிட்டியே சுமனரத்ன தேரர், "ஏறகெனவே பிள்ளையாரடி பிள்ளையார் ஆலயம் முன்பாக ஒரு புத்தர் சிலை உள்ளது. அந்த சிலை இப்போது உடைந்து சேதமடைந்து காணப்படுகின்றது. அந்த சிலை நிறுவப்பட்டுள்ள இடம் தனியார் (24ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கத்தை இழந்த புலிகள் போல் ஜயலத்தை இழந்துள்ளது ஐ.தே.க!



(கொழும்பு)

"தமிழீழ விடுதலைப் புலிகள் அன்று தமது தத்துவ ஆசிரியர் அன்ரன் பாலசிங்கத்தை இழந்தது ,அவர்களுக்கு ஈடுசெய்ய முடியாததாக இருந்தது. அதேமாதிரி இன்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் இழப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாபெரும் இழப்பாகும். இவர் எமது அரசைக் கடுமையாக விமர்சித்தாலும் நல்ல பண்புடையவர்" என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

### ஜனாதிபதி இரங்கல்



ஐக்கிய தேசியக் கட்சியின் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் தனது இறுதி மரியாதையைச் செலுத்தினார்.

அன்னாரது பூதவுடல் ஜா-எலயிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அவரது வீட்டுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் (23ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலய பகுதியில் தனியார் நிலங்களை அரசு சுவீகரிக்கும்

### காணி அமைச்சர்

(கொழும்பு)


வடக்கில் இராணுவ தலைமையகத்தை ஏற்படுத்துவதற்காக பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள பிரதேசத்தில் இருக்கும் 6 ஆயிரத்து 381 ஏக்கர் தனியார் நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்த உள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

கையகப்படுத்தப்படும் காணிகளுக்கு, அரசாங்கத்தின் மதிப்பீட்டின்படி இழப்பீடுகள் வழங்கப்படும். அபிவிருத்தி மற்றும் தேசிய பாதுகாப்புக்காக அரசாங்கத்திற்கு காணிகள் தேவைப்படுவதாகவும் இதில் வடக்கு, தெற்கு என்று பேதங்கள் கிடையாது எனவும் அமைச்சர் கூறியுள்ளார். தெற்கில் உள்ள மக்களின் பராம்பரிய காணிகளை கூட அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளது.

வடக்கில் இராணுவம் கைப்பற்றி இருந்த காணிகளில் தேவையான காணிகளை மாத்திரம் வைத்து (23ஆம் பக்கம் பார்க்க)

## கவுணாவத்தையில் நேற்று 750 ஆடுகள் வெட்டப்பட்டன

### 15 ஆயிரம் பேர் வரை கூடினர்



(யாழ்ப்பாணம்)

கீரிமலை சருகம்பனை கவுணாவத்தை நரசிம்ம வைரவர் ஆலயத்தில் நேற்று சுமார் எழுநூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆடுகள் பலியிடப்பட்டன.

அதிகாலையில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளை தொடர்ந்து வைரவருக்கு பொங்கி படைக்கப்பட்டது.

அதனைத் தொடர்நது வெளி மண்டபத்தில் மாமிசப் படையல் செய்யப்பட்டது.

இதில் முட்டைகள், கள்ளு, கருப்பணி போன்றவற்றுடன் உணவு படைக்கப்பட்டு (23ஆம் பக்கம் பார்க்க)

## பின்லேடனை கொலை செய்ய அமெரிக்காவுக்கு உதவிய யாழ்ப்பாணத் தமிழன்



(வாஷிங்டன்)

அமெரிக்காவிற்கு ஒசாமா பின்லேடனை கொலை செய்யும் திட்டத்தில், பிரதானமான ஒருவராக செயற்பட்டவர் ஈழத்தமிழரான பேராசிரியர் சிவலிங்கம் சிவநாதன் என தெரிய வந்துள்ளது.

ஆங்கில இணையத்தளமொன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.




யாழ்ப்பாணம் இந்து கல்லூரியின் பழைய மாணவரான பேராசிரியர் (23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



கீரிமலை கவுணாவத்தையில் நேற்று நடைபெற்ற வேள்வியின் போது ....



தீ விபத்துக்கு உள்ளான "செல்லப்பா லெதர் & றெக்சின் லேக்ஸ்" உரிமையாளர் செல்லப்பா சற்குணத்திற்கு ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியால் இழப்பீட்டு தொகையாக ரூபா. 580, 000 வழங்கப்பட்டது. இதனை யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ். ஏ. நிரஞ்சன் கையளிப்பதனையும் அருகில் உதவி முகாமையாளர் எஸ். பிரபாகரன் நிற்பதையும் காணலாம்.


**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு**

தொ.பே. : 021 321 0815,021 567 1540

E-mail : valampurii@yahoo.com,


# தமிழ் பேசும் உப தபாலதிபர்கள் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் பேசும் உப தபாலதிபர்கள் தொழிற் சங்கத்துக்கு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

அண்மையில் யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற்ற சங்கத்தின் 42-வது வருடாந்த பொதுக் கூட்டத்திலேயே இத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

இதில் தலைவராக எஸ்.ஜெயரட்ணம் (கட்டுடை), உபதலைவர் எஸ்.கொன்சால்வாஸ் கூஞ்ஞ (தலைமன்னார் பாலம்), செயலாளர் எல்.எம்.அகமட் (புதுப்பள்ளியடி), உப செயலாளர் எஸ்.எம்.அஷ்ரப் (மாவடிச்சேனை), பொருளாளர் எஸ்.கே.சதீபன் (இறுப்பிட்டி), உப பொருளாளர் ஏ.எல்.ஆதம்லெப்பை (பிறைந்துறைச்சேனை) ஆகியோரும் 11 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் இக்கூட்டத்தில் முக்கிய சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

ஓய்வுபெற்றுச் செல்லும் அங்கத்தவர்களுக்கு நலம்புரிக் கொடுப்பனவாக ஆகக் கூடுதலாக 20 ஆயிரம் ரூபாய் வரை செலுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி 20 வருடத்துக்கு உட்பட்ட சேவைக் காலத்தைக் கொண்ட அங்கத்தவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்குவது எனவும் 20 வருடத்திற்கு மேற்பட்டவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் அங்கத்தவர்களிடமிருந்து மாதாந்தம் நூறு ரூபாவினை பெற்றுக் கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது..

இக்கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக வடக்கு மற்றும் வட மத்திய மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் என். இரத்தினசிங்கம் கலந்து கொண்டதுடன் வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சுமார் 150 ற்கும் மேற்பட்ட உப தபாலதிபர்களும் கலந்து கொண்டனர். (எ)

## எதிர்பார்ப்புக்களை பாதுகாக்கும் அரசியல் அமைப்பு ஒன்றே தேவை!

**ரணில் தெரிவிப்பு**

(நுவரெலியா)

பொது மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பாதுகாக்கும் அரசியலமைப்பு ஒன்றை தயாரிப்பது தமது கட்சியின் நோக்கம் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிற்சங்கங்களுடன் நேற்று நுவரெலியாவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தக் கருத்தை வெளியிட்டார்.

தமது நோக்கத்தை நிறைவுறுத்துவதற்காக கட்சியால் முன்வைக்கப்பட்ட யோசனை பொது மக்கள் மத்தியில் கலந்தாலோசனைக்கு விடப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நிகழ்வில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உப தவிசாளர் கே.வேலாயுதம், இலங்கை சரித்திரத்தில் முதன்முறையாக அரசியல்யாப்பு மக்கள் கருத்துக்கு விடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (எ-11)

## ஏழு மில்லியனுடன் சீனப் பிரஜை கைது

72 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு பணத்துடன் சீன பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

61 வயதுடைய குறித்த நபர் இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான யு.எல். 886 என்ற விமானத்தில் பாங்கொக் நோக்கிச் செல்ல முற்பட்ட வேளை கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 12.35 மணியளவில் இவர் கைது செய்யப்பட்டதாக கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் முதல் முறையாக இலங்கை வந்துள்ளார் என கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் குறிப்பிட்டனர். (எ-11)


## மரண அறிவித்தல்



**செ. வேலுப்பிள்ளை கனகசிங்கம்**

(முன்னாள் தெணிவாசா பேக்கரி உரிமையாளர்)

01.06.2013 சனிக்கிழமை மெல்போர்ன் அவுஸ்திரேலியாவில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நாகமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் அரியை தில்லைநாயகி, அரியை தனலட்சுமி, காசிநாதன், கிருஸ்ணன், திலகவதி, கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகநாதன், வசந்தி, நளினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

செல்வி வேலுப்பிள்ளை

சி.பத்மநாதன் JP

2 ஆம் குறுக்கு தெரு,
பருத்தித்துறை
தொ.பேசி:- 021 226 3619

(சி-3487)



## Vacancyes

Job! Job! Jop!.... 077 9994807, 072 4565659, 011 4986066 நீங்கள் O/L பயின்றவரா? இவ்விலக்கங்களுக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க! நாடு முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை . நிர்வாக அதிகாரி, செயல் திட்ட அதிகாரி, அலுவலக உதவியாளர், மேற்பார்வையாளர் அனுபவம் இல்லையா? தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.

☑ பயிற்சிக்காலம்:- 12,000/=, 15,000/=

☑ பின் குறைந்தது:- 45,000/=

(2742)



## கோழி இறைச்சி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட "புறொயிலர்" இறைச்சிக் கோழி மற்றும் கல்பேட் தினமும் காலை 6.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
**19,முருகேசர் ஒழுங்கை,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

(2910)



## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

ரூ 100/- சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

தொடர்புகளுக்கு : இல. 31. மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். 021 222 2829

(சி-3444)



## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

யாழ்.மண்ணில் முதல் தடவையாக வெண்திரைக்கு வெளியிலான காட்சிகளைக் கொண்ட முப்பரிமாண (3D) திரைப்படம்

ஜெய் வேதாளம்

காட்சிகள்
10.45, ⇨ இந்தியாலிருந்து வரவழைக்கப்பட்ட எம்மால்
2.45, வழங்கப்படும் கண்ணாடிகளை பாவிப்பதன் மூலமே
6.45 இத்திரைப்படத்தை கண்டுகளிக்க முடியும்.

(சி-3483)



## காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு உண்ணாப்பிலவு புதிய கொண்மென்றுக்கு அருகில் உள்ள 1 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
077 0338808, 077 8843241

(2899)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பகுதி நேர ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குக

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர் நியமன விடயத்தில் கல்வி உயர் அதிகாரிகள் அசமந்தப் போக்கினைக் கடைப்பிடிப்பதாக யாழ்.மாவட்ட பகுதி நேர ஆங்கில ஆசிரியர் ஒன்றியம் சுட்டிக் காட்டியுள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவிய காலத்தில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக குறைந்த ஊதியத்துடன் நிய மனம் பெற்ற பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கே இதுவரையிலும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நகர்புற, கிராமப்புற பாடசாலைகளில் மேற்படி பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் பெற்று அதற்கான மிக குறைந்த ஊதியத்தை பெறும் இவர்கள், ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக முழுநேரமும் பாடசாலையில் கடமையாற்றுவதாகவும் இவ் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை அனைத்து வகையான செயலாமர்வுகளிலும் பங்குபற்றி, மிகுந்த சிரமத்தின் மத்தியில் பாடசாலைகளில் பணியாற்றி பாடசாலைகளின் ஆங்கில ஆசிரிய பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் இப் பகுதிநேர ஆசிரியர்கள், கற்பித்தலில் போதிய அனுபவத்தை கொண்டிருந்தும் நிரந்தர நியமனத்தில் புறக்கணிக்கப்படுவது ஏன் என மேலும் வருத்தம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆங்கில டிப்ளோமா பட்டதாரிகளை ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளமையை வரவேற்றுள்ள குறித்த ஒன்றியம் பகுதிநேர ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சுக்கு எடுத்துக் கூறிய போது அவர்களிடமிருந்து சாதகமாக பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் இவ்விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநருடன் விரைவில் தொடர்பு கொள்ளவுள்ளதாகவும் அவ் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (அ-5)

## தவறுதலாக ஒலித்தது சுனாமி எச்சரிக்கை கோபுரம்

### மக்கள் அவதி

(புத்தளம்)

தவறுதலாக ஒலித்த சுனாமி எச்சரிக்கை கோபுரத்தால் மக்கள் அச்சமடைந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

உடப்பு,முந்தல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி எச்சரிக்கை கோபுரமானது நேற்று காலை திடீரென இரண்டு தடவைகள் ஒலித்துள்ளது. இதனால், அப்பகுதியை சேர்ந்த மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளதுடன், இது குறித்து பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் புத்தளம் அனர்த்த முகாமைத்துவ தலைமை அதிகாரி தெரிவிக்கையில்,

அது சுனாமி எச்சரிக்கை அல்லவென்றும் தொழில்நுட்பக் கோளாரே இதற்கு காரணம் என்றும் தெரிவித்துள்ளார்.

இக்கோபுரம் நேற்று காலை 10.21 மணியளவில் இரண்டொரு தடவைகள் ஒலித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## வீட்டை உடைத்து தங்க நகைகள் கொள்ளை

திருகோணமலை பெரிய கிண்ணியா பிரதேசத்திலுள்ள வீடொன்றில் பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நேற்று காலை நடைபெற்றுள்ளது. வீட்டு உரிமையாளர் வெளியே சென்றிருந்த வேளையில் இந்த திருட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் இருந்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற கிண்ணியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-2)

## வாரம் ஒரு தகவல்

### மதங்கள் மறைந்தன

விமானமொன்று ஓடி எழும்பி ஆகாயத்தில் உயர்ந்து கொண்டிருக்கையில், இன்னுமொரு விமானம் ஆகாயத்திலிருந்து இறங்கியது.

இச் சந்தர்ப்பத்தில் இரண்டும் மோதியதால் விபத்து ஏற்பட்டது. இவ் விபத்தில் 351 பேர் உயிரிழந்தனர்.

இங்கேயிருந்து புறப்பட்டது சவுதி அரேபியா விமானம். அங்கேயிருந்து வந்தது கஜகஸ்தான் விமானம். கனவுகளோடு பயணம் செய்தவர்கள் கருகிப் போனார்கள்.

விபத்தில் இறந்து போனவர்களில் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் அடங்கியிருந்தனர். ஆனால், உடல்கள் கருகியதால் எது இந்து, எது முஸ்லிம், எது கிறிஸ்தவம் என இனங்காண முடியவில்லை.

உறவினர்கள் எல்லோரும் ஓடி வந்து கூடினார்கள். சடலங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. உறவினர்கள் பார்த்தார்கள். அவர்களுக்கு தமது உறவுகளை அடையாளம் காண முடியவில்லை.

அதில் ஒருவர் எங்கள் மத வழக்கப்படிதான் இறுதிக் காரியங்கள் செய்ய வேண்டும். எப்படியாவது கண்டுபிடித்துக் கொடுங்கள் என்றார்.

அதிகாரிகள் செய்வதறியாது திணறினார்கள். இறுதியில் அனைவரும் ஏதாவது ஒரு சடலத்தைப் பார்த்து இதுதான் எங்கள் உறவினர் என்று சொல்லிக் கொண்டு எடுத்துச் சென்றார்கள்.

நடந்தது என்ன தெரியுமா? இந்து மதச் சம்பிரதாயப்படி முஸ்லிம் சடலங்கள் எரியூட்டப்படுகின்றன. இஸ்லாமிய முறைப்படி கிறிஸ்தவ சடலங்கள் அடக்கம் செய்யப்படுகின்றன. கிறிஸ்தவ முறைப்படி இந்து சடலங்கள் அடக்கம் செய்யப்படுகின்றன.

அங்கே மறைந்து போனது மனிதர்கள் மட்டுமா? மதங்களும் தான்!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

02.06.2013
(வைகாசி 19, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
நவமி பிற்பகல் 4.56 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 12.08 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை

**மேடம்** பயணங்களால் சில மன உளைச்சல்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்கள் முடிக்க சில தாமதங்கள் ஏற்பட இடமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**இடபம்** முயற்சிகள் பலிதமாகும், குடும்பத்தில் கலகலப்பான சம்பவங்கள் ஏற்படலாம், தன்னம்பிக்கை அதிகரிக்கும், பிறர் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், நண்பர்கள் உதவி செய்ய முன் வருவர், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள்.

**கடகம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், மங்கையரால் ஏற்பட்ட மனக் கலக்கம் மாறும், பெரியோர் உதவியுண்டு, பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்.

**சிங்கம்** சஞ்சலங்கள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகள் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, புதிய திருப்பங்கள் ஏற்படலாம், போசன நன்மையுண்டு,

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு, அபூர்வ சந்திப்புண்டு, பணப்புழக்கம் ஒழுங்காகும்.

**துலாம்** சுவாரஸ்யமான நாள், தேக நலனில் புத்துணர்வு தென்படும், பகைவர்கள் விலகுவர், காரிய அனுகூலமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** பிறருக்கும் உதவி செய்யும் மனப்பாங்கு ஏற்படலாம், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், தொழிலை விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்பீர்கள்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், திட்டமிட்ட காரியத்தை உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள், வாகன சுகமுண்டு, சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**மகரம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீகள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், போசன நன்மையுண்டு.

**கும்பம்** நன்மைகள் நடைபெறும் நாள், வாக்கு மேன்மையுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறும்.

**மீனம்** ஆழ்ந்த சிந்தனையுண்டு, தொழிலில் அதிக பிரையாசை காட்டுவீர்கள், பொருளாதார நலன் கருதி வெளியூர் பயணமொன்றை மேற்கொள்வீர்கள், போசன நன்மையுண்டு.

வளவன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 70 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 70-120 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 |
| தக்காளி | 90 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 100 | 80 | 120 |
| கரட் | 110 | 120 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 70 | 60 | 60 |
| வாழைக்காய் | 30 | . 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 200-220 | 120-180 | 120-200 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 |
| பயற்றங்காய் | 60 | 60 | 40 |
| லீக்ஸ் | 140 | 160 | 140 |
| பீற்றூட் | 70 | 100 | 120 |
| கறிமிளகாய் | 140 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 250 | 500 | 400 |
| போஞ்சி | 140 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களில் ஈடுபட்ட 203 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரம் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 203 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முஹமட் ஜெப்றி தெரிவித்தார்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிலிருந்து 95 பேரும் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிலிருந்து 108 பேருமாக மொத்தம் 203 பேர் யாழ்.மாவட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இவற்றில் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் அடிதடியில் ஈடுபட்ட 36 பேரும் சந்தேகத்தின் பேரில் 13 பேரும் விபத்தை ஏற்படுத்திய 7 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 23 பேரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 4 பேரும் அத்துமீறி பிறர் வீட்டுக்குள் நுழைந்த 5 பேரும் கசிப்பு வைத்திருந்த 12 பேரும் கலகம் விளைவித்த 6 பேரும் திருட்டில் ஈடுபட்ட 2 பேருமாக 108 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 5 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 13 பேரும் சந்தேகத்தின் பேரில் 26 பேரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 2 பேரும் ஏனைய குற்றங்களுக்காக 49 பேரும் மொத்தமாக 95 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)



நன்றி: ஐலண்ட்

# எங்கள் பிரச்சினைக்கு நாமே தீர்வு காண வேண்டும்-டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

எங்களுடைய பிரச்சினைகளுக்கு நாங்கள்தான் தீர்வு காண வேண்டும். சர்வதேசம் செய்யும் என எல்லாவற்றையும் எதிர்பார்த்து காத்திருக்க முடியாது எனத் தெரிவித்த பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகாணத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஒரு இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வாழ்வின் எழுச்சி எனச் சொல்லப்படும் திவிநெகும திட்டத்தை எதிர்த்திருந்தனர் எனவும் குற்றம் சாட்டியிருந்தார்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

திவிநெகும சட்டமூலம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு கொண்டு வரப்பட்டபோது அதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்த்திருந்தனர். இருப்பினும் அந்தச் சட்டமூலம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கானவர்கள் நன்மை பெறுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் மட்டும் 50 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறுகின்றனர். வடக்கு மாகாணத்தில் சுமார் ஒரு இலட்சம் வரையிலான வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் பயன்பெறுகின்றனர்.

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றால் இவ்வளவு குடும்பங்களும் பாதிக்கப்பட்டிருக்கும். ஆனால், திவிநெகும திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்த்திருந்தனர்.

இந்தத் திட்டத்தை இல்லாமல் செய்வதே அவர்களின் நோக்கம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதனைவிட பலமுறை தவறுகள் செய்துள்ளனர். ஏ-9 பாதை தடை செய்யப்பட்டிருந்தபோது முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவிடம் பாதையைத் திறந்துவிடுமாறு நான் வேண்டுகோள் விடுத்தேன். ஆனால், இராணுவத் தளபதி அதனை மறுத்து விட்டார்.

இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட்டபோது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் அவருக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். இருப்பினும் அவர் தோல்வியே கண்டார்.

ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யுத்தத்தில் பல இழப்புக்களைச் சந்தித்த பின்பும் தொடர்ந்து பல தவறுகளைச் செய்து வருகின்றனர்.

இலங்கையில் வாழும் தமிழர்களின் பிரச்சினைகளைப் பேசித்தான் தீர்க்க வேண்டும். எங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சர்வதேசத்தை எதிர்பார்த்து காத்திருப்பதில் எந்தவித பயனும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகங்கள் மீதும் கடந்த காலத் தவறான அரசியல் தலைமைகள் மீதும் பாரிய குற்றச் சாட்டுக்களையும் தனது உரையின் மூலம் அவர் முன்வைத்திருந்தார். (அ-6)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களாக 1100 பேர் நியமிக்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக வடக்கு மாகாணத்திலிருந்து ஆயிரத்து 100 பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டதோடு யாழ்.மாவட்டத்திலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்ட 321 பேருக்கும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து நேற்றுக்காலை நியமனப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின், இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எம்.ஜி.திலகஸ்ரீ, யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6)

# தே.அ.அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை 6ஆம் திகதி

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மக்களின் நலன் கருதி பவ்ரல் அமைப்பின் அனுசரணையுடன் எதிர்வரும் 6, 7 ஆம் திகதிகளில் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையின் போது 16 வயது நிரம்பியும் தேசிய அடையாள அட்டை பெறாதவர்கள், தேசிய அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள், தேசிய அடையாள அட்டை சேதமடைந்தவர்கள், பெயர் மாற்றம் செய்ய வேண்டியவர்கள் தங்கள் கிராம உத்தியோகத்தரிடம் சென்று பதிவுகளை மேற்கொள்வதுடன் அதற்குரிய ஆவணங்களையும் நடமாடும் சேவையில் சமர்ப்பிக்குமாறு வலி.மேற்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (அ-3-30)


2012 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய இலங்கை வங்கியின் சிறுவர் சேமிப்பு கணக்கில் வைப்பிலிட்டிருக்கும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 68 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மேற்படி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவி பரிசிலை பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.




## கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழக அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பருத்தித்துறை ஆத்தியடி லயன்ஸ் சுப்பிரமணியம் இல்லத்தில் லயன் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் புதிய நிர்வாக பதவியேற்பு தொடர்பான முக்கிய தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

எனவே, இதில் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி லயன்ஸ் கழக செயலாளர் லயன் க மகிந்தன் அறிவித்துள்ளார். (அ-3-10)

## நியமனம்

(தும்பளை)

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் நாளை திங்கட்கிழமை வேலுப்பிள்ளை சிவகுமார் நிர்வாக உத்தியோகத்தராக நியமிக்கப்படவுள்ளார். ஏற்கனவே நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றிய திருமதி சுமதி தியாகேசு ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-19)

# மாதா ஆலயத்தில் உண்டியல்கள் உடைப்பு

(கரணவாய்)

கரவெட்டிப் பகுதியில் உள்ள தேவ மாதா ஆலயத்தின் உண்டியல்கள் உடைக்கப்பட்டு அவற்றில் இருந்த பணம் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இப் பிரதேசத்தில் உள்ள தேவ மாதா ஆலயத்தின் வெளிப்பகுதியில் வைக்கப்பட்ட உண்டியல் உடைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆலயத்தின் ஜன்னல் கம்பியை வளைத்து உள் நுழைந்த திருடர்கள் ஆலயத்தினுள் வைக்கப்பட்டிருந்த உண்டியலையும் உடைத்து பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

ஒவ்வொரு புத்தாண்டு தினத்தில் மட்டுமே இவ் உண்டியல்களில் உள்ள பணத்தை ஆலய நிர்வாகிகள் வெளியில் எடுப்பது வழக்கம்.

நேற்று முன்தினம் இவ் ஆலயத்திற்கு பூசை தரிசனத்துக்கு சென்ற சமயமே இவ்விடயம் ஆலய நிர்வாகத்தினருக்கு தெரிய வந்துள்ளது.

இச் சம்பவம் பற்றி இதுவரை நிர்வாகத்தினர் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரிகள் கலந்து கொள்ளாததால் காணிப்பிரச்சினை செயலமர்வு இரத்து

(மன்னார்)

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற இருந்த அரச காணிகள் வழங்கல் தொடர்பாக அரச திணைக்கள அதிகாரிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த செயலமர்வு இரத்து செய்யப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்ட அரச திணைக்கள அதிகாரிகளை கலந்து கொள்ள வேண்டாம் என மன்னார் மாவட்டச் செயலகம் அறிவித்தல் வழங்கியிருந்ததாகவும் இதனால் எவரும் கலந்து கொள்ளாத நிலையில் குறித்த செயலமர்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பிரஜைகள் குழுவின் செயலாளர் டி.பி.சிந்தாத்துரை தெரிவித்தார்.

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரஜைகள் குழுவில் கடந்த வியாழன் , வெள்ளி ஆகிய திகதிகளில் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு அரச காணிகள் வழங்கல் தொடர்பாகவும், அதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கும் செயலமர்வு சிறப்பாக இடம்பெற்றது.

இந்த நிலையில் அரச திணைக்கள அதிகாரிகளுக்கு நேற்று சனிக்கிழமை குறித்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. செயலமர்வில் கலந்து கொள்வதற்காக மன்னார் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் உட்பட அரச திணைக்கள பணியாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. செயலமர்வில் அரச திணைக்கள அதிகாரிகளை கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டாம் என இராணு வத்தினினால் மன்னார் மாவட்ட அரசாங்கம் அதிப ருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரச அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக மேலதிக அரசாங்க அதிபர் அரச திணைக்கள பணியாளர்களை குறித்த செயலமர்வில் கலந்து கொள்ள வேண்டாம் என அறிவித்தல் வழங்கியுள்ளார்.

மேலதிக அரசாங்க அதிபரினால் தனித்தனியே அரச திணைக்களங்களுக்கு தொலைபேசிமூலம் கலந்து கொள்ள வேண்டாம் என அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. இதனால் அரச திணைக்கள அதிகாரிகள் எவரும் குறித்த செயலமர்வில் கலந்து கொள்ளவில்லை எனவும் இதனால் குறித்த செயலமர்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் மன்னார் பிரஜைகள் குழுவின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கழிவுகளால் நிரம்பும் வாதரவத்தை வீதி

(நல்லூர்)

ஆவரங்கால் கிழக்கு வாதரவத்தை வீதியில் அமைந்துள்ள கள்ளுத் தவறணைக்கும் சேரம் பிள்ளையார் கோயிலுக்கும் இடைப்பட்ட வீதியின் ஓரத்தில் பெருமளவு கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இக்கழிவுப்பொருட்கள் வேறிடங்களிலிருந்து வாகனங்களில் ஏற்றி வரப்பட்டு இப்பகுதியில் கொட்டப்படுகின்றன.

இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களையும் எதிர்கொள்கின்றனர்.

எனவே, இவ்விடயத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-134)


**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் | அன்பளிப்பு பொருட்கள் | உடுபுடவைகள்

CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-3199)



## சித்த ஆயுர்வேத வைத்தியம்

**குழந்தைப் பாக்கியம் பெற**

திருமணமாகிப் பல வருடங்களாகியும் குழந்தைப்பாக்கியம் இல்லாத பெண்களுக்கு மாத விலக்கை ஒழுங்குபடுத்தி கர்ப்பப் பையிலுள்ள கிருமிகளை அகற்றி குழந்தை உருவாக ஏது நிலையை உண்டாக்கக்கூடிய மருந்துகள் உண்டு.

**இராஜவஜீகரண லேகியம்**

நரம்புப் பலவீனமுள்ள ஆண் -பெண் இருபாலாருக்கும் சக்தியைக் கொடுத்து திருப்திகரமான தாம்பத்தியத்தை அனுபவிக்க உதவும். இந்திரியத்தில் உயிர் அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

**கிருஷ்ணா நேத்திர சிந்தாமணித் தைலம்**

பெண்களுக்கு நீண்ட அழகிய கூந்தலைத் தருவதோடு நீண்ட காலத்திற்கு கூர்மையான கண்பார்வை, படிக்கின்ற மாணவர்களுக்கு நல்ல ஞாபகசக்தி ஆகியவற்றைத் தந்து சொடுகு, மயிர் கொட்டுதலையும் கட்டுப்படுத்துகிறது. மொட்டைத் தலை இளைஞர்களும் பாவித்துப் பலன் பெறலாம்.

**இரத்த சுத்திச் சூரணம்**

புற்றுநோய், தோல், நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரத்தத்தைச் சுத்தம் செய்து நோயின் வேக்காட்டைக் குறைக்கும்.

இருதய நோயினால் அவதிப்படுபவர்க்கு இரத்தத்தில் உள்ள கொழுப்பைக் குறைக்கவும் நெஞ்சு நோவுக்குப் பூசுவதற்கு விசேடமான எண்ணையும் உள் மருந்துகளும் உண்டு. மண்டைச் சளி ஆஸ்துமா போன்ற சளி ரோகங்கள், மூட்டுவாத வலிகள், இடுப்புவலி, பெண்களின் மார்பகப் பிரச்சினைகள், வெள்ளைப்படுதல் போன்றவற்றுக்கும் சிறப்புச் சிகிச்சைகள் உண்டு. நீண்டகால நோயால் அவதிப்படுபவர்கள் ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொண்டால் பலன்பார்த்து பரிகாரம் சொல்லப்படும்

**தொடர்புக்கு : Dr. த.கிருஷ்ணபகவான்**
**தொ.பே: 0779723369**

**கிருஷ்ணா சித்த ஆயுர்வேத வைத்தியசாலை**
நீர்வேலிச் சந்தி, பருத்தித்துறை வீதி, நீர்வேலி.

(2904)



**வாழ்த்துகின்றோம்**

**ஒளிமயமான ஒன்பதாம் ஆண்டில்....**

நல்லனவே செய்து நாளும் வளர்ந்து வல்ல கணபதியின் வரமது பெற்று ஒளிமயமான ஒன்பதாம் ஆண்டில் கால் பதிக்கும் இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல் வாழ்க பல்லாண்டே!

**பட்டுச் சேலைகளின் சோலைவனம்**

நவீன டிசைன்களில்
நவநாகரிக ஆடைத் தினுசுகள்
புத்தம் புதிய பாணியிலமைந்த
நங்கையர் விரும்பும் சேலைகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

**இராஜபுரம், இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்**
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 0777225310, 021 222 6953

வாழ்த்துவோர்:
**வேணுகா கொமினிகேசன்**
நாச்சிமார் கோயிலடி (சிறிதரன்)

(ஜ909)



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா : 26<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L ,France PR<br>தொ.இ:B1892 | பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>உயரம்: 5' 3"<br>கி.பா :63ஈ 1ல் செவ்<br>தகைமை/தொழில்: HNDM,காசாளர் தனியார்<br>தொ.இ:G1909 |
| பிறப்பு: 1978 RC(V)<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L கணக்காளர் தனியார்<br>தொ.இ:B1893 | பிறப்பு: 1982 RC (V)<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:B.Com, M.ComAssistant Accountant<br>தொ.இ:G1914 |
| பிறப்பு: 1981 இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>உயரம்: 5' 4"<br>கி.பா : 24, 12ல் சூ, செவ்<br>தகைமை/தொழில்: O/L,வியாபாரம்<br>தொ.இ:B1894 | பிறப்பு: 1985 இந்து (விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா :15<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L வாடிக்கையாளர் சேவை அதிகாரி<br>தொ.இ:G1918 |
| பிறப்பு: 1983 இந்து(KO)<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>7ல் செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:MBBSDoctor<br>தொ.இ:B1897 | பிறப்பு: 1991 இந்து(V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ:G1919 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

**(சர்வதேச இலவச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

ஊடக அனுசரணை வலம்புரி



சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

விரைவு ! பாதுகாப்பு ! நம்பகத்தன்மை!

**உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

உங்கள் இல்லங்களில் இருந்தவண்ணமே சகல நாடுகளுக்குமான பொதிகள் பொறுப்பேற்கப்பட்டு குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும். (Pickup Service) உங்கள் உறவுகளின் கைகளில் 3 – 5 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்.

20 வருடங்களுக்கு மேல் எமது நிறுவனம் பொதிகள் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக தனி இடம் பிடித்துள்ளது.

- 11 Kg இக்கு மேற்பட்ட பொதிகளுக்கும் மிக குறைந்த கட்டணம் அறவிடப்படும்
- தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்பு பொருள்கள் புடைவைகள் CD, VCD கள் என்பன மிக விரைவாக அனுப்பி வைக்கப்படும்.
- 220 நாடுகளுக்கான கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன.
- கூடுதலான கட்டணங்கள் செலுத்தி ஏமாறாதீர்கள்



குறிப்பு : இந்த சலுகை திருமுருகன் கொம்நெற் இல் மட்டுமே

**திருமுருகன் கொம்நெற்**


இல. 208 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 222 7835
(... முன்பாகவும் ... இலோனிற்கு அருகிலும் அமைந்துள்ளது)
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
TCN E xpress இல. 2 B, நெல்சன் பிளேஸ், கொழும்பு - 2


(சி-3427)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org











யாழ் .மாவட்டத்திலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் ஆகியோர் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா , யாழ்.மாவட்ட பாராளுமனற் உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: எஸ்.ஆர்.கரன்)

# எந்தமத பிரிவினரும் சுதந்திரமாக வாழலாம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்தர்கள் என்ற வகையில் நாம் ஒரு போதும் அடிப்படைவரதிகளாக மாறியது கிடையாது. எல்லா மதங்களையும் சுதந்திரமாக பின்பற்றும் நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி தலதாமாளிகையில் அண்மையில் இடம்பெற்ற ஒரு சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், சமய சகவாழ்வு இந்நாட்டைப் பொறுத்தவரை முக்கியம். அதனை ஏற்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பௌத்த மதம் சீர்குலையும் போது சகவாழ்வும் சீர்குலையும். சில அரச சார்பற்ற நிறுவனங்கள் சகவாழ்வை ஒழிக்க முயற்சி செய்கின்றன.

நாட்டில் எந்த மதத்திற்கும் விசேட இடம் கிடையாது என்ற நிலைமையை தோற்றுவிக்க முயற்சிக்கின்றன.

அநேக நாடுகளில் மதரீதியான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. எமது நாட்டில் அப்படியான நிலை கிடையாது. எந்த மதப் பிரிவினரும் சுதந்திரமாக வாழும் நிலை இந்நாட்டில் காணப்படுகின்றது என்றார். (அ-2)

# தெற்கில் தமிழர்கள் வாழலாம் என்றால் வடக்கில் ஏன் சிங்களவர்கள் வாழ முடியாது

இரண்டு இலட்சத்து 36 ஆயிரம் எண்ணிக்கையிலான தமிழ் மக்களுக்கு கொழும்பில் இருக்க முடியுமென்றால் ஏன் வடக்கில் சிங்கள மக்கள் வசிக்க முடியாது என ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள அவர்,

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் சுமார் 21 ஆயிரம் சிங்கள மக்கள் வசித்து வந்தார்கள். ஆனால் தற்போது அங்கு 674 பேரே வசிக்கின்றனர்.

ஏன் வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள , முஸ்லிம் மக்களுக்கு ஏன் பதிவு செய்து கொள்வதற்கு அதிகாரம் இல்லையா? வெள்ளவத்தை, தெஹிவளை, மட்டக்குளி உட்பட இடங்கள் தற்போது தமிழ் மயமாகியுள்ளன.

இதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கின்றோமா? பலம்பலப்பிட்டியவில் கூட்டமைப்பு காரியாலமொன்றை திறந்துவைத்துள்ளது. அதற்கு நாம் கல்லெறிந்துள்ளோமா? ஆனால் சிங்கள மக்கள் குடியேற்றத்தை செய்யும் போது கல்லெறிந்தார்களே எனக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கருத்தடை மருந்து இறக்குமதி வர்த்தகரை கைது செய்ய முடிவு

பாகிஸ்தானிலிருந்து சட்டவிரோதமாக கருத்தடை மருந்து கொண்டுவரப்பட்ட சம்பவம் தொடர்பில் வர்த்தகர் ஒருவரைக் கைது செய்வதற்காக சுங்கத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சுமார் 300 இலட்சம் ரூபா பெறுமதியான கருத்தடை மருந்துகளை சுங்கப் பிரிவினர் அண்மையில் கைப்பற்றினர்.

இதன்போது கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் பிரஜையிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து குறித்த வர்த்தகர் தொடர்பிலான தகவல்கள் தெரியவந்துள்ளன.

குறித்த வர்த்தகர் சட்டத்தரணி ஊடாக சரணடைவதாக தமக்கு அறிவித்துள்ளதாக சுங்க வருமான மேற்பார்வை சுங்கப் பிரிவின் பணிப்பாளர் மாலி பியசேன தெரிவித்துள்ளார். எனினும் அவர் சரணடையவில்லை.

சட்டவிரோத கருத்தடை மருந்து கொண்டு வரப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் பிரஜை நேற்று முந்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மற்றுமொரு பாகிஸ்தான் பிரஜையை கைது செய்வதற்கான விசாரணைகளையும் சுங்கப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர். அவர் தற்போது தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பகிடிவதைக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் சில பல்கலைக்கழகங்களில் பகிடிவதையுடன் தொடர்புடைய மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் மாணவர் விவகார பணிப்பாளர் நாயகம் கீர்த்தி சுரங்ஜித் மாவெல்லகே சுட்டிக் காட்டியுள்ளார்.

பகிடிவதை செய்வதாக உறுதிப்படுத்தப்படும் மாணவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# சமூகவளவாளருக்கும் கடனாளி ஒருவருக்கும் இடையில் அடிதடி

(யாழ்ப்பாணம்)

கிராமிய அபிவிருத்தி சங்கத்தின் சமூக வளவாளர் ஒருவருக்கும் கடனாளி ஒருவருக்கும் இடையில் அடிதடி இடம்பெற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜே/125 கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட வராகி கோவிலடி கிராமத்தில் அமைந்துள்ள கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் மீள் எழுச்சித் திட்ட சமூக வளவாளர் ஒருவருக்கும் கொக்குவில் கற்திட்டியைச் சேர்ந்த கடனாளி ஒருவருக்கும் இடையிலேயே இவ் அடிதடி இடம்பெற்றுள்ளதுஎனயாழ்ப்பாணம்பொலிஸார் தெரிவித்தனர்.

மீள் எழுச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன் நிதியை மீளப்பெறுவதற்கு கடனாளியின் வீட்டிற்கு சென்ற பெண் வளவாளருக்கும் கடனாளிக்கும் இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டு அடிதடி ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்தபெண் பொறுப்பாளருக்கு எதிராக கடனாளி கடந்த 29 ஆம் திகதி யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதேவேளை, இச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் இணக்க சபையிலும் நடைபெற்று வருகிறன.

மேலும் சமூகத்தோடு ஒன்றிணைந்த அமைப்புக்களுக்கும் சங்கங்களின் அதிகாரிகளுக்கிடையில் முரண்பாடு ஏற்படுவது ஆரோக்கியமானதொன்றல்ல.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான முரண்பாடுகள் ஏற்படா வண்ணம் உயர் அதிகாரிகள் கவனித்துக் கொள்ளல் வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-4)


# அந்தியேட்டி அழைப்பும் 31 ஆம் நாள் நினைவும்

அமரர் கந்தசாமி குகதாஸ்



தோற்றம்: 1956.07.09
மறைவு: 2013.05.04

கடந்த 04.05.2013 அன்று இறைவனடி சேர்ந்த அமரர் கந்தசாமி குகதாஸ் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 03.06.2013 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**
உடையாமணல் ஒழுங்கை.
வேம்படி. வல்வெட்டித்துறை.

(சி-3461)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் படத்துக்குத் தடை! மனம் மாறிய ஈழத்தாய்! உணர்வாளர்கள் கொந்தளிப்பு!

ஈழத்தமிழனத்தின் கறை படிந்த நாள் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி ஒட்டுமொத்த உலக நாடுகளும் இலங்கையுடன் கைகோர்த்து நின்று ஒன்றரை இலட்சம் தமிழர்களை படுகொலை செய்து விட்டு தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்ட நாள். அந்த யுத்தத்தில் தமிழின விடுதலைக்காக உயிர்நீத்த போராளிகள், பொதுமக்கள் அனைவரையும்



நினைவுகூர்ந்து அவர்களுக்காக உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் அஞ்சலி கூட்டம் நடத்துவது இந்த நாளில்தான். இந்த நாளில் பேரணிகள், பொதுக்கூட்டங்கள், அரங்ககூட்டங்கள் என அவரவர்களின் வலிமைக்கேற்ப அரசியல் கட்சிகளும் ஈழ ஆதரவு அமைப்புக்களும் கடந்த 4 ஆண்டுகளாக நினைவேந்தல் கூட்டங்களை எழுச்சியாகவும் உணர்வு பூர்வமாகவும் தமிழகத்தில் நடத்தின.

இந்த ஆண்டும் சென்னை புரசைவாக்கம் தாணா தெருவில் ஈழத்தமிழினத்திற்கான வீர வணக்க கூட்டத்தை 17 ஆம் திகதி நடத்தினார் வைகோ. இதில் பழ. நெடுமாறன், கொளத்தூர் மணி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். பிரபாகரன் படம் இல்லாமல் அந்தமேடை காட்சி தந்தது தடையை மீறி நடத்தினாலும் பிரபாகர்ன் படம் இல்லாமல் ஈழத்தமிழர்களுக்கான ஆதரவு கூட்டத்தையோ அஞ்சலிக் கூட்டத்தையோ நடத்த மாட்டார் வைகோ. அப்படிப்பட்டவர் கூட்டத்திற்கு தடை எதுவும் இல்லாத நிலையில் பிரபாகரன் படம் இல்லாமல் கூட்டம் நடத்துகிறார் என்றால், ஒருவேளை பிரபாகரன் படத்தை வைகோ கைவிட்டு விட்டாரா? என்கிற சந்தேகம் கூட்டத்தில் கலந்து கொண்ட உணர்வாளர்களிடம் எதிரொலித்தது.

இந்த நிலையில் இதே தாணா தெருவில் 18 ஆம் திகதி கூட்டம் வைத்திருந்த விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு அனுமதி மறுத்ததால் பெரியார் திடலில் உணர்வுபூர்வமாக நடத்தினார்.

நாம் தமிழர் கட்சியின் நான்காம் ஆண்டு ஆரம்ப விழாவையும் வீழ்வோம் என நினைத்தாயோ என்ற தமிழின எழுச்சிப் பொதுக்கூட்டத்தையும் அதற்கான பெரியாரிடம் பேரணியையும் கடலூரில் நடத்த திட்டமிட்டார் சீமான். இதற்கான அனுமதியை பொலிஸாரிடம் கேட்டிருந்தார் கடலூர் மாவட்ட நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் கடல்தீபன். எனினும் இது குறித்து எந்த முடிவும் எடுக்காமல் 15 ஆம் திகதி கூட்டத்திற்கும் பேரணிக்கும் தடை என்றனர் பொலிஸார். இது குறித்து தீபன் தெரிவிக்கும் போது, இதனால் அவசரம் அவசரமாக நீதிமன்றில் வழக்குப் போட்டு பொதுக்கூட்டத்திற்கு அனுமதி வாங்கினோம். இதனையடுத்து கடலூர் முழுக்க தேசியத் தலைவர் பிரபாகரன் உருவ காட்சிப் பதாகைகள் 70 இடங்களில் வைத்தோம். ஆனால், 17 ஆம் திகதி இரவு இந்த படங்களையெல்லாம் அகற்ற வேண்டும். "நீங்கள் எடுக்கலைன்னா நாங்களே எடுத்துவிடுவோம் என்று மிரட்டி பிரபாகரன் படத்தை பொலிஸார் அப்புறப்படுத்தினர்" என்றார். பொதுக் கூட்டத்திற்கு தந்த அனுமதிக்கும் தடை விதிக்கப் பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவாக பொதுக் கூட்டம் போட அனுமதிக்க முடியாது என்று மிரட்டலாகத் தெரிவித்தார்கள். இதனால் கூட்டத்தை கல்யாண மண்டபத்தில் வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தக் கூட்டத்திற்கு ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் யாசின்மாலிக்கை சீமான் அழைத்து வந்திருப்பதால்



கடலூரில் எங்கு பார்த்தாலும் பொலிஸ் தலைகளாகவே தென்பட்டன.

வடக்கு மண்டல ஐ.ஜி.கண்ணப்பன் எஸ்.பி.அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு உத்தரவுகளைப் போட்டுக் கொண்டே இருந்தார். காஞ்சிபுரம், திருவண்ணாமலை விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் கூட்டம் நடைபெறும் திருமண மண்டபத்தை முற்று கையிட்டிருந்தனர். கூட்டத்தில் பேசிய சீமான், தலைவர் பிரபாகரன் படத்திற்கு தடையாம். அவரது படத்திற்கு இப்போது தடை போடுகிற ஜெயலலிதாவுக்கு உங்களுக்காக மைக் பிடித்து வாக்கு சேகரித்தபோது என் பின்னால் பிரபாகரன் படம் இருந்ததே அப்போது தெரியவில்லையா? இனி பிரபாகரன் படத்தை சட்டைப்பையில் வைத்துக் கொண்டு வெளியே நாம் வரவேண்டும். உடம்பில் பச்சை குத்திக் கொள்ளுங்கள். பிரபாகரன் படத்திற்கு தடை போட்டவர்களின் படங்களை பொதுக் கழிப்பிடத்தில் ஆண், பெண் படத்திற்கு பதிலாக மாட்டி வையுங்கள் என்று வீராவேசமாக பேசினார் சீமான்.

சென்னை மெரினா கடற்கரையில் தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு கூடியது. 5.30 மணிக்கு வானம் மெல்ல கவியத் தொடங்கிய நிலையில் திடீரென்று வந்த மாணவர் கூட்டமைப்பினர் தமிழீழத்திற்கான ஆதரவு முழக்கங்களை எழுப்பியவாறே திரண்டு வ,ர அவர்களிடம் உங்களுக்கு அனுமதி இல்லை போய்விடுங்கள் என்று பொலிஸ் எச்சரிக்கவும் இதோபோய் விடுகிறோம் சேர் என்று சொல்லிக் கொண்டே திடீரென்று மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர். இதனால் கோபம் அடைந்த பொலிஸார் உடனே அவர்களை கைது செய்து வானில் ஏற்றி ஒருமண்டபத்தில் அடைத்து பின்னர் நள்ளிரவில் அவர்களை எச்சரித்து அனுப்பினர்.

வேல்முருகனின் தமிழக வாழ்வுரிமைக் கட்சி நடத்தவிருந்த சீர்காழி கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் பண்ருட்டி அருகே உள்ள புலியூர் தோட்டத்தில் அஞ்சலி கூட்டத்தை நடத்தினார் வேல்முருகன்.

அதேபோல் மயிலாடு துறையில் பேரணியும் பொதுக்கூட்டத்தையும் நடத்த அனுமதி பெற்றிருந்த உலகத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்திற்கும் சோழிங்க நல்லூரில் பொதுக்கூட்டமும் பேரணியும் நடத்தவிருந்த தமிழர் எழுச்சி இயக்கத்திற்கும் கடைசி நேரத்தில் அனுமதி மறுக்கப்பட்டதால் திருமண மண்டபங்களில் கூட்டத்தை நடத்தி முடித்துள்ளனர்.

இப்படி தமிழின உணர்வாளர்களின் கூட்டத்திற்கும் பிரபாகரனின் படத்திற்கும் ஜெ. அரசு தடை விதித்துள்ள நிலையில் புதுக்கோட்டை ஆலங்குடி தொகுதியிலுள்ள கொத்தமங்கலத்தில் ம.தி.மு.க. ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அ.தி.மு.க., எம்.எல்.ஏ. கு.ப. கிருஷ்ணன், பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் படத்துக்கு அஞ்சலி செய்து விட்டு கடந்த மே மாதம் 18 ஆம் திகதி உலகத் தமிழர்கள் ஒன்றுபட வேண்டிய நாள். இந்த நாளில் உறுதி ஏற்போம்; ஒன்றுபடுவோம் என்றார். கு.ப.கிருஷ்ணன் இப்படி பேசியது கண்டு அப்பகுதி அ.தி.மு.கவினர் மத்தியில் திடீர் பரபரப்பு ஆரம்பித்தது.

ஈழத்தாய் என்று ஜெயலலிதாவை உணர்வாளர்கள் சிலர் போற்றி மகிழும் நிலையில் ம.தி.மு.க. நடத்திய நிகழ்ச்சி மற்றும் வைகோ கலந்து கொள்ளும் நிகழ்ச்சி தவிர ஏனையவர்கள் நடத்திய கடந்த மாதம் 18 ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்ச்சிக்கும் பிரபாகரன் படத்திற்கும் ஜெ. அரசு தடை விதித்து கருத்து தெரிவிக்கும் போது, கடந்த மாதம் 18 ஆம் திகதி உலகத் தமிழர்களின் எழுச்சி தினம். இந்த நாள் இனி வரும் காலங்களில் தமிழர்களின் எழுச்சி நாளாக மாறும். ஒவ்வொரு வருடமும் அதற்கான வலிமை கூடிக்கொண்டே போகின்றது. அதனை தடுக்கும் முகமாகவே இந்த அடக்குமுறையை தமிழக அரசு கட்டவிழ்த்து விட்டிருக்கிறது என்கிறார். தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் அனுமதி மறுப்பு என்பது ஜீரணிக்க முடியவில்லை என்கிறார்.

தமிழர் எழுச்சி இயக்கத்தின் தலைவர் வேலுமணி, தமிழக அரசின் இரட்டை வேடத்தை இது காட்டுகிறது என்றார். இது குறித்து சீமான் பேசியபோது சட்ட மன்றத்தில் இவர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தை வலியுறுத்தும் வகையில்தான் இந்த நினைவேந்தல் கூட்டம் நடத்தவிருந்தது.

அதற்கு தடை என்றால் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கும் நினைவேந்தல் கூட்டங்களை நடத்தியிருக்கிறோம். அப்போதெல்லாம் பிரபாகரன் படத்தை அனுமதித்தீர்களே? வைகோ நடத்துகிற கூட்டத்திற்கு அனுமதி எங்களைப் போன்றவர்களின் கூட்டத்திற்கு தடை என்றால் உங்களிடம் உள்நோக்கம் இருக்கிறது. என்மீது வழக்குகள் போட்டிருக்கிறார்கள். சட்டத்தை நான் மீறியிருந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கட்டும். அதை சந்திக்க தயாராக இருக்கிறான் இந்தச் சீமான் என்றார் அழுத்தமாக.

திருமாவளவன் தடை குறித்து தெரிவித்த போது, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும் ராஜபக்ஷவுக்கு எதிராகவும் சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு இப்போது வீர வணக்க அஞ்சலிக் கூட்டத்திற்கு தடை விதிப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ஈழ ஆதரவு நிலையிலிருந்து தமிழக அரசு விலகிச் செல்கிறதா என்கிற சந்தேகம் எழுகிறது.

தாணா தெருவில் ம.தி.மு.கவுக்கு அனுமதி. எங்களுக்கு மறுப்பு. முதலில் போக்குவரத்தை காரணம் காட்டினார்கள். பின்னர் பிரதி ஆணையாளர் புவனேஷ் வரியிடமிருந்து ஒரு கடிதம். அதில் மரக்காணம் கலவரத்தைத் தொடர்ந்து சட்ட ஒழுங்கு பிரச்சினை எழுவதால் உங்கள் கூட்டத்துக்கு அனுமதி இல்லை என்றார்கள். ஒரே நிகழ்ச்சிக்கு இரண்டு தடைகள். பொலிஸாரின் செயற்பாட்டில் உள்நோக்கம் இருக்கிறது. ஈழத்தமிழின போராட்டம் குறித்து சின்ன நடவடிக்கையை கடந்த தி.மு.க. அரசு எடுத்தாலும் லபோ திபோ என்று குதித்த தமிழ்த் தேசியவாதிகள் இந்த தடைக்கு ஏன் மௌனம் சாதிக்கிறார்கள் என்றார்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் நிறுவுநர் பேராசிரியர் சுப. வீ. மே மாதம் 17, 18 ஆம் திகதிகளில் நம் தமிழ் உறவுகள் பல்லாயிரக்கணக்கானோர் அழிக்கப்பட்டதை நினைவுகூரும் கூட்டங்களை எந்த வன்முறையும் இல்லாமல் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், சென்னையில் நடந்த ஒரே ஒரு கூட்டத்தைத் தவிர ஏனைய எல்லா கூட்டங்களுக்கும் தடை விதித்துள்ளது இந்த அரசு. ஒருபுறம் ஈழத்தை ஆதரிப்பதாக தீர்மானம்; மற்றொரு புறம் கண்ணீர் வீட்டு அழுவதற்கும் தடை இது.

ஜெயலலிதா அம்மையாரின் இயல்பான இரட்டை முகம். தமிழ் வழி கல்வியை மறைத்து விட்டு தமிழ்த்தாய்க்கு சிலை என்று சொல்லவில்லையா என்ன? மணல் திட்டுக்களை அகற்றலாம்



என பேசிவிட்டு ராமர் பாலம் புராதன சின்னம் என்று இன்றைக்கு அவர் சொல்லவில்லையா என்ன? இரட்டை வேடங்கள் இந்த அம்மையாருக்கு பழக்கமான ஒன்றுதான். இதனை இனியாவது உணர்வாளர்கள் உணர்வார்கள் என நம்புகிறேன் என்றார்.

தமிழீழம் குறித்த எழுச்சிகள் தமிழகத்தில் அழுத்தமாக பதிவதை மத்திய அரசு விரும்பவில்லை. அதன் ஒரு முயற்சியாக தமிழக அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்கிறார்கள் தமிழக பொலிஸார்.

தமிழகத்திலிருந்து வெளிவரும் நக்கீரன் இதழிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இமயம் தொட...

அண்டவெளியில்
நீ சிறகு விரித்து
பறப்பதாய் எண்ணிக்கொள்
இந்த உலகு என்னுடையது
என்னுடைய உலகை
எனக்குப்பிடித்திருக்கிறது
என்பதில் திடமாய் இரு
தாயை நேசிப்பது போல்
தாய் நாட்டையும் நேசி
நீ வீரத்திருமகனாவாய்

மாவை நா.கஜேந்திரன்

## காத்திருப்பு

பிறை நுதலால்- உன்
பின்னால் என்னை அலையவைத்தாய்
கயல்விழியால் என் நெஞ்சில்
காதல் அரும்பக வைத்தாய்
செவ்விதழ் சொல்லடிகளால் என்னை
சிதறடித்தாய்
கபடமற்ற வெண்சிரிப்பால்
களைந்து விட்டாய் என் மனதை
மகராசி உன் குறும்பால் என்
மனதை திருடிவிட்டாய்
இல்லையெனும் உன் இடையால்
இதயத்தை நீ பறித்து விட்டாய்
கருங்கூந்தல் கண்டநாளாய்
கண்ணுறக்கம் மறந்தேனடி
என்னவளே எடி என் உயிரே
பிரம்மனின் பிரத்தியேக படைப்பு நீ
கம்பன் இருந்தால் உன்னை
கவிபாடியே களைத்திருப்பான்
பறந்து வந்துவிடு காதல் வானில்
பருந்து போல் வாழ்விலும் சிறகடிப்போம்

எம்.ஆர்.கலீபன், புத்தூர்



## தென்னை மரக்கிளியின்...

வள்ளிபுனத்து
தென்னைமரமே
என் இருப்பிடமே
உனைக்காணாது
தவிக்கின்றேன்
உன்னில் நான்
இட்டுவைத்த முட்டைகளை
தேடுகின்றேன்
உன்னில் வசிக்கும்போது
எவ்வளவு சுதந்திர
காற்றைச் சுவாசித்து
இருக்கின்றேன்
வள்ளிபுனத்து
தென்னைமரமே
என் உறைவிடமே
நீ நின்ற சுவட்டை
தேடுகின்றேன்
இறக்கைகளை
அடித்துப் பார்க்கின்றேன்
மகிழ்வு
புலரவில்லையே
பொழுது
விடியவில்லையே

ஆ.முல்லை திவ்யன்

## எதுவும் மறையவில்லை

மீனவன் வாழ்விலே
சோகங்கள் நிறைய்வுண்டு
கண்ணீரின் வழிதனிலே
நிஜங்கள் பலவுண்டு
புத்தகம் பிள்ளை சுமப்பதற்காய்
பகலிரவாய்
கடலோடு பாடுபடும்
குடும்பத் தலைவன் உண்டு
நேற்றைய உணவை
இன்றைய சோற்றில்
கலந்து உண்ணும்
குடும்பத் தலைவியுண்டு
விதிப்பிழைத்த வாழ்விலே
சதி நிலையை எண்ணி
இழப்புக்கள் கண்ட
துயரமுண்டு
கடலோடு வாழ்ந்து
காணாமற்போன
இனிய உறவுகளின்
நினைவுண்டு

மருதங்கேணியூர்
வே.வே.அகிலேஸ்வரன்

## ஏமாற்றம்

தாகத்துடன் வரும்வேளை
தண்ணீர்த் தடாகம் தெரிகிறதே!
வேகத்துடன் ஓடிவந்து
வேதனை தீர்க்கத் குடிக்கிறதே!
சாபமேதோ தெரியவில்லை
சதிகள் பல நடக்கிறதே!
பாவப்பட்ட ஜென்மம் இது
பார்த்தபின்னே தெரிகிறதே
கானல் நீரது என்று
காலமேதோ ஓடிடுதே!!
காட்சியாவும் நடக்கிறதே
பாலம் போட்டு கரைசேர
பாதியில் அதுவும் உடைந்திடுதே!!
ஓலமிட்டுப் பயனேது
ஓடும் விதியும் அதுவன்றோ!
ஓலவாழ்வும் நிலையில்லை
ஞானிகள் தேவவாக்குமதுவன்றோ!!

பொ.புனிதன், வரியப்புலம்



# கவிதைக் கலசம்



## தடையில்லை ஊனம்

மனிதம் மரித்துவிட்ட
நவீன உலகமிது
வடுக்களைத் தாங்கி
களத்தில் நின்று
சாதனை நிலை நாட்டப்
புறப்படும்
நாளைய வீரர்கள்
இவர்கள்தான்...!

உதயம் ரூபன்
நயினை

## ஊனம்... தடையல்ல

ஊனம் ஒரு குறையல்ல-கண்ணா
உன் ஊக்கமதில் ஊனம்
ஒரு தடவையல்ல...
நீ சாதிக்க நினைப்பது
போட்டியில் அல்ல
இவ்வுலகின் மேல்
நீ கொண்ட வேட்கையில்

ஆர்.றொட்ரி பிரசாந்
கொய்யாத்தோட்டம்

## வெற்றிப் படியை நோக்கி முன்னேறிடு முயன்றிடு

கடவுள் படைத்த இவ்வுலகில்
அனைவரும் சமமே என்ற
கொள்கைக்கு எதிர்மாறாக
குறைகளை பேதம் காட்டும் இவ்வுலகில்
நீங்கள் எடுக்கும் முயற்சியை
நான் பாராட்டுகின்றேன்- ஆனாலும்
படைகள் ஊடாக தடைகள் வந்தாலும்
எதிர்நீச்சல் போட்டு உங்கள்
வெற்றியை நிலைநாட்டிட
இப்போதே இன்றே முயன்றிடுங்கள்

ம.அ.மரிய வெனிற்றா
சாவகச்சேரி

# மௌனத்தின் தேடல் - 156

## வாழ்த்துகிறோம்

கள்ளம் கபடமற்ற
வெள்ளை உள்ளத்து
பிஞ்சுப் பாலகர்களே!
கல்வியுடன் விளையாட்டும்
எங்கள் இரு கண்கள்
பல்கலைகளும் கற்று
நீங்கள் நீண்ட காலம்
வாழ்க வாழ்கவென
மனமார வாழ்த்துகிறோம்

ஆ.கஜவேந்தன்
யா/மட்டுவில் கமலாசனி
வித்தியாலயம்

## குறையல்ல!

சோதனைகள்தான்
வாழ்க்கையின் சாதனைகள்
என்று எண்ணி
தடம் பதிக்க வந்திருக்கும்
பச்சிளம் பாலகரே-ஊனம்
என்பது ஒரு குறையல்ல
உடல் மட்டும்தான்- ஊனம்
எம் உள் இருக்கும்
ஆத்மா! ஊனமில்லை

எஸ்.பாஸ்கரன்
சண்டிலிப்பாய்

## ஊனமாயினும் தாழ்ந்து விடோம்

ஊனமாய் பிறந்தாலும்
ஊனமாய் ஆனாலும்- மீண்டும்
உடல் உள வலுப்பெற்று
நாமும் சரிநிகர் சமமென்று
இவ் உடல் வலுப் போட்டியாலே
இவ் உலகிற்கு எடுத்துரைப்போம்

ந.[illegible]
கந்தர்மடம்

## குறையேதும் இல்லை

கடவுளின் படைப்புதான் இப்படி
ஒரு குறை என்றாலும் மனிதனின்
படைப்புக்களால் அக்குறையைத்
தீர்த்து கடவுள் உங்களை
மகிழ்விக்கிறான் மகிழுங்கள்

செ.மிதுஷா
தம்பசிட்டி

## நாளை நம் வசம்

போட்டி உலகில் நாம் ஒன்றும்
சளைத்தவர்கள் அல்ல என
சவாலிடும் இம் மழலைகளின்
மனங்கள் ஒன்றும் ஊனமில்லை
நாளை நிச்சயம் இவர்கள் வசமே

செ.சியாமளா
நெல்லியடி

## தன்னம்பிக்கை

நம் உடலில்
ஊனமென்ற
தடைக்கற்களை
படிக்கற்களாக
மாற்றி நாம்
விளையாட்டில்
சாதித்துக்
காட்டுவோம்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## யார் குற்றம்?

புன்னகையோடும் உற்சாகத்தோடும்
விளையாட்டுப்போட்டிக்கு தயாராகும்
இச்சிறுவர்களின் அவயவங்களை
ஆண்டவன் படைக்கும்போது
செய்த குற்றமா அல்லது
காலம் செய்த கோலமா?

லீலா சிவவடிவேல்
இணுவில் மேற்கு

## மனவலிமையே மாவீரம்

ஏமாற்றம் முற்றுப்புள்ளியல்ல என
வெற்றிப்பாதையில் நிற்கும்
மாற்றுத் திறனாளிகளின்
சற்றும் சளைக்காத மனவலிமையை
கற்றுத்தேர்ந்தோரும் மற்றோரும்
உற்று நோக்கி போற்றி ஏற்றி
உற்சாகமூட்டச் செய்யும்
தற்துணிவால் இவர்கள்
ஏற்றம் பெற வேண்டுகின்றனர்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## வாழவைப்போம்

ஊனமுற்ற பிள்ளைகள் மனங்களில்
மற்றவர்போல் தாமில்லையே
என்ற தாழ்வு மனப்பாங்கை
வளரவிடாது ஏற்ற பயிற்சிகளிலும்
விளையாட்டு நிகழ்ச்சிகளிலும்
பங்கேற்க வைத்துப் பரிசு வழங்கி
உற்சாகப்படுத்தி உயர்த்திவைத்து
சமூகத்தோடு இணைத்து
வாழவைப்போம்

துரை தென்மட்டுவில்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -157



## அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.



எனும் முகவரிக்கு 05.06.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் பதிவை வலியுறுத்தி நேற்று துண்டுப் பிரசுர விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் தினமன்று யாழ்ப்பாண தேர்தல்கள் அலுவலகம் "மக்கள் பலமே ஜன நாயகத்தின் பலம், வாக்குரிமையே உங்கள் பலம்" எனும் தொனிப் பொருளில் வாக்காளர் பதிவை வலியுறுத்தி யாழ்.நகரில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இம் மாதம் முதலாம் திகதி (நேற்று) தேசிய வாக்காளர் தினமாகும். இத் தினத்திலேயே யாழ்ப்பாண தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் துண்டுப்பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் விநியோகித்த துண்டுப் பிரசுரத்தில் நீங்கள் 2013 ஆம் ஆண்டு ஜுன் 01 ஆம் திகதியில் 18 வயது பூர்த்தியானவரா? இலங்கை பிரஜையா? தகைமை கோரும் முகவரியில் நீங்கள் சாதாரண வதிவினை கொண்டுள்ளீர்களா? அவ்வாறெனில் உங்களை வாக்காளராக பதிவு செய்து விட்டீர்களா? இல்லையெனில், உங்கள் கிராம அலுவலர் விநியோகிக்கும் விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தி, கொடுப்பதன் மூலம் உங்களை வாக்காளராக பதிவு செய்து கொள்ளுங்கள்.

இத்தகவலை உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கும் தெரியப்படுத்தி அவர்களின்




வாக்காளர் பதிவுவையும் உறுதிப்படுத்துவதன் மூலம் ஜனநாயகத்திற்குப் பலம் சேர்ப்போம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத் துண்டுப் பிரசுர விநியோகத்தில் யாழ்ப்பாணம் தேர்தல் திணைக்களத்தைச் சேர்ந்த 10 இற்கும் மேற்பட்ட ஆண், பெண் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டிருந்தனர்.

தனியார் கல்வி நிலைய மாணவர்கள், வர்த்தகர்கள், பயணிகள், பொதுமக்கள் என அனைவருக்கும் இத்துண்டுப் பிரசுரம்வழங்கப்பட்டது.

மேலும் இத் துண்டுப் பிரசுர விநியோகத்தின் போது உங்களை வாக்காளராக பதிவு செய்து உங்கள் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க செய்யுங்கள் என அறிவுரையும் மக்களுக்கு வழங்கப்பட்டது.

முற்பகல் 9.45 மணியளவில் ஆரம்பமாகிய இத் துண்டுப்பிரசுர விநியோகம் முற்பகல் 11.மணிவரை நீடித்திருந்தது. (அ-4)

# தொழில் வாய்ப்புகளுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டல் செயலமர்வு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினரால், எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை இலக்கம் 153, பலாலி வீதி,கந்தர் மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள சிகரம் நிறுவனத்தின் விசேட மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் இலவசமாக கலந்து கொள்ள விரும்புபவர்கள் இம் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் 0773616798 என்ற தொலைபேசியினூடாக அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

கருத்தரங்குக்கு வருகை தருவோர் சுய விபரக்கோவை, சான்றிதழ்கள் என்பன வற்றையும் எடுத்து வர வேண்டும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.( அ)

# சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கை சேர்ந்த சின்னத்துரை கோபிகிருஷ்ணன் அண்மையில் சமாதான நீதவானாக நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சால் நியமிக்கப்பட்டு யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்து கொண்டார். இவர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். (அ)

# தெல்லிப்பழையில் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தால் நடத்தப்படவுள்ள அலுமினியம் பொருத்துதல், கையடக்க தொலைபேசி திருத்துதல், அழகுக் கலையும் மனைப் பொருளியலும், தோற் பொருள் உற்பத்தி ஆகிய பயிற்சி நெறிகளுக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை கிராமசேவகர் அலுவலரிடம் பெற்று இம்மாதம்7 ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்ப டைக்குமாறு தெல்லிப்பழை பிரதேச செயலக வட்டாரம் அறிவித்துள்ளது. (அ-2)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

யாழ்.மாநகர சபையினரால் வண்ணார் பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பு மருந்து (ஏ.ஆர். வி.) ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய, நாளை திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும், 11 மணி தொடக்கம் ஒரு மணி வரை கே.கே.எஸ்.வீதி, கலைமகள் சனசமூக நிலையத்திலும், மறுநாள் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை , பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கையிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் ஒரு மணி வரை பிறவுண் வீதி 1 ஆம் ஒழுங்கையிலும், வைத்து தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

தொடர்ந்து 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை நாவலர் வீதி அன்னசத்திர ஒழுங்கையிலும், 11 தொடக்கம் ஒரு மணிவரை மணிக்கூட்டு ஒழுங்கையிலும், மறுநாள் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை சபாபதி ஒழுங்கையிலும் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அ.எ.ஞானஜோதி அறிவித்துள்ளார். (அ)



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தாய்லாந்து பிரதமர் யிங்லக்ஷினவாத்ரா சிறப்புரையாற்றுவதற்காக ஸ்ரீஜெயவர்தனபுர கோட்டேயிலுள்ள நாடாளுமன்றத்திற்கு நேற்றுமுன்தினம் வருகைதந்தபோது...

# மாத்தளை மனித புதைகுழி பற்றிய அறிவித்தல்களை பிரசுரிக்குக

## நீதிமன்றம் உத்தரவு

மாத்தளை அரச மருத்துவமனை வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதை குழியுடன் தொடர்புடையவர்கள் என்று கருத்தப்படும் காணாமல் போனவர்களின் உற வினர்களைத் தெளிவுபடுத்தும் பொருட்டு, அதிகார பூர்வ அறிவித்தல்களை பத்திரிகைகளில் பிரசுரிக்குமாறு மாத்தளை மஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, தனது வேண்டுகோளின்படி, மாத்தளை நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்ததாக, காணாமல் போனோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

1988 தொடக்கம் 89 ஆண்டு காலப் பகுதியில் காணாமற் போயுள்ள 24 நபர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தாம் நீதிமன்றத்தில் மனுக்களை சமர்ப்பித்ததாகவும் இந்தக் காலப்பகுதியில் மாத்தளைப் பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளதாகவும், சட்டவிதிகளின் பிரகாரம் பொலிஸார் இந்தப் புதைகுழி தொடர்பான காணாமல் போனோரின் உறவினர்களை தெளிவுபடுத்தும் வகையில் பத்திரிகை அறிவித்தல்களை இதுவரை வெளியிடவில்லை ஏன்பதையும் தாம் நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டியதாகவும் சட்டத்தரணி கூறினார்.

இந்த அறிவித்தல்களை மூன்று மொழிகளிலும் பத்திரிகைகளில் வெளியிடுமாறு மாத்தளை நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். வழக்கின் அடுத்த கட்ட விசாரணை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள் ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த குருவின் தீக்குளிப்பு ஹஜ்பெருநாளை குழப்புவதற்கு தூபமிடும்-அமைச்சர் ஹக்கீம்

(கொழும்பு)

**அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளுவதற்காக இப்போது எடுக்கப்படும் பல முயற்சிகளில் ஒன்றாகத்தான், கண்டியில் நடைபெற்ற பௌத்த பிக்குவின் தீக் குளிப்புச் சம்பவத்தை நோக்கவேண்டியுள்ளது. ஒவ்வொரு முறையும் ஹஜ்காலத் தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. இவ்வாறு நீதியமைச் சரும் மு.கா. தலைவருமான ரவூப் ஹக்கிம் தெரிவித்துள்ளார்.**

கண்டியில் பிக்கு ஒருவர் தீக் குளித்த சம்பவத்தையடுத்து பௌத்த பிக்குகள் ஒரு சிலரால், முஸ்லிம் பிரதேசங்கள் பலவற்றிலுள்ள இறைச்சிக் கடைகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து அவர் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டியில் அண்மையில் நடைபெற்ற பிக்கு தீக்குளிப்புச் சம்பவத்தால் புனிதநோன்பு ஹஜ் பெருநாள் கடமைகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டுவிடக்கூடாது. அதில் அரசு அக்கறை செலுத்த வேண்டும். ஒவ்வொரு முறையும் ஹஜ்காலத்தில் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான துரதிர்ஷ்ட சம்பவங்கள் நடைபெற்று வருகின் றன.

பௌத்த மேலாதிக்கவாதிகளின் அண்மைக்கால செயற்பாடுகள் மீண்டும் தலைதூக்கியிருப்பதன் பின்னணி குறித்து அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அரசை நெருக்கடிக்குள் தள்ளுவதற்காக இப்போது எடுக்கப்படும் பல முயற்சிகளில் ஒன்றாகத்தான் கண்டியில் நடைபெற்ற சம்பவத்தையும் நோக்கமுடியும்.

ஒவ்வொரு வருடமும் ஹஜ் காலத்திலே தான் இவ்வாறான பிரச்சினைகள் வந்தவண்ணம் உள்ளன. ஆதலால் நாங்கள் மிகவும் நிதானமாக இந்த விடயங்களைக் கையாளவேண்டியுள்ளது.

குறிப்பாக அக்காலத்தில் எது



விதபாதிப்புகளும்ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இது குறித்து அரசாங்கத்தின் உயர் மட்டத் தரப்புகளின் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# குப்பைகளை வேறுபடுத்தி சேகரிக்க புதிய திட்டம்

## கொழும்பு மாநகரசபை தீர்மானம்

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் குப்பை கூழங்களை வகைப்படுத்தி சேகரிக்கும் புதிய திட்டமொன்று நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளதாக கொழும்பு மாநகரசபை மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரி வித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்திட்டத்துக்கு அமைய மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய குப்பைகளைத் தனியாக வேறுபிரித்து வழங்கினாலே குப்பைகளைச் சேகரிக்க முடியும். கொழும்பு நகரில் சேரிக்கப்படும் குப்பைகளைக் குறைக்கும் வகையிலேயே இத்திட்டம் அறிமுக்கப்படுத்தப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக், கண்ணாடி, பேப்பர்கள் போன்ற மீள்சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய குப்பைகளை வகைப் பத்தி, அவற்றை தனியாக வைப்பதற்கு கொழும்பு நகரிலுள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் வேறான பை வழங்கப்படும்.

அந்தப் பைக்குள் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய குப்பைகளை இட வேண்டும். அவற்றில் சேகரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்து காசாக்கும் பொறுப்பு அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டவுள்ளது.

கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் நாளாந்தம் 700 தொன் முதல் 750 தொன் வரையிலான குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. இவ்வற்றில் 20 சதவீதத்துக்கும் அதிகமான குப்பைகள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப் படக் கூடியவை.

எனவே, குப்பைகள் உருவாகும் சமையல் அறியிலிருந்தே அவற்றைத் தரம்பிரித்து மீள்சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய குப்பைகளை வேறாக்க முடியும். இதன் ஊடாக சேகரிக்கப்படும் குப்பைகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.

இந்தப் புதிய திட்டம் தொடர்பாக கொழும்பு மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட அனைத்து வீடுகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இது பற்றிய ஸ்டிக்கர்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# நிர்வாகத் தெரிவு

(மண்டைதீவு)

மண்டைதீவு பூம்புகார் கண்ணகை அம்மன் ஆலயத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய, புதிய நிர்வாகத்தின் விபரங்களை பரிபாலன சபையினர் அனுப்பி வைத்துள்ளனர். அவை வருமாறு, தலைவர் வீ.சோமசுந்தரம், உபதலைவர் பொ.சபாநாயகம், செயலாளர் த.தர்மகுலேந்திரன், உப செயலாளர் செ.அ.சிறிபத்மராசா, பொருளாளர் க.கணேஸ், போஷகர் ந.நடேசமூர்த்தி, கணக்காய்வாளர் க. பரமானந்தம், ம.சசிநாத் ஆகியோருடன்,

நிர்வாக உறுப்பினர்களாக, ந.நடனகோபால், செ.யோகேஸ்வரன், செ. மதியழகன், க.பாவேந்தன், பே.சுசியந்தன், சீ.மகேந்திரராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)

# இலங்கையின் அபிவிருத்தியில் தாய்லாந்துக்கு நேரடி பங்கு

## அமைச்சர் நிமால் புகழாரம்

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக அபிவிருத்து செய்யும் ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு, தாய்லாந்து நேரடிப் பங்காளராக இருந்து ஒத்துழைத்து வருவதாக அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து பிரதமர் ஜின்லக் ஷினவாத்ராவின் வருகையையொட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வெளிநாட்டு அரச தலைவர் ஒருவர் எமது பாராளுமன்றத்தில் உரையாற்றுவது மிக அரிதான விடயமாகும்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், கல்வியறிவு என்பவற்றில் சிறந்த பலனைப் பெற்று உங்கள் தலைமைத்துவத்தின் கீழ் தாய்லாந்து தினமும் அபிவிருத்தி கண்டுவருகிறது.

தாய்லாந்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நீங்கள் வழங்கும் தலைமைத்துவத்தையும் வரவேற்கிறோம்.

இலங்கையில் பௌத்த மதம் தேய் ந்து வரும் காலகட்டத்தில் தாய்லாந்தில் இருந்து வந்த பிக்குகளே புத்த மதத்தை கட்டியெ முப்பியதாக வரலாறு கூறுகிறது. 2012 ஆம் ஆண்டு உங்களை எமது ஜனாதிபதி சந்தித்த போது கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் விவசாய, மீன்பிடி, கல்வித்துறை ஒத்துழைப்பிற்கு காரணமாகின. இலங்கையின் முன்னேற்றத்திற்கும் இவை பெரிதும் உதவின.

ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கையை முன்னேற்றும் ஜனாதிபதியின் முயற்சியில் தாய்லாந்தும் நேரடிப் பங்காளராக இருக்கி றது.

30 வருட யுத்தத்தின் போது நாம் அனுபவித்த கஷ்டங்களையும் தற்பொழுது நாடு அடைந்து வரும் மீள்கட்டுமான நடவடிக்கைகளையும் வரவேற்று 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஐ.நா.மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு தாய்லாந்து வழங்கிய ஒத்துழைப்பை நன்றியுடன் நினைவுகூருகிறேன் என்றார். (அ-2)

# அதிசொகுசு கடுகதி புகையிரத சேவை

(கொழும்பு)

கொழும்புக்கும் கண்டிக்கும் இடையில் அதிசொகுசு கடுகதி புகையிரத சேவையொன்று நாளை முதல் ஆரம்பித்து வைக்கப்படவிருப்பதாக போக்குவரத்து துறை அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்தார்.

1864 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதற்தடவையாக கண்டிக்கும் கொழும்புக்கும் இடையில் அதிசொகுசு புகையிரத வேவை ஆரம்பிக்கப்படவிருப்பதாக அமைச்சர் கூறினார்.

மேலும் ஒருவழிப் போக்குவரத்துக்கு ஒவ்வொருவரிடமும் தலா 500 ரூபா அறவிடப்படும் என்று புகையிரதத் திணைக்களத்தின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்தின் வடமாகாண நிதியில் அமைக்கப்பட்ட புதிய வித்தியாலயத்தின் கட்டடத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இக் கட்டடத்திறப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், ஹில்டன் உணவக விடுதி உரிமையாளர் திருகுமார் நடேசன், பாடசாலை அதிபர் ம.நற்குணராசா ஆகியோர் பெயர் பொறிக்கப்பட்ட நினைவுக்கல்லை திரை நீக்கம் செய்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார, உ.சாளின்)

# குறும்பட வெளியீடும் அறிமுக விழாவும்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு முகிலனின் தோட்டி குறும்பட வெளியீடும் சாம்பல் குறும்பட அறிமுக விழாவும் எதிர் வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.45 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இந் நிகழ்வுகள் வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் என். ஶ்ரீதேவி தலைமையில் இடம் பெறவுள்ளதோடு, இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் ல.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக, மகளிர் அபிவிருத்தி நிலையப்பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன், யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா, வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் இரா.செல்வவடிவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவவிருந்தினர்களாக ஆளுநர் செயலக உதவிச் செயலாளர் ஜே. எக்ஸ் செல்வநாயகம், வடமாகாண திடைப்பட சங்கத் தலைவர் ந.கேசவராஜா, எழுத்தாளர் ராஜ்குமார் ரஞ்சன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தொடர்ந்து தோட்டி குறும் படத்தின் முதல் இறுவெட்டை ப.சிவபாஸ்கரன் பெற்றுக் கொள்ள, ஆய்வுரையை ந.வித்தியாதரன் ஆற்றவுள்ளர்.

சாம்பல் குறும்படத்தின் முதல் இறுவெட்டை ரி. திலகராஜ் பெற்றுக் கொள்ள, ச.லலீசன் ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டெருமைப் பாளி



ஆன்மீகம் 22

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

31 ஆம் திகதியின் தொடர்ச்சி...

காலைக்கடன்களை முடித்துக் கொண்டு எட்டெருமைப் பாளிக்கு பயணத்தைத் துவங்கினோம். சென்ற பாதை வர, வர கரடுமுரடாக நடக்கவே தடுமாற வேண்டியிருந்தது.

ஒரு இடத்தில் செங்குத்தாக பாறைகள் மீது பாதை. மேலிருந்து ஒரு சிறு அருவி! பாறைகளை நனைத்தவாறு, சென்று கொண்டிருந்தது. அதனால் பாறைகள் சறுக்கின. மிகவும் எச்சரிக்கையுடன் கரணம் தப்பினால் மரணம் என்னும் நிலையில் மூச்சைப் பிடித்துக் கொண்டு மெல்ல ஒருவர் பின் ஒருவராக ஏறிக்கொண்டிருந்தோம்! காலோ, கையோ சற்று சறுக்கினால்கூட ஆழமானப் பகுதியில் விடவேண்டியதுதான் முடிவாகும்! நான் இருந்த பகுதியில் கீழே நின்று கொண்டிருந்த சமையல் செய்பவர் சின்ன பையன் மாதிரி தெரிந்தார்! என் இதய ஒலி என் காதில் டிரம் வாசிப்பது போல் கேட்டது. மேலே இருப்பவர் சறுக்கி விழுந்தால் அவருக்குக் கீழே அடுத்து ஏறிக்கொண்டிருப்பவர் மேல்தான் விழவேண்டும். அப்போது அந்த இருவரும் அடுத்து ஏறுபவர் மேலே விழ இப்படி சங்கிலித் தொடர்போல் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து கீழநோக்கி பயணம் செய்ய வேண்டியதுதான்.

எனக்கு மேலே பதினெட்டு வயது பையன் ஒருவன் திணறிக்கொண்டிருந்தான். சித்தர் விறுவிறு என்று ஏறி சமதளத்தை அடைந்தவுடன் என்னை எட்டிப்பார்த்தார். எங்கள் முகத்தில் பீதி பீரிட்டு ஓடுவதைக் கண்ட அவர் புன்னகையுடன் எங்களை நோக்கி பயப்படாமல் வாருங்கள்! கீழே விழுந்து உடல் சிதறினாலும் அதை ஒன்று சேர்த்து காப்பாற்றுவேன்! இங்கு வந்தவர்களுக்கு பெரிய விமேசானம் கிடைக்கும். உங்களால் முடியும் ஏறி வாருங்கள் என்றார்.



இதைக்கேட்ட என்னால் மேலேயும் போக முடியாமல் கீழேயும் போக முடியாமல் பயமாக இருந்தது! ஏன் என்றால் நான் பாதையை பாதி கடந்த-பாதி கிணறு தாண்டிய நிலையில் இருந்தேன். எனக்கு கீழே நின்றவர் புகழ்பெற்ற பழைய சினிமா படத் தயாரிப்பு நிறுவனத்துக்கு சொந்தக் காரர்! அவரும் தயங்கிநின்றார்.

அதே சமயம் என் தலைக்கு மேலே ஏறிக்கொண்டிருந்த அந்த பதினெட்டு வயதுப் பையன் ஏற முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான். இதைக் கண்டதும் நான் மேலும் கலங்கிப்போனேன். இது என்ன சினிமாவில் வரும் மலையேறும் காட்சிபோல் இருக்கே. வசமா வந்து மாட்டிக்கிட்டோமோ? என்று சிந்தித்திருக்க எங்கள் தலைக்குமேலே ஒரு பச்சை நிற நாகம். என்னை ஏளன மாக பார்த்துக்கொண்டிருந்தது. இது என்னடா சோதனை. நம் தலை மீது விழுந்து கடித்து விட்டால் அதோ கதிதான். பேசாம சினிமாக்காரனோடு கூத்தடித்து கும்மாளம் போட்டு எல்லோரும் சாகும்போது நாமும் சாகவேண்டியது தானே. இதென்ன ஆங்கில படத்தில் நடிக்கிற மாதிரி இருக்கு. கமல், ரஜினி கூட டூப் போட்டுத்தான் ஏறணும். நமக்கு மேலே பாம்பு, கீழே படுபாதாள பள்ளம். இந்த சோதனையையும் வேதனையையும் நினைத்து என்மனமே நின்றுவிட்டது. சரியாக மாட்டிக்கொண்டோம் என்று நினைக்க என் பின்னாடி வந்தவர் கள் முகத்தில் படபடப்பும் தெம்பே இல்லாதவர் போல் திணறிக் கொண்டு இருந்தனர்.

மேலே ஏறிப்போவோமா? இல்ல ஒரேயடியாக மேலேயே போய்விடுவோமா? என்ற பயத்தால் மனம் தள்ளாடியது.

தொடரும்

# தமிழர் அரசியலை திரும்பிப் பார்த்தல்

இதுவரை உலகில், வெளித்தெரிந்த அரசியல் ஆயுதம் தரித்த இயக்கங்களிலேயே விடுதலைப்புலிகள் ஒன்றுதான் விமானப் படை வைத்திருந்த இயக்கம். விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை உலகம் வியந்து பார்த்தது. ஆனால், அந்த வியப்புத்தான் பின்னர் ஆபத்தாகவும் மாறியது. உலகின் வெறுப்பு முதலில் வியப்பிலிருந்துதான் உருவாகிறது. இன்றைய மேற்குலக அணுகுமுறைகளை இவ்வாறுதான் நாம் விளங்கிக் கொள்ள நிர்ப்பந்திக்கப் படுகிறோம். இன்று சாகசங்கள் ஓய்ந்துபோன வெளியொன்றில் தமிழர் அரசியல் தரித்து நிற்கிறது. இணக்க அரசியலை நோக்கி செல்வதா அல்லது தொடர்ந்தும் தீவிரவாத நிழலில் ஒதுங்குவதா என்பதில் தமிழர்களால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை.

ஆனால், இந்த வீர சாகசங்களுக்காக ஒரு தலைமுறை தன்னை மாய்த்திருக்கிறது. தனது சராசரி மனித ஆசைகளுக்கு தீ மூட்டி தன்னைத் தானே அழித்திருக்கிறது. இந்த அர்ப்பணிப்புகளுக்கு சொந்தக்காரரான தலைமுறை மீது எத்தகைய விமர்சனங்கள இருப்பினும் அது தன்னலமற்றது என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. மதில் மேல் பூனையான வாழ்ந்த ஒரு தமிழ் தலைமுறை நல்ல கல்விக்காகவும் கௌரவமான வாழ்வுக்குமாக உழைத்துக்கொண்டிருந்த போது பிறிதொரு தலைமுறையோ தனது இரத்தத்தை தாங்கள் தாங்கிநின்ற சுலோகங்களுக்காக அபிசேகம் செய்திருக்கிறது. தங்கள் பிள்ளைகளை வைத்தியராக்கும் பொறியியலாளராக்கும் கனவுகளுடன் ஒரு தலைமுறை தன் நேரத்தை திட்டமிட்டுக் கொண்டிருந்தபோது பிறிதொரு தலைமுறையோ எல்லாவற்றையும் புறந்தள்ளி காடுகளுக்குள் முடங்கிக் கிடந்தது. ஒரு தலைமுறைக்கு அரசியல் என்பது தங்களின் உயிரை வைத்து ஆடும் சதிராட்டமாகத் தெரிய பிறிதொரு தலைமுறைக்கோ அரசியல் என்பது நாளாந்த செய்தித்தாள்களும் தொலைக்காட்சிப் பெட்டியுமாக இருந்தது. இத்தனை அர்ப்பணிப்புகளாலும் சாகசங்களாலும் ஆனதென்ன என்று பார்த்தால் எதுவுமேயில்லை. இந்த இடத்தில்தான் தமிழர் அரசியலை நாம் திரும்பிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இது ஒவ்வொரு சிந்திக்கும் தமிழனதும் கடமையாகிறது.

ஏன் இந்த நிலைமை? தமிழர் அரசியல் மிதவாதிகளின் தலைமையில் கட்டுண்டு கிடந்த காலத்திலும் பின்னர் ஆயுதம் தரித்த இயக்கங்களில் கட்டுண்டு கிடந்த காலத்திலும் இருபகுதியிலும் திறமைக்கு பஞ்சமிருக்கவில்லை. கடந்த அறுபது வருடகால தமிழர் அரசியல் வரலாற்றை எடுத்து நோக்கினால் மிகவும் ஆற்றல் வாய்ந்த பல தலைவர்கள் தோன்றியிருக்கின்றனர். சிறந்த அரசியல் சிந்தனையாளர்கள் தோன்றியிருக்கின்றனர். எதிர்காலத்தை உணர்ந்து செயலாற்றும் திறன் அவர்களுக்குள் இருந்திருக்கிறது.

இதற்கு ஒரு உதாரணம்- விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆரம்பகால தலைவராகவும் பின்னர் புளொட் இயக்கத்தின் தலைவராகவும் இருந்த உமாமகேஸ்வரன் தொடர்பில் அறிந்ததொரு விடயம் வியப்பை ஏற்படுத்தியது. இந்தளவிற்கெல்லாம் தமிழர்கள் யோசித்திருக்கின்றனர். 1988 ஆம் ஆண்டு புளொட் இயக்கம் மாலைதீவை கைப்பற்றும் நோக்கில் ஒரு படையெடுப்பை மேற்கொண்ட தகவலை இன்று பலரும் மறந்திருப்பர்.

ஒருதேசிய இனத்தின் அரசியலை முன்னிறுத்தி இயங்கிய ஒரு தீவிரவாத இயக்கம், பிறிதொரு நாட்டைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்ட வரலாறும் தமிழர் அரசியலில் மட்டும் தான் உண்டு. அன்று இதன் பின்னால் இந்திய உளவுத்துறை இருந்ததாகவே பரவலாக கூறப்பட்டது. ஆனால், இதற்கும் இந்திய உளவுத் துறைக்கும் எந்தவிதமான தொடர்பும் இருந்திருக்கவில்லையென்பது பின்னர் தெளிவானது.

ஏனெனில் புளொட் இயக்கத்தின் மேற்படி முயற்சியை தடுத்திநிறுத்தி அவர்கள் அனைவரையும் கைது செய்ததே இந்தியாதான். இந்திய கடற்படை இந்தத் தாக்குதலுக்கு கள்ளிச் செடி நடவடிக்கை என்று பெயரிட்டிருந்தது. இலங்கையை தளமாகக் கொண்டிருந்த மாலைதீவு வியாபாரியான அப்துல் லுதுபீ என்பவரது முயற்சிக்கு புளொட் உதவ இணங்கியதே மேற்படி தாக்குதல் திட்டம். மாலைதீவின் அப்போதைய தலைவராக இருந்த மௌமூன் அப்துல் கையூமின் ஆட்சியைக் கைப்பற்றுவதே அந்த தாக்குதல் படையெடுப்பின் நோக்கம். புளொட்டின் மேற்படி உதவிக்காக மாலைதீவில் புளொட் இயக்கத்திற்கு ஒரு பின்தளம் அமைப்பதற்கு கிளர்ச்சியாளர் லுதுபீ இணங்கியிருக்கிறார். இவ்வாறு உமாமகேஸ்வரன் சிந்தித்ததன் பின்னாலிருந்த காரணம்தான் இங்கு வியப்புக்குரியது. ஒருவேளை, இந்தியாவில் செயற்பட முடியாத நிலைமை ஏற்படின் புளொட் இயங்குவதற்கு பிறிதொரு பின்தளமாக மாலைதீவை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த எண்ணம் தான் மேற்படி மாலைதீவின் ஆட்சி மாற்றத்திற்கு உதவும் திட்டத்தை உமா வகுத்ததற்கான காரணமாகும். இம்முயற்சி தோல்வியடைந்தது. மேற்படி திட்டத்தின் சூத்திரதாரியான லுதுபீ கடந்த வருடம் விடுதலை செய்யப்பட்ட பின்னர் இது தொடர்பில் விரிவானதொரு நேர்காணலை வழங்கியிருக்கின்றார்.

இப்பத்தி, இங்கு குறித்துரைக்க விரும்பும் விடயம் உமாமகேஸ்வரன் பற்றியதல்ல. இந்தியாவில் நிலைகொண்டு செயற்பட முடியாதவிடத்து, பிறிதொரு பின்தளத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்று எண்ணியதுதான். அந்தளவிற்கு அவரால் சிந்திக்க முடிந்திருக்கிறது. ஆனால், இந்தியா போன்றதொரு பிரமாண்டமானதொரு நாடு அருகில் இருக்கும் போது, அதனை மீறி இவையெல்லாம் சாத்தியமா என்று அவர் யோசித்திருக்கவில்லை. இவ்வாறான சம்பவங்களை உற்றுநோக்கும் போது ஒரு கேள்வி எழுகிறது. தமிழர் அரசியலில் துணிவும் ஆற்றலும் இந்தளவிற்கு நிதானமான அணுகுமுறை இருந்திருக்கவில்லையா? இன்று இந்த விடயங்களைப் படிக்கநேரும் இன்றைய தமிழ் தலைமுறைக்கு ஏதோ சாண்டில்யனின் கடல்புறா வீரம் போன்றே இவை தெரியக்கூடும். ஆனால், இவற்றுக்கெல்லாம் பின்னால் இருந்த உழைப்பு, அர்ப்பணிப்பு சாதாரணமானதல்ல. இறுதியில் இன்று தமிழர் அரசியலை திரும்பிப்பார்க்கும் ஒருவர் அனைத்து அர்ப்பணிப்புகளும் அறிவுத் தேடல்களும் விழலுக்கு இறைந்த நீராகியிருப்பதையே காண முடியும்.

ஆனால், இத்தனைக்குப் பிறகும் தமிழர் அரசியல் ஒரு நிதானமாகவும் காலத்தை விளங்கிக்கொண்டும் நகருகின்றதா என்பதை சிந்திக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்குமுண்டு. இன்று வரப்புக்குள் நின்றவாறு அரசியல் பேசும்நிலை இல்லை. அப்படியொரு நிலை 2009 வரை இருந்தது உண்மை. அவர்,



இவரர் என்றெல்லாம் கோசங்கள் எழுப்பும் நிலைமை இப்போதில்லை. இதுதான் தமிழர் அரசியலை திரும்பிப்பார்க்க சரியான தருணம். இங்கு திரும்பிப் பார்த்தல் என்பது வெறுமனே விடுதலைப்புலிகளின் தவறுகளை மட்டும் பேசுவது என்பதல்ல பொருள். தமிழர் அரசியலை கடந்த அறுபது வருடங்களாக பிரதிநிதித்துவம் செய்த அனைத்து தரப்பினரும் தங்களது அரசியலை திரும்பிப் பார்க்க வேண்டிய பொறுப்புக்குரியவர்களாக இருக்கின்றனர்.

மக்கள் நலனை முன்னிறுத்தி சிந்தித்தால் விமர்சனங்களை முன்வைக்கவும் அதனை எதிர்கொள்ளவும் அஞ்சவேண்டியதில்லை. இத்தகையதொரு திரும்பிப் பார்த்தல் இன்றைய காலத்தில் மிகவும் அவசியமானது. மீண்டும் அழிவுகளுக்கு ஆராதனை செய் யும் சுவட்டத்தினர் கையில் அரசியல் சிக்கிவிடுவதை தடுக்க வேண்டுமாயின், அத்தகையதொரு திரும்பிப் பார்த்தல் கட்டாயமான ஒன்றாகும். ஏனெனில் சமீபத்தில் ஒரு ஆய்வாளர் சுட்டிக் காட்டியிருந்த போன்று எங்கள் அனைவரது கையிலும் இரத்தக்கறை உண்டு. ஏனெனில் எங்களது இத்தனைவருட கால அரசியல் கோசங்களுக்காக விலை கொடுத்தவர்கள் அனைவரும் சாதாரண மக்களாவர். நாங்கள் போதியளவு திறமையை காண்பித்திருக்கிறோம். போதியளவு தன்னலமற்ற அர்ப்பணிப்பை நிரூபித்திருக்கிறோம். ஆனால், இறுதியில் அழிவுகளுக்கு விளக்கவுரை எழுதிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இப்போது திரும்பிப் பாரக்க வேண்டியதுதான் பிரதானமான தமிழர் அரசியலாக இருக்கிறது.

இன்போ தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

473

## விசித்திரக் கதை




அரசனிடத்தில் வேலை பார்ப்பது கத்தி முனையில் நடப்பதற்கும் சமம் ஆகும். எந்த் நிமிடத்தில் என்ன நேரிடுமென்று யாராலும் சொல்ல முடியாது. இதற்கு விதி விலக்காக காளிதாசனும் இருக்க முடியுமா? ஒரு தடவ்வை போஜராஜன், காளிதாசனை எதற்காகவோ கோபித் துக்கொண்டான். இதனால் காளி தாசன் தாரா நகரத்தை விட்டு எங்கோ சென்றுவிட்டான்.

காளிதாசன் சென்ற பிறகு, போஜனது தர்பாரில் புலவர் கூட்டத் தில் சலசலப்பு ஏற்பட்டது. அப்புல வர்களில் மூவர் ஒன்று கூடி ஒரு திட்டம் வகுத்தனர். அதை அவர்கள் காரியாம் சத்திலும் நிறைவேற்ற ஆரம்பித்தனர்.

அப்புலவர்களில் ஒருவர் எதை ஒருதடவை கேட் டாலும், அதை மறுகணம் அப்படியே ஒப்பிப்பார். இரண்டாவது புலவர் எதையும் இரண்டு தடவை கேட்டால் போதும், உடனே அதை அப்படியே ஒப்பி ப்பார். மூன்றாவது புலவரோ எதை யும் மூன்று தடவை கேட்டால், அதை அப்படியே ஒப்பிப்பர்.

இம்மூவரும் அரசதர் பாரில் இருந்து கொண்டு, புதிதாக கவி தைகள் புனைந்து போஜனிடம் பரிசு பெறவரும் கவிகளுக்கு ஒன்றுமே கிடைக்காமல் செய்து வந்தனர். ஒரு புதிய கவிஞர் ஒரு புதிய கவிதையை அரசனிடம் சொல்லி



முடித்ததும், முதலாவது புல வர் அதே கவிதையைக் கூறி இதைத்தான் ஏற்கனவே படித்து இருப்பதாகக் கூறி விடுவார். அதற்குள் அந்தக் கவி தையை இரண்டாவது புலவர் இரண்டு தடவை கேட்டுவிட்டாராதலால், அவரும் அக்கவிதையை அப்படியே திருப்பிச் சொல்லி, அக்கவிதை மிக மிகப் பழையது என்பர். இதற்குள் மூன்றாவது புலவரும் அந்தக் கவி தையை மூன்று தடவை கேட்டு விட்டதால், அதையே திருப்பிச் சொல்லி, அக்கவிதை மிகமிகப் பழையது என்பார்.

இவ்விதமாக புதிதாக வருவோர் இந்த மூவரிடத்திலும் அவமானப் பட்டு திரும்பிச்செல்வார்கள். இவ்விதம் மனம்நொந்து சென்ற கவிஞர்களில் ஒருவரை காளிதாசன் சந்தித்தான்.

அந்த கவிஞர் போஜரின் தர்பாரில் நடந்ததையெல்லாம் கூறவே, காளி தாசன் போஜனுக்கும், அம்மூன்று புலவருக்கும் புத்தி புகட்ட விரும் பினான். உடனே, ஒரு புதியதோர் கவிதையை வடமொழியில் எழுதி, அந்தக்கவிஞரிடம் கொடுத்து "இந்தத் தடவை போஜராஜன் உமக்கு நிச்சயம் பரிசளிப்பான். இந்தக்கவிதையை அவன் தர்பாரில் வாசித்துக் காண்பி யுங்கள்" என்றான். கவிஞரும் அதைப் பெற்றுக்கொண்டு போஜனனின் தர்பாரை அடைந்தார்.

அக்கவிதையின் பொருள் யாதென்றால் "போஜமன்னனே, மிக தயாள குணமுள்ள உமது தந்தை என்னிடமிருந்து தொண்ணூற்றொன்பது கோடி இரத்தினங்களை வாங்கிக் கொண்டார். அதை எனக்குத் திருப் பிக் கொடுங்கள். இப் படி நான் சொல்வது உண்மை என்பதை பண்டி தர்களும், புலவர்களும் நன்கு அறிவார்கள். ஒரு வேளை, உங்கள் தர் பாரில் யாரும் அறியா விட்டால், இந்தப்புதிய கவிதைக் காவது லட்சம் வராகன்கள் பரிசு



அளியுங்கள்" என்பதே.

இதைக்கேட்டதும் போஜனின் தர்பாரிலுள்ள முதலாவது புலவர் திகைத்தார். அந்தக் கவிதை மிகப்ப ழையது, தனக்குத் தெரியும் என ஒப்புக்கொண்டால் போஜராஜன் அவ்வளவு இரத்தினங்களையும் கொடுக்க வேண்டும். அந்தக் கவிதையை அதுவரைதான் படித்தது இல்லையென்றால் அதற்குப் பரிசாக லட்சம் வராகன்கள் கொடுக்கவேண் டிவரும். வெகுநேரம்வரை யோசித்து, அந்தக் கவிதை புதியதே என்று அரசனிடம் கூற, அரசனும் அவனு க்கு லட்சம் வராகன்களை பரிசளித் தான்.

பரிசு கொடுத்ததும் போஜன் அக்கவிஞரை பார்த்து "இதென்ன இபபடி விசித்திரமான கவிதையை எழுதி இருக்கிறீர்கள்" எனவே, அக் கவிஞர் முதலில்தான் அங்கு ஒரு கவிதை கூற, அது பழையதென அந்தப்புலவர்கள் கூறிய தையும், தான் மனம் நொந்து போகையில் வழியில், ஒரு பிராம்மாணரையும் சந்தித் ததையும் அவரே அந்தக் கவிதையை எழுதி கெடுத்ததையும் கூறினார்.

அந்தப் பிராமணர் காளிதாசனே என்பதை போஜன் தெரிந்து கொண்டு, அந்தக் கவிஞருடன் அப்பிராமணர் இருந்த இடத்தை அடைந்தான். எதிர்பார்த்தபடி காளிதாசனை அவர் கண்டதும் கோபத்தில் கடிந்து கொண்டதை மன்னிக்க வேண்டி னான். பின்னர், காளிதாசனையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு தாரா நகரம் வந்து சேர்ந்தான்.

## அம்புலிமாமா கதைகள்

## பண ஆசை



ஒரு ஏழைக் குடியானவன் ஒருநாள் வயலில் வேலை செய்துவிட்டு வீட்டிற்கு வந்தான். களைப்பால் அங்கு படுத்தவாறே "கடவுளே, எனக்குப் பணம் கிடைக்கும்படி செய்யமாட்டாயா?" என பலமாகக் கூறினான்.

அப்போது ஒரு பை அவன் முன் தொப்பென்று விழுந்தது. பின்னர், எங்கிருந்தோ ஒரு குரல் "நீ இப்பையில் கைவிடும் போதெல்லாம் ஒரு தங்க நாணயம் கிடைக்கும். உனக்கு வேண்டிய தங்க நாணயத்தை எடுத்துக் கொண்டு இந்தப்பையை ஆற்றில் போட்டுவிடு. ஆனால், ஆற்றில் இதனைப் போடாமல் நீ தங்க நாணயத்தைச் செலவு செய்ய முயன்றால் உன்னிட மிருக்கும் பணம் எல்லாம் மாயமாக மறைந்து போய்விடும்" என்றது.

குடியானவன் மிகவும் மகிழ்ச்சியுற்று அப்போது முதல் பையில் கையை விட்டு ஒவ்வொரு தங்க நாணயமாக எடுத்துப் போட்டான். ஒருநாள் முழு வதும் அவ்வாறு செய்ததில் ஒரு சாக்குப்பை நிறைய நாணயம் கிடைத்தது. அவனது பண ஆசை அடங்கவில்லை.

இப்படி பகலில் பிச்சை எடுப்பதும் இரவில் பையிலிருந்து தங்க நாணயங்களை எடுத்துப் போடுவதுமாக இருந்தான். அவனுக்கு அந்தப்பையை நதியில் எறியமனமில்லை. வீட்டில் பணம் நிறைந்ததும் அவன் திருப்திப் படவில்லை. அவன் ஒருநாள் இறந்துபோனான்.

அக்கம்பக்கத்தவர் அவன் வீட்டினுள் சென்றனர். வீட்டில் நிறைய தங்க நாணயங்கள் இருந்தும் அக்குடியானவன் ஏன் பிச்சை எடுத்தான் என்பது அவர்களுக்கு விளங்காத புதிராக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகரசபை எல்லைக்குள் கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும்

## யாழ்.மாநகரசபைக் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் தமிழர்களின் கலாசாரம், பண்பாட்டைப் பாதுகாக்க தீர்மானமொன்று மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.,

யாழ்.மாநகரசபையின் இந்த வருடத்திற்கான 5 ஆவது மாதாந்தப் பொதுக் கூட்டம் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் அண்மையில் மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கலாசார சீர்கேடுகள் இடம்பெறுவதாக இணையத்தள செய்திகளிலும் இப்பிரதேசத்தைச் சாராதவர்களாலும் தவறான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

எனவே, இந்த விடயத்தில் கூடிய கவனமெடுத்து, தமிழர்களின் கலாசாரம், பண்பாட்டைப் பாதுகாக்க வேண்டும். அண்மைக்காலங்களாக யாழ்ப்பாணத்தில் பதிவின்றி இயங்கி வரும் விடுதிகள் மற்றும் கலாசார சீர்கேடுகள் இடம்பெறும் விடுதிகள், பொலிஸ் மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்களால் சுற்றிவளைப்புக்குள்ளாக்கப்பட்டன.

எனவே, இங்கு எதுவும் நடைபெறவில்லை எனக்கூறவும் முடியாது. இனிமேலும் நடைபெறாது என உறுதி யாக கூறவும் முடியாது என எதிர்க் கட்சி உறுப்பினரான விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபையின் எல்லைக்குள் 122 விடுதிகள் தற்போது இயங்கி வருகின்றன. இதில் எத்தனை பதிவு செய்யப்பட்டன? எத்தனை பதிவு செய்யப்படாதுள்ளன? என்பது வெளிப்படுத்தப்படவில்லையெனவும், கலாசாரம், பண்பாடு என்பவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து முதல்வர் உரையாற்றும்போது, ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதான் எமது கலாசாரம், பண்பாடு. அதனைப் பாதுகாக்க தொடர்ந்து பாடுபடவேண்டும். இவ்வா றான கலாசார பிறழ்வுகளைத் தடுக்க சகலரும் ஒத்துழைக்கவேண்டும் என தெரிவித்ததோடு, அதனை தீர்மானமாகவும் கொண்டுவந்தார். அதற்கு சபை உறுப்பினர்கள் தமது ஆதரவைத் தெரிவித்தனர். (அ-6)

# சிங்கப்பூரில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படும் இலங்கைப் பெண்கள்

இலங்கைப் பெண்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய நபர் ஒருவரை சிங்கப்பூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாக இலங்கை யுவதிகளை சிங்கப்பூருக்கு அழைத்துச்சென்று அங்கு அவர்களைப் பலவந்தமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி வந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சிங்கப்பூரில் சட்டவிரோத பாலியல் தொழிலில் ஈடுபடும் முக்கியஸ்தர்களில் ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் இம்முறை ஐந்து பெண்களை அழைத்துச் சென்று பலவந்தமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு பலவந்தமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வந்த பெண்கள் தப்பிச் சென்று சிங்கப்பூர்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சிங்கப்பூரில் இலங்கைப் பெண்களைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தும் மற்றுமொரு நபர் பற்றிய தகவல்களையும் அந்நாட்டு பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு 20 டொலர்கள் மட்டுமே வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# புலிகளை ஒடுக்கிய பயங்கரவாத தடைச் சட்டம் தற்போது எதிர்க் கட்சியை ஒடுக்குகின்றது

## ஐ.தே.க.எம்.பி.கருஜயசூரிய

(கொழும்பு)

தண்ணீர்க் கோப்பையில் முதலைகளை காணும் ஆட்சியே தற்போது நாட்டில் காணப்படுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கிருலப்பனையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசியல் சுதந்திரத்தை வழங்க வேண்டியது ஜனநாயக நாடொன்றின் முக்கிய பண்பியல்பாகும்.

அரசாங்கத்தை விமர்சனம் செய்யவும் சுதந்திரமான முறையில் அரசியல் செய்யவும் மக்களுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். எனினும், சர்வாதிகார நாடொன்றில் இந்த பண்பியல்புகளைக் காணமுடியாது.

இவ்வாறான நாடுகளில் அரசாங்கத்தை விமர்சனம் செய்வது ராஜதுரோகமாகவே கருதப்படுகின்றது. நாட்டில் தற்போது பயங்கரவாத தடைச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது.

அன்று பயங்கரவாதிகளை இல்லாதொழிக்க பயன்படுத்தப்பட்ட சட்டமானது இன்று எதிர்க்கட்சியினரையும் மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவோரையும் அடக்கி ஒடுக்குவதற்கு பயன்படுகின்றது.

தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் ஏகாதிபத்திய ஆட்சிக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# முன்னாள் புலிகள் புகலிட கோரிக்கை

## சிங்கள பத்திரிகை தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் மேற்குலக நாடொன்றின் தூதரகமொன்றில் புகலிடம் கோரியுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐம்பது முன்னாள் புலி உறுப்பினர்கள் இவ்வாறு புகலிடம் கோரியுள்ளதாகவும் இவர்களில் முன்னாள் பெண் புலிப் போராளிகளும் உள்ளடங்குவதாகவும் குறித்த பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு முகாம் ஒன்றிலிருந்து விடுவிக்கப்பட்ட புலி உறுப்பினர்களே இவ்வாறு போலியான தகவல்களை வழங்கி குறித்த தூதரகத்தில் அடைக்கலம் கோரியுள்ளனர்.

இவர்களுக்கு அரசியல் புகலிடம் வழங்க சில தமிழ் அரசியல்வாதிகளும் முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# 'ஞானசௌந்தரி' இசை நாடகம் பிற்போடப்பட்டுள்ளது

(கொழும்பு)

திருமறைக்கலாமன்றத்தின் தயாரிப்பில் நேற்று, இன்று (சனி, ஞாயிறு தினங்களில்) மன்ற அரங்கில் மேடையேற்றப்படவிருந்த ஞான சௌந்தரி இசை நாடகம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. இது எதிர்வரும் 08 ஆம் , 09 ஆம் திகதிகளில் மேடையேற்றப்படவுள்ளதாக திருமறைக்கலாமன்றம் அறிவித்துள்ளது. (அ)




❖ *1615* - பிரெஞ்சு கத்தோலிக்க மதப்பரப்புநர்களின் முதற்தொகுதியினர் கனடாவின் கியூபெக் நகரை அடைந்தனர்.

❖ *1896* - மார்க்கோனி தான் புதிதாக கண்டுபிடித்த வானொலிக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.

❖ *1924* - ஐக்கிய அமெரிக்காவில் பிறந்த அனைத்து பழங்குடிகளுக்கும் அமெரிக்கக் குடியுரிமை வழங்கும் சட்டமூலத்தை ஜனாதிபதி கால்வின் கூலிட்ஜ் அறிமுகப்படுத்தினார்.

❖ *1946* - இத்தாலியில் முடியாட்சியை குடியரசாக மாற்றும் முடிவுக்கு மக்கள் பெருமளவு ஆதரித்து வாக்களித்தனர். இத்தாலியின் மன்னன் நாட்டை விட்டு வெளியேறினான்.

❖ *1953* - இரண்டாம் எலிசபெத் இங்கிலாந்தின் அரசியாக முடிசூட்டு விழா முதற்தடவையாக தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பானது.

❖ *1965* - வியட்நாம் போர்: முதலாவது தொகுதி அவுஸ்திரேலியத் துருப்புகள் தெற்கு வியட்நாமை அடைந்தது.

❖ *1966* - நாசாவின் சேர்வெயர் 1 விண்கலம் சந்திரனில் இறங்கியது. சந்திரனில் மெதுவாக இறங்கிய முதலாவது அமெரிக்க விண்கலம் இதுவாகும்.

❖ *1992* - டென்மார்க் மக்கள் மாஸ்ட்ரிக்ட் உடன்பாட்டுக்கு எதிர்த்து வாக்களித்தனர்.

❖ *1999* - பூட்டானில் முதற்தடவையாக தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ *2003* - வேறொரு கோளுக்கான (செவ்வாய்) மார்ஸ் எக்ஸ்பிரஸ் என்ற தனது முதலாவது விண்கலத்தை ஐரோப்பிய ஆய்வு மையம் ஈசாகசக்ஸ்தானில் இருந்து ஏவியது.

*பிறப்புகள்*

❖ *1943* - இளையராஜா, இந்திய இசையமைப்பாளர்

❖ *1956* - மணிரத்னம், தமிழ் இயக்குநர்

*1965* - ஸ்டீவ் வா மற்றும் மார்க் வா, அவுஸ்திரேலிய துடுப்பாட்டக்காரர்கள்


*இறப்புகள்*

❖ *1842* - பி. கந்தப்பிள்ளை, (ஆராய்ச்சிக் கந்தர்), யாழ்ப்பாணப் புலவர், வைத்தியர், நாவலரின் தந்தை

❖ *1882* - கரிபால்டி, நவீன இத்தாலியை உருவாக்கியவர் (பி. 1807)

❖ *1981* - தாவீது அடிகள், யாழ்ப்பாணத் தமிழறிஞர் (பி. 1907)

### இளையராஜா




இளையராஜா 1943 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் திகதி பிறந்தார். இவரின் இயற்பெயர்: ராசய்யா) இந்தியாவின் தலைசிறந்த திரைப்பட இசையமைப்பாளர்களுள் ஒருவரான இவர், இசைத்துறையில் மிகவும் புலமை பெற்றவராக திகழ்கிறார். அன்னக்கிளி என்ற திரைப்படத்துக்கு இசை அமைத்ததன் மூலம் 1976 இல் தமிழ் திரையுலகிற்கு அறிமுகமானார். இதுவரை 950 இற்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார். இவருக்கு இந்திய அரசின் படத்துறை சாரா விருதுகளில் மூன்றாவது உயரிய விருதான பத்ம பூஷண விருது 2010 ஆம் ஆண்டு அளிக்கப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டது.

தமிழக நாட்டுப்புற இசை, கர்நாடக இசை மற்றும் மேற்கத்தேய இசையில் புலமையும் முறையான பயிற்சியும் பெற்றவர். சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருதை நான்கு முறை பெற்றுள்ளார். திரைப்படங்களுக்கான சிறந்த பின்னணி இசையமைப்புக்கும் பெயர் பெற்றவர். இவருடைய பிள்ளைகள் கார்த்திகேயன் (கார்த்திக் ராஜா) , யுவன் ஷங்கர் (யுவன் சங்கர் ராஜா), பவதாரிணி ஆகியோரும் இசையமைப்பாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1969 ஆம் ஆண்டு தன் 26ஆம் வயதில் திரைப்படங்களுக்கு இசையமைக்கும் ஆர்வத்தில் சென்னைக்கு வந்தார். இந்திய திரைப்படங்களில் மேற்கத்தேய பாரம்பரிய இசையை புகுத்தியவர்களில் இளையராஜாவுக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. இளையராஜா, இதுவரை நான்காயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட பாடல்களுக்கு இசையமைத்துள்ளார். தொளாயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு பின்னணி இசை கோர்த்துள்ளார். தமிழக அரசின் கலைமாமணி விருதையும், 1988ஆம் ஆண்டு மத்திய பிரதேச அரசின் லதா மங்கேஷ்கர் விருதையும், 1995ஆம் ஆண்டு கேரள அரசின் விருதையும் பெற்றார். இசையில் சாதனை புரிந்தமைக்காக 1994ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகத்தினாலும், 1996ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தினாலும் முனைவர் பட்டம் (டாக்டர் - Degree of Doctor of Letter) பெற்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையிடமிருந்து கச்சதீவை இந்தியா மீளப்பெறுவதென்பது சாத்தியம்தானா?



இந்தியாவின் ஆங்கில நாளேடான தி ஹிந்து ஆசிரியத் தலையங்கப் பக்கத்தில் அனைத்துலக சட்டவியல் மாணவரான தீபக் ராஜு எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறைமையுள்ள நாடொன்றுடன் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கையை அந்நாட்டின் உள்நாட்டுச் சட்டம் கட்டுப்படுத்த முடியாது என 1969 இல் உருவாக்கப்பட்ட வியன்னா சாசனத்தில் 27 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1974 மற்றும் 1976 ஆண்டுகளில் இலங்கைக்கும் மற்றும் அதன் அயல்நாடான இந்தியாவுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் மூலம் இலங்கைக்கு இந்தியாவால் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்ட கச்சதீவை இந்திய மத்திய அரசாங்கம் மீண்டும் தனக்குச்சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி உச்சநீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பில் இதற்கு முன்னர் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா உச்சநீதிமன்றில் தாக்கல் செய்த மனுவானது இன்னமும் விசாரிக்கப்படாது நிலுவையில் உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதே.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் நான் இங்கு இரு முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முதலாவது, இலங்கைக்கு எதிராக இந்திய உச்சநீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் பயனற்றவை என்பதால் கச்சதீவு இந்தியாவுக்கு மீண்டும் கிடைக்கவேண்டும் எனக் கோரிப்போடப்பட்ட வழக்கு பயனற்றது எனக் கூறலாம்.

இரண்டவது, நாடுகளுக்கிடையில் எல்லைப் பிரச்சினையைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள அனைத்துலகச் சட்டத்தின் பிரகாரம் கச்சதீவு தொடர்பான வழக்கும் தொடர்ந்தும் நிலுவையிலேயே இருக்கும். ஏனெனில் இது தொடர்பான வழக்கின் தீர்வானது அயல்நாடுகளான இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் எல்லைப் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் என்பதால் இது தொடர்பான வழக்கு விசாரிக்கப்படமாட்டாது.

இந்தியச்சட்டத்தின் பிரகாரம் அரசியல் யாப்பின் சரத்திற்கமைய இந்திய தேசத்திற்குச் சொந்தமான கச்சதீவு மீளவும் இலங்கையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

இந்திய அரசியல் யாப்பின் சரத்து 1(2)ல் இந்தியாவின் எல்லை தொடர்பாக தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இதன் முதலாவது உள்ளீட்டின் ஏழாவது வரைபில் தமிழ்நாட்டு மாநிலத்திற்குச் சொந்தமான எல்லைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை இந்திய உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியிருந்தது. இந்தியாவுக்குச் சொந்தமான பிரதேசத்தை வெளிநாடொன்றுக்கு இந்தியா வழங்கவிரும்பினால் இந்திய நாடாளுமன்றின் பெரும்பான்மை ஆதரவுடன் இந்தியச் சட்டத்திற்கு அப்பால் உடன்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

1974 ஆம் மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இந்தியா மற்றும் இலங்கைக்கிடையேயான எல்லை வரையறுக்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கச்சதீவானது இலங்கைக்குச் சொந்தமானது. ஆனால், இந்த உடன்படிக்கைகள் எந்தவொரு அரசியல் யாப்பின் பிரகாரமோ அல்லது நாடாளுமன்றின் ஆதரவுடனோ மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் இந்தியச் சட்டத்திற்கு அப்பால் இலங்கைக்கு கச்சதீவு தாரைவார்த்துக்கொடுக்கப்பட்டது தொடர்பாக இந்திய எல்லைச் சட்டத்தின் முதலாவது வரையறையில் குறிப்பிடப்படவில்லை. கிடைக்கக் கூடிய தகவல்களையும் தரவுகளையும் ஆதாரங்களையும் கொண்டு இது தொடர்பாக இந்திய உச்சநீதிமன்றம் விசாரணை செய்யமுடியும். இந்திய அரசியல் யாப்பின் முதலாவது உள்ளீட்டின் ஏழாவது வரைபின் பிரகாரம், கச்சதீவானது தமிழ்நாட்டின் ஒரு பகுதி எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி இந்திய உச்சநீதிமன்றம் விசாரணைகளை மேற்கொள்ளமுடியும்.

கச்சதீவானது தமிழ்நாட்டின் ஒரு பகுதி எனவும் இது இலங்கைக்கு சட்டரீதியற்ற வகையில் வழங்கப்பட்டதை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தினாலும்கூட, இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கையை இந்திய மத்திய அரசாங்கம் ஏற்படுத்தாது. இலங்கையானது இறைமையுள்ள நாடு என்றவகையில் இதற்கு எதிராக இந்திய நீதிமன்றில் தீர்வெதனையும் முன்வைக்க முடியாது.

இருப்பினும் வரலாற்று ரீதியாக சட்டரீதியற்ற வகையில் இடம்பெற்ற கச்சதீவு கையளிப்பு தொடர்பாக இந்திய உச்சநீதிமன்றானது பிரகடனம் ஒன்றை மேற்கொள்ளமுடியும். இந்திய உச்சநீதிமன்றம் இவ்வாறான பிரகடனம் ஒன்றை மேற்கொண்ட பின்னர் கச்சதீவை மீளவும் மத்திய அரசாங்கம் உடைமையாக்கிக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்த முடியுமா?

இந்தியச் சட்டத்தின் பிரகாரம் கச்சதீவை, இந்திய மத்திய அரசாங்கம் மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும் என நீதிமன்றம் ஆணை பிறப்பிப்பதற்கு அரசியல் யாப்பின் வரையறைகள் இல்லாதிருக்கலாம். ஆனால், இருநாட்டு உடன்பாடுகளுமின்றி பிறிதொரு இறையாண்மை நாட்டின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிலத்தை மற்றைய நாடு ஆளமுடியாது. இந்த வகையில் இலங்கைத்தீவின் அனுமதியின்றி இந்தியாவானது கச்சதீவை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரமுடியாது. இதில் நீதிமன்றம் தலையீடு செய்து தனது ஆணையைப் பிறப்பித்தால் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது அதன் நீதித்துறையால் ஆதிக்கம் செய்யப்படுவதாக கருதப்படும். இதனால் கச்சதீவை இந்தியா மீளவும் தனது உடைமையாக்கிக் கொள்வதற்கு இதன் உச்சநீதிமன்றம் கட்டளையிடுவதைத் தவிர்த்து கொள்ள வேண்டும்.

கச்சதீவு விவகாரத்தை அனைத்துலக சட்டமுறைகளுக்கு ஏற்ப நாம் இங்கு விரிவாக ஆராயமுயற்சிப்போம். கச்சதீவை இந்தியா மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அழுத்தங்கொடுத்துள்ளதை காரணங்காட்டி இந்திய மத்திய அரசாங்கமானது இலங்கையுடன் இந்த விவகாரம் தொடர்பாக விவாதிப்பதற்கு அனைத்துலகச் சட்ட ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

1974 மற்றும் 1976களில் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் இணைந்து கையெழுத்திடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பெறுபேறாகவே கச்சதீவு இலங்கைக்கு கைமாற்றப்பட்டது என்பதை நாம் அறிவோம். இதில் இருநாடுகளும் உடன்பட்டுள்ளன என்பதால் அனைத்துலகச் சட்ட ஒழுங்கின்படி, இரு நாடுகளின் சம்மதத்துடன் இந்த விவகாரம் தீர்க்கப்படவேண்டும்.

எதெவ்வாறாயிருப்பினும், கச்சதீவு கைமாற்றம் தொடர்பான உடன்படிக்கைகளின் பிரதிகளில் அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பிரதிகளை மட்டுமே பெற முடிகிறது. இந்த உடன்படிக்கைகளில் இருநாட்டு உடன்பாடுகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கச்சதீவை இந்திய மத்திய அரசாங்கம் திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டும் என தமிழ்நாட்டு சட்டசபையில் தீர்மானம் இயற்றப்பட்ட போது, இந்திய மத்திய அரசாங்கம் இலங்கையின் இறைமையை வலியுறுத்தி சில அறிக்கைகளை வெளியிட்டிருந்தபோதிலும், இந்த விவகாரம் தொடர்பாக இந்திய மத்திய அரசாங்கம் இன்னமும் உத்தியோகபூர்வ அறிக்கைகள் எதனையும் வெளியிடவில்லை.

இறைமையுள்ள நாடொன்றுடன் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கையை அந்நாட்டின் உள்நாட்டுச் சட்டம் கட்டுப்படுத்தமுடியாது என 1969ல் உருவாக்கப்பட்ட வியன்னா சாசனத்தின் 27வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டார் மற்றும் பஹ்ரெயின் நாடுகளுக்கிடையில் ஏற்றப்பட்ட கடல்சார் மறுசீரமைப்பு மற்றும் பிராந்திய வரையறை தொடர்பில் எழுப்பப்பட்ட விவாதத்தின்போது, இரு நாடுகளின் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றை உள்நாட்டுச் சட்டத்தால் மாற்ற முடியாது என அனைத்துலக நீதிமன்றம் அறிவித்திருந்தது. இது கச்சதீவு விவகாரத்திற்கும் பொருத்தமாக உள்ளது.

இலங்கையும் இந்தியாவும் 1974ல் கச்சதீவு தொடர்பான உடன்பாட்டை மேற்கொள்வதற்கு முன்னர் இரு நாடுகளும் இத்தீவின் இறையாண்மை தமக்கே உரியது என உரிமை கொண்டாடின. ஆனால், இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு கச்சதீவு இலங்கைக்கு விட்டுக் கொடுக்கப்பட்ட பின்னர் இறுதிவரை இந்தியாவானது இத்தீவை கட்டுப்படுத்துவதில்லை. இலங்கையே இதனைப் பராமரித்து வருகிறது. இந்நிலையில் உடன்பாட்டை மேற்கொண்ட இரு நாடுகளில் ஒன்றான இந்தியா மற்றைய நாடான இலங்கையின் நலன் கருதி கச்சதீவை விட்டுக்கொடுத்துள்ளதுடன், இது தொடர்பில் எதிர்ப்பு எதனையும் காண்பிக்காது அமைதி காத்து வருகின்றது இரு நாடுகளும் கச்சதீவுக்காக முரன்பட்டால் பிராந்திய ஒருமைப்பாடு சிதைவடையும்.

இந்தியச் சட்டம், அனைத்துலகச் சட்டம் இரண்டையும் எடுத்து நோக்கில், கச்சதீவை இந்தியா திரும்ப பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கான சாத்தியப்பாடான நியாயங்கள் எதுவும் காணப்படவில்லை. இந்நிலையில், இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் துன்புறுத்துவதை முன்னுரிமைப்படுத்தி, தற்போது தமிழ்நாடானது இந்தியா, கச்சதீவை மீளப்பெற்றுக் கொள்ளவேண்டும் என மனுத்தாக்கல் செய்துள்ளதானது ஆராயப்பட வேண்டும். இந்திய மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் பாதிக்கப்படுவதாக தமிழ்நாடு அறிவித்துள்ள நிலையில், இந்திய மத்திய அரசாங்கமானது மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மாற்றுத்தீர்வை முன்வைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கமறியலில் வைக்கப்பட்ட நீதவான் வைத்தியசாலையில்

விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஹோமாகம மாவட்ட நீதவான் சுனில் அபேசிங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளாரென இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய உத்தரவின்படி ஹோமாகம மாவட்ட நீதவான் சுனில் அபேசிங்க எதிர்வரும் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முதுகுவலி காரணமாக இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக் கொள்வதற்கு முயன்ற வேளை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த வியாழக்கிழமை இவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு

(கும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சிறுவர்கள் பாதுகாப்புக்குழுவை வலுப்படுத்தல் தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பருத்தித்துறைப் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-3-19)

# சீனாவுடனான நெருக்கம் இந்தியாவுக்கு எதிரானதல்ல

## தூதுவர் காரியவசம் தெரிவிப்பு



இலங்கையின் உறவினராகவும் நெருங்கிய நண்பராகவும் இந்தியா இருக்கிறது. சீனாவுடன் அதிகரித்து வரும் இலங்கையின் நெருக்கத்துடன் இதைத் தொடர்புபடுத்தக் கூடாது என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது ஒன்றை விட்டுக் கொடுத்து ஒன்றைப் பெறுகின்ற ஆட்டம் அல்ல. இந்தியாவை நாம் ஒரு உறவினராக, நெருங்கிய நண்பராகவே கருதுகிறோம். இந்தியாவுடன் நாம் பலமான உறவைக் கொண்டிருக்க வேண்டும்.

அதேவேளை, சீனாவுடனான உறவுகளும் எமக்கு முக்கியமானவை. அது மிகவும் பழைமை வாய்ந்த உறவு. அந்த உறவு பிரதானமாக அபிவிருத்தி வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டது.

இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியிலேயே சீனா பிரதானமாக தொடர்புபட்டுள்ளது. சீனாவுடனான உறவுகளை முரண்பாடாக பார்க்கக் கூடாது. இன்னொரு நாட்டினால் மேற்கொள்ளப்படும் எந்த திட்டமும் மூலோபாய சமநிலை, அமைதி, பிராந்தியத்தின் பாதுகாப்பு என்பவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதில் இலங்கை தெளிவாக உள்ளது.

> “ஒன்றை விட்டுக் கொடுத்து ஒன்றைப் பெறுகின்ற ஆட்டம் அல்ல இது. இந்தியாவை நாம் ஒரு உறவினராக, நெருங்கிய நண்பராகவே கருதுகிறோம்.
>
> –காரியவசம்

இந்தியாவுக்கு பிரச்சினை ஏற்பட்டால் எமக்கும்கூட பிரச்சினை ஏற்படும். இந்தியாவை அடுத்து நாம் இருக்கிறோம். எனவே, நாம் இந்தியாவுக்கு எதற்காக பிரச்சினையை ஏற்படுத்தப் போகிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் எம்.பிக்கள் குழு இலங்கை வருகை

ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றக் குழுவினர் இலங்கைக்கு வருகை தர உத்தேசித்துள்ளதாக பெல்ஜியத்தில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

பிரஸல்ஸுக்கு சென்றிருந்த இலங்கையின் தென்னாசிய குழுவின் உறுப்பினர்கள் விடுத்த அழைப்புக்கு இணங்கவே இந்த விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஐந்து நாட்கள் விஜயத்தை மேற்கொண்டிருந்த இலங்கையின் தென்னாசிய குழுவில் இடம்பெற்றிருந்த பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையிலான குழுவினர் பல தரப்பட்ட விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதுடன் அழைப்பையும் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## தீவிபத்து சம்பவத்தில் 358 பேரிடம் விசாரணை

துறைமுக களஞ்சியசாலை தீப்பிடித்த சம்பவம் தொடர்பில் இதுவரையில் 358 பேரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. இதே வேளை, இச்சம்பவத்தால் சுமார் 400 மில்லியன் ரூபா வரை நட்டம் ஏற்பட்டிருப்பதாக இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பேச்சாளர் கூறினார்.

கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் அதேவேளை இலங்கை துறைமுக அதிகார சபையும் சேவையாளர்களிடையே தனியானதொரு விசாரணையை மேற்கொண்டு வருகின்றது. (அ-2)

# நிதியொதுக்கீடுகள் தொடர்பில்' தெளிவான ஒழுங்குகள் அவசியம்

## ஐ.நாவை கோருகிறது இலங்கை



அரச சார்பற்ற அமைப்புகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் தெளிவான ஒழுங்குகள் அவசியம் என்று இலங்கை வலியுறுத்தியுள்ளது.

இது நாட்டின் இறைமைக்கும் கௌரவத்துக்கும் பாதுகாப்பாக அமையும் என்று இலங்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமாதானம் தொடர்பான அமர்வின்போது இலங்கை இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு கிடைக்கும் நிதிகள் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் அதனை கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என்று இலங்கை வலியுறுத்தியுள்ளது. (அ-2)

# இலங்கையும் தாய்லாந்தும் அரசியலில் வலுப்பெற்று செயற்பட வேண்டும்

(கொழும்பு)

ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்ட நாடுகள் என்ற அடிப்படையில் இலங்கையும் தாய்லாந்தும் அரசியல் ரீதியில் வலுப்பெற்று செயற்பட வேண்டும் என தாய்லாந்து பிரதமர் ஜின்லக் சினவத்ரா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் இலங்கை வந்த தாய்லாந்து பிரதமர் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையும் தாய்லாந்தும் ஜனநாயக ஆட்சியை நடத்தும் இரண்டு நாடுகள் என்றபோதிலும் இருநாட்டு ஜனநாயக ஆட்சிகளிலும் சில சந்தர்ப்பங்களில் அழுத்தங்கள் காணப்பட்டன.

இலங்கையும் தாய்லாந்தும் பௌத்த தர்மத்தைக் கடைப்பிடிக்கும் நாடுகள் என்ற காரணத்தினால் பௌத்த தர்மத்தை வலுப் பெறச் செய்து அனுகூலமான வாழ்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.



உலக மொத்த சனத் தொகையில் 60 சதவீத மக்கள் ஆசிய வலயத்தில் வாழ்கின்றனர். இந்த மக்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கு போக்குவரத்து கட்டமைப்பு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஊடக ஒழுக்கவிதிகள் விரைவில் அறிமுகமாகும்

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊடக ஒழுக்க விதிகள் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் ஊடக ஒழுக்கக் கோவை பாராளுமன்றில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.உத்தேச வரைவுத் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இந்த உத்தேச திருத்தச் சட்டம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசியல்கட்சிகள்மற்றும்ஏனைய தரப்பினரிடமும் இது குறித்த தகவல்கள் திரட்டப்படவுள்ளன. அண்மைக்காலமாக சில ஊடகங்களின் செயற்பாடுகள் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளன.

எனவே, இவ்வாறான ஒழுக்கக் கோவையொன்றை வகுப்பது மிகவும் அவசியமானது.

நாட்டு மக்களுக்கும் சமூகத்திற்கும் பாதகம் ஏற்படக் கூடிய வகையில் ஊடகங்கள் செயற்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கையில் சீரற்ற காலநிலை; எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நீடிக்கும்

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது நிலவி வரும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நீடிக்கும் என்று வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இம்மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கும் இந்த சீரற்ற காலநிலை பெரும் மழையாக இந்து சமுத்திர நாடுகளான தென்னிந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இந்திய வளிமண்டல திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இம்மழை முதலில் கேரளாவில் ஆரம்பித்து படிப்படியாக ஏனைய பகுதிகளுக்கும் பரவும் என்று வளிமண்டல ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இதனை அமெரிக்காவின் தேசிய காலநிலை சேவைகள் நிலையமும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

பலத்த காற்றுடனான பெரு மழை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நீடிக்கும் என்று கூறப்படுகிறது.

இந்தக் காலநிலை வங்காள விரிகுடாவின் ஊடாக கிழக்கு இந்தியாவையும் பாதிக்கும் என்றும் காலநிலை அவதானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் குறித்த காலப்பகுதியில் மழையானது புத்தளம், குருநாகல், மாத்தளை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கும் பரவக்கூடும் என வானிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் இம் மாவட்டங்களின் சில பிரதேசங்களில் அதிகளவான மழையாக 100 மில்லி மீற்றர் வரை பெறக்கூடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி காற்று அவ்வப்போது நாட்டின் மேலாக வீசக் கூடும் எனவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமதிலா
அன்பின் வியா!

காதலர்களிடையே வாக்குவாதம் ஏற்பட காதலன், காதலி தன்னை வெறுத்து விட்டாள் என்ற முடிவுக்கு வந்து வேறொரு பெண்ணை தேடிச் சென்று விட்டான். பின் அவள் வெறுக்கவில்லை என்பதை உணர்ந்தான். இனி அவன் என்ன செய்ய வேண்டும். எந்தப் பெண் அவனுக்குப் பலியாகப் போகிறாள்?

*வாடிய பூவை சூடினாலும் சூடிய பூவைச் சூடக் கூடாது என்று ஒரு பழமொழி இருக்கிறதே. இரண்டாவது பெண் அவனிடம் பலியாகாமல் இருந்திட்டால் சரி. இல்லையென்றால் அவள் வாழ்வே பலியாகிவிடும்.*

---

செ.மிதுர்ஷா, தம்பசிட்டி
அன்பின் வியாசரே!

வேலை வெட்டி இல்லாது வீதியில் திரியும் இளைஞர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

*நாங்கள் வீதியில் திரிகிறோம். அவன் ஒருவன் நம் வாசலுக்கே பாண் கொண்டு வருகிறான். நாங்கள் வீதியில் திரிகிறோம். அவன் ஒருவன் வீதி வீதியாக அலைந்து நம் வீட்டிற்கே பஞ்சாபி கொண்டு வருகிறான். நாங்கள் வீதியில் நிற்கிறோம். அவன் ஒருவன் அந்த வீதியிலேயே ரம்புட்டான் வித்து பணம் சேர்க்கிறான். நாங்கள் வீதியில் நின்று விட்டு விதியை நொந்து என்ன பயன்.*

## தன் குழந்தையை தன் கையாலே தண்ணீரிலே போட்டு சாகடிப்பது தாய்மை செய்யும் செயலா?

ராம், கிளிநொச்சி
அன்பின் வியா!

பெண்களுக்கும் உங்களுக்குமான உறவு எப்படி?

*கண்ணையும் இமையையும் போன்றது. வெட்டி வெட்டி முழித்தாலும் ஒட்டிக் கொண்டேயிருக்கும்.*

---

வி.பிரதீசன், தும்பளை
அன்பின் வியா!

உமக்கு பள்ளிக்காலத்தில் ஆசிரியர் அடித்தது பற்றி கூறுங்கள் அண்ணா?

*ஒரு தரம் இரண்டு தரம் என்றால் சொல்லலாம். வடிவேலு பலபேரிடம் வாங்கியது போலத்தான் நம் நிலையும். ஒன்றில் இருந்து பன்னிரண்டு வரை நிறையப் பேரிடம் வாங்கியதால் ஆட்கள் நினைவில் இல்லை. But அடிப்பக்கத்தில் அடியின் அடையாளங்கள் இன்னும் அப்படியே இருக்கிறன.*

---

தர்சிகா, யாழ்ப்பாணம்
அன்பின் வியா!

தன் குழந்தையை தன் கையாலே தண்ணீரிலே போட்டு சாகடிப்பது தாய்மை செய்யும் செயலா?

*தாய்மை இயலாமையில் செய்யும் செயலே இது. ஒருவர் தற்கொலை, கொலை செய்ய முயற்சிப்பது குற்றம்தான். அதைவிட குற்றம் எது தெரியுமா? அவர் தற்கொலை, கொலை செய்ய காரணமாய் இருந்தவர் யாரோ அவர் தண்டிக்கப்படாதது. அன்றாடம் உழைத்து குடும்பத்தைப் பார்க்கும் ஒரு குடும்பத் தலைவன் ஐநூறு ரூபாய் உழைத்து நானூறு ரூபாவிற்கு குடித்து விட்டு மீது நூறில் தனக்கும் குழந்தைகளுக்கும் சாப்பாடு போட்டு குடும்பச் செலவையும் பார் என்று சொன்னால் ஒரு தாயால் வேறென்ன செய்ய முடியும்? இவ் எதிர்ப்புக்களைத் தாண்டி எந்தத் தாய் எதிர் நீச்சல் போடுகின்றாளோ அவளே உண்மையான தாய்.*

## இன்றைய காதலர்களின் போலித்தன் மைகள் எங்கே வெளிப்படையாகின்றன?

இ.சாந்தி, குப்பிளான் தெற்கு
அன்பின் வியாசரே !

இரு வீட்டாருக்கிடையில் சண்டைகளை ஏற்படுத்தி விட்டு இரு வீட்டாரின் சண்டைக்கு நடுவே நின்று சண்டையை ரசிக்கும் குடும்பப் பெண்ணுக்கு என்ன தண்டனை வழங்கலாம்:

*முதலில் அவரை குடும்பப் பெண் என கூறுவதை நிறுத்துங்கள். அதுதான் அவருக்குக் கொடுக்கக் கூடிய அதிகபட்ச தண்டனை.*




வே.வே. அகிலேஸ்வரன், மருதங்கேணி
அன்பின் வியா!

இன்றைய காதலர்களின் போலித்தன் மைகள் எங்கே வெளிப்படையாகின்றன?

*மறைவிடத்தைக் கண்டவுடன்.*

---

சு.ஜெயரூபன், பருத்தித்துறை
அன்பின் வியா!

நம் நாட்டில் இடம்பெறும் வாகன விபத்துக்களால் ஏற்படும் பரிதாப மரணங்களைத் தடுக்க என்ன வழி?

*பாதைகளை சீரமைக்க முன் பாதசாரிகளுக்கும் சாரதிகளுக்கும் சரியான வீதி விதி முறைகளை கற்றுக் கொடுக்க வேண்டும். இல்லையெனின் வீதிகளிலேயே எம் விதி முடியத்தான் செய்யும்.*

---

ந.மோகனரூபன், சுழிபுரம்.
அன்பின் வியா!

உண்மையான நட்பை பற்றி உங்களின் கருத்து என்ன?

*கண்ணை கலங்க வைக்கும் பிகரு வேணாம்டா. நமக்கு கண்ணீர் அஞ்சலி போஸ்டர் ஒட்டும் நண்பன் போதும்டா.*

### வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்....

**கணவனும் மனைவியும் வாழ்க்கைச் செலவை எப்படிக் குறைப்பது என யோசித்துக் கொண்டிருந்தார்கள்.**

**கணவன்:- நீ பொம்பளயா லட்சணாமா சுவையா சமையல் செய்தா எதுக்கு வேலைக்காரிய வைச்சிருக்கணும்.**

**மனைவி:- (கோபத்துடன்) நீங்களும் நல்ல ஆம்பளயா இருந்தா வீட்டு தோட்டக்காரன எதுக்கு வைச்சிருக்கணும்**

**கணவன்:-!!!???**

### அன்பு வாசகர்களே....!

உங்கள் கேள்விகளை
ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்ற
முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

### நிலத்துக்குக்கீழ் நூறு அடிவரை

# ஸ்கான் செய்யும் அதிநவீன அமெ.கருவியுடன் இருவர் கைது

நிலத்துக்குக்கீழ் 100 அடிவரை ஸ்கான் செய்யக்கூடிய நவீன இலத்திரனியல் ஸ்கானருடன் இருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட நவீன டிஜிற்றல் தொழில்நுட்பத்திலான இந்த விசேட ஸ்கானரின் பெறுமதி 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாகும் என விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக குறித்த ஸ்கானர் இயந்திரத்துடன் இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து நிலத்தின் கீழ் ஸ்கான் செய்யக்கூடிய ஸ்கானர் இயந்திரம், இதற்குப் பயன்படுத்தக் கூடிய மடிக்கணனி, கையடக்கத் தொலைபேசி ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடவத்தை, கந்தளாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரே விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டவராவர்.

உரிய அனுமதியின்றி குறித்த ஸ்கானர் இயந்திரம் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் மேலதிக விசாரணைகளுக்காக இவர்கள் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்ப டைக்கப்பட்டிருப்பதாகவும் விசேட அதிரடிப்ப டையினர் தெரிவித்தனர்.

இதேவேளை புறக்கோட்டைப் பகுதியில் 3 சந்தேகநபர்கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கடனட்டைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் பிரித்தானியாவில் இருந்து அண்மையில் இலங்கைக்குவந்தவரெனவும் ஏனைய இருவரும் இலங்கையில் வசிப்பவர்கள் என்றும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கடனட்டைகளை பயன்படுத்தி வங்கிகளிலிருந்து 200 முதல் 400 கோடி ரூபாவரை பெறுவதற்கு இவர்கள் திட்டமிட்டிருந்ததாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து வந்தவர் அங்குள்ள கடனட்டை பாவனையாளர்களின் கடவுச்சொற்களை களவாடி அவற்றைப் பயன்படுத்தி இங்கு கடனட்டைகளை தயாரித்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மட்டு.மினிசூறாவளி; 35 வீடுகள் பாதிப்பு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிரதேசத்தில் நடைபெற்ற மினி சூறாவளியால் பாதிப்புக்குள்ளான வீடுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றஉறுப்பினர்பா.அரியநேத்திரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை, தென் மேற்கு, பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அம்பிளாந்துறையில் கடந்த 30 ஆம் திகதி மாலை 5 மணிக்கு வீசிய மினி சூறாவளியால் 35 வீடுகள் பாதிப்புக்குள்ளாகின. இவற்றில் 5 வீடுகள் முற்றாக சேதத்திற்குள்ளாகியதுடன் வேள்ட்விஷன் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்டன. முன்பள்ளியும் ஆலய கலையரங்கும் சேதத்திற்குள்ளாகின.

இந்தப் பாதிப்புக்குள்ளான வீடுகளையும் பொதுக் கட்டடங்களையும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நேரில் சென்று பார்வையிட்டதுடன் குறித்த அனர்த்தம் சம்பந்தமாக நிவாரணம் வழங்கும்படி மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். (அ-2)

## ஜூன் மாத உற்சவங்கள்

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் ஜூன் மாத பிரதான உற்சவங்கள் பற்றிய விபரங்கள் ஆலய நிர்வாகத்தினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை சேக்கிழார் குருபூசை, 15 ஆம் திகதி சனிக்கிழமை ஆனி மாத சங்கிரா ந்தி தீர்த்தம், 20 ஆம் திகதி வியாழக்கிழமை சிவத்தமிழ்ச் செல்வி அம்மா குருபூசை, 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆனி மாத பூரணைத்திருவிழா என்பன நடைபெறவுள்ளன. (அ)

## வாக்காளர்களாக பதிவு செய்துகொள்க

நாட்டு மக்கள் அனைவரையும் வாக்காளர்களாக பதிவு செய்து கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

தகுதியான அனைவரும் தங்களை வாக்காளர்களாக பதிவு செய்துகொள்ள வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

வாக்காளர்களாக பதிவு செய்து கொள்வதன் அவசியத்தை அனைவருக்கும் உணர்த்த வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர் பதிவின் அவசியத்தை உணர்த்தக்கூடிய வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஐக்கிய நாடுகளின் குழுவுக்கு காரியவசம் மீண்டும் தெரிவு

இலங்கையின் இந்திய உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் மீண்டும் ஐக்கிய நாடுகளின் புலம்பெயர் பணியாளர் குழுவின் உறுப்பினராக தெரிவு செய்ளப்பட்டுள்ளார் என இலங்கையின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் புலம்பெயர் பணியாளர் குழு 12 நிபுணர்களைக் கொண்டது.

இவர்களின் பணிக்காலம் 4 வருடங்களாக இருக்கும். இந்நிலையில் புலம் பெயர் பணியாளர்களின் நலன்களுக்கும் அவர்களின் உறவினர்களது நலன்களுக்கும் இந்தக் குழு பொறுப்பாக இருக்கும்.

உலகளாவிய ரீதியில் இன்று 175 மில்லியன் பேர் புலம் பெயர் பணியாளர்களாக உள்ளனர்.

எனினும் உலகளாவிய ரீதியில் பல்லாயிரக் கணக்கானோர் சட்ட விரோத பணியாளர்களாக உள்ளனர் என்பது புள்ளி விபரங்களின் மூலம் தெரியவந்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காதல் கிசு கிசுக்களில் கொடிகட்டிப் பறந்த சிம்பு

# காவி வேட்டியுடன் இமயமலைக்கு சென்று வந்தார்



எப்பொழுதும் பரபரப்பாக பேசப்படுகின்ற நடிகர் சிம்பு இப்பொழுது ஆன்மீகத்தின் பக்கம் தனது பார்வையை திருப்பியிருக்கிறார்.

"எனக்கு தேவையான பணம், புகழ், ரசிகர்கள் கிடைத்திருக்கிறார்கள். என் வாழ்வின் அடுத்த பக்கத்தை வாழ விரும்புகிறேன்" என்று கூறி காவி வேட்டி, உருத்திராட்ச மாலையுடன் இமயமலைக்கு சென்று அங்குள்ள பிரசித்திபெற்ற கோயில்களில் தரிசனம் செய்த சிம்பு, அங்குள்ள குகைகளில் அமர்ந்து தியானம் செய்து விட்டு ஒரு பழுத்த ஆன்மீகவாதியாக தாயகம் திரும்பியிருக்கிறார்.

காதல் கிசு கிசுக்களில் கொடிகட்டிப் பறந்த சிம்புவா காவி வேட்டியுடன் சாமியார்போல திரிகிறார் என்று திரையுலகமே வியப்பில் ஆழ்ந்து போயுள்ளதாம்.

ரஜினி எவ்வளவு தான் பிரபல்யமாக இருந்தாலும் நடைமுறையில் ரொம்ப எளிமையானவர். அது மட்டுமல்லாமல் ஆன்மீகத்தில் அதீத ஈடுபாடும் கொண்டவர். இதே பாணியைத்தான் இப்பொழுது சிம்புவும் பின்பற்றத் தொடங்கியிருக்கிறாராம்.

இமயமலைக்கு சென்றது மட்டுமல்லாமல் சில பிரபலமாக சித்தர் குகைகளில் உட்கார்ந்து தியானமும் செய்துவிட்டு வந்துள்ளாராம் சிம்பு.

## இவ்வருட இறுதியில் விஸ்வரூபம் 2

கமல்ஹாசன் இயக்கத்தில் உருவாகி வரும் விஸ்வரூபம் 2 இந்த ஆண்டு இறுதியில் வெளியாகும் என திரையுலக வட்டாரங்களில் தகவல் வெளியாகியுள்ளது.

படத்தின் இரண்டாம் பாகம் இந்தியாவில் என்று அறிவிப்போடு விஸ்வரூபம் படத்தை முடித்திருந்தார் கமல்.

ஏற்கனவே கணிசமான காட்சிகளை படமாக்கியும் வைத்திருந்த கமல், மீதிக் காட்சிகளை தாய்லாந்தில் படமாக்கி வருகிறார். அங்கு கமலுடன் ஆன்ட்ரியா நடிக்கும் ஆக்ஷன் காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன.

இதன் இறுதிக்கட்ட படப்பிடிப்பு டில்லியில் நடைபெற உள்ளது. இப்படத்தினை ஒஸ்கார் பிலிம்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது.


## சந்தானம் காட்டில் மழை

தற்போது சந்தானம் காட்டில்தான் அடைமழை கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது. அவருக்காக இயக்குநர்கள் போட்டி போட்டுக்கொண்டு காத்திருப்பதால் தூங்கக்கூட நேரமில்லாமல் இரவு பகலென்று இடைவிடாமல் நடித்துக்கொண்டேயிருக்கிறார் சந்தானம்.

சிங்கம் -2 படத்தில் நடித்துக்கொடுத்த சந்தானம டப்பிங் பேச வராமல் கோவையில் தலைமறைவாகி விட்டாராம். என்ன ஏதென்று விசாரித்தபோது உதயநிதியின் இது கதிர்வேலன் காதல் படப்பிடிப்பில் அவர் இருப்பது தெரிந்திருக்கிறது. டப்பிங் பேச அழைத்தபோது வருகிறேன் என்றாராம்.

ஆனால், உதயநிதி யூனிட் அவரை வெளியே செல்ல அனுமதிக்கவில்லையாம். எங்கள் படத்தை முடித்து விட்டு எங்கே வேண்டுமானாலும் செல்லுங்கள் என்று இறுக்கிப்பிடித்துக்கொண்டார்களாம்.

# காவலன் நடிகை நீபாவுக்கு டும்... டும்... டும்....



கொலிவுட்டில் விஜய் நடித்த காவலன் படத்தில் நடித்த நடிகை நீபா, வேலூரைச் சேர்ந்த தொழிலதிபரை மணந்தார்.

இவர் பள்ளிக்கூடம், கண்ணும் கண்ணும், அம்முவாகிய நான் படங்களிலும் நடித துள்ளார். தொலைக்காட்சி தொடர்களிலும் நடித்துள்ளார்.

நீபாவுக்கும் வேலூரை சேர்ந்த கட்டுமான தொழில் செய்யும் சிவக்குமாருக்கும் சென்னையை அடுத்த காட்டுபாக்கத்தில் உள்ள ஸ்ரீலட்சுமி பிரசன்ன மகாலில் திருமணம் நடைபெற்றது. வைதீக முறைப்படி புரோகிதர்கள் மந்திரம் ஓத நீபா கழுத்தில் சிவக்குமார் தாலி கட்டினார். நடிகர், நடிகைகள் உட்பட திரையுலகினர் மற்றும் உறவினர்கள் அட்சதை தூவி வாழ்த்தினார்கள்.

# விஜய்க்கு தொண்டர் படை

நடிகர் விஜய் அவ்வப்போது சமூக சேவைகளில் இறங்கிவருவது தெரிந்ததே. அந்த வகையில் சமீபத்தில் கூட இரண்டு முறை இலவச திருமணம் நடத்திவைத்தார்.

ஆனால், அந்த நிகழ்ச்சிகள் நடந்த போது சரியான பாதுகாப்பு இல்லாததால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் பாதுகாப்பு கருதி அந் நிகழ்ச்சியில் இருந்து விஜயே வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், தற்போது தலைவா படத்தில் நடித்து வரும் விஜய், அப்படத்தின் ஓடியோ விழாவை யூன் மாதம் 22ஆம் திகதி காலை நடத்துகிறார்கள்.

அன்று விஜய்யின் 39 ஆவது பிறந்த நாள் என்பதால், அன்றைய தினம் மாலையில், மீனம்பாக்கம் ஏ.எம். ஜெயின் கல்லூரி வளாகத்தில் 3900 ஏழை மக்களுக்கு நலத்திட்ட உதவி களை வழங்கப் போகிறாராம் விஜய்.

இந்த விழாவுக்கு தேவை யான ஏற்பாடுகளை விஜய் மக்கள் இயக்கத்தினர் செய்கிறார்களாம். மேலும், இது வரை விஜய் சம்பந்தப்பட்ட நிக்ழ்ச்சிகள் நடந்தபோது சரியான பாதுகாப்பு இல்லா மல் இருந்தது.

ஆனால். இனிமேல் நடககும் விழாக்களில் அவர் ரசிகர்களே தொண்டர் படை அமைக்கப் போகிறார்களாம்.

விழாக்களில் எப்படி எப் படி பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பது பற்றிய பயிற்சிகள் அவர்களுக்கு முறையாக வழங்கப்பட்டு வருகிறதாம்.

# நான் ஒரு கோடி வாங்குபவள் அல்ல


பிரியா ஆனந்த்

எதிர்நீச்சல் படம் ஹிட்டானதால் அதில் நாயகியாக நடித்த பிரியா ஆனந்த் சம்பளத்தை ரூ.1 கோடி உயர்த்தி விட்டதாக செய்திகள் பரவியுள்ளன.

ஏற்கனவே நயன்தாரா, திரிஷா, அனுஷ்கா, காஜல் அகர்வால் ஹன்சிகா, அமலாபால், அஞ்சலி போன்றோரும் அதிக சம்பளம் கேட்கிறார்கள். அவர்கள் பட்டியலில் தற்போது பிரியா ஆனநதும் சேர்ந்துள்ளாராம்.

பிரியா ஆனந்த் ஏற்கனவே ஜெய் ஜோடியாக "வாமனன்" படத்தில் நடித்தார். சித்தார்த்துடன் 180 படத்திலும், ஸ்ரீதேவியுடன் இங்கிலீஷ் விங்கிலீஷ் இந்திப் படத்திலும் நடித்தார். தற்போது "வைராஜா வை" என்ற படத்தல் நடிக்கிறார். சம்பளத்தை உயர்த்தியதாக கூறப்படுவதற்கு பிரியா ஆனந்த் பதில் அளிக்கையில்,

சினிமாவில் வளரும் ஒவ்வொரு நடிகையும் தங்கள் சம்பளத்தை உயர்த்திக் கொளவது வழக்கமானதுதான். நான் சில பெரிய படங்களில் நடித்து வருகிறேன். தயாரிப்பாளர்கள் என் தகுதிக்கு ஏற்ப சம்பளத்தை கொடுக்கின்றனர். ஆனால் சமபள விடயத்தில் வெளியாகும் செய்திகள் மிகைபடுத்தப் பட்டவை ஆகும். நான் ரூ.1 கோடி வாங்கும் நடிகை அல்ல. இவ்வாறு பிரியா ஆனந்த் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய்க்கு செல்வோருக்கு கடுமையான கதிரியக்க தாக்கம்

## நாசா எச்சரிக்கை

செவ்வாய்க் கிரகத்திற்கு செல்லும் விண்வெளி வீரர்கள் எதிர்காலத்தில் கடுமையான கதிரியக்கத் தாக்கத்திற்கு உள்ளாக நேரிடும் என்று அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா எச்சரித்துள்ளது.

பாதுகாப்பு விதிமுறைகள் செய்யப்பட்டுள்ள அளவை விட கூடுதலான அளவுக்கு அங்கு கதிர்வீச்சு தாக்கத்துக்கு விண்வெளி வீரர் கள் இலக்காக நேரிடும் என்று நாசா கூறு கிறது.

உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய புற்று நோய்களுக்கான அபாயத்தை அதிகரிக்கக்கூடிய அளவில் இந்த கதிர் வீச்சு இருக்கும் என்றும் விண்வெளி வீரர்களை நாசா எச்சரித்துள்ளது.

இதனை கியூரியாசிட்டி ரோவர் விண்ணூர்தி மூலம் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள் உறுதி செய்துள்ளன.

செவ்வாயின் தரையில் ஊர்ந்து சென்று ஆய்வு நடத்திய ஒரு கார் அளவிலான இந்த ரோபோ ஊர்தியை அங்கு கொண்டு செல்வதற்கு அரை- பில்லியன் கிலோமீற்றர் தூர பயணத்துக்கு 8 1/2 மாதங்களுக்கும் அதிக காலம் எடுத்துள்ளது.

இப்பயணத்தை கிழமைகள் கணக்கில்

"அமெரிக்காவின் பல்வேறு நிறுவனங்களும் 2030 ஆம் ஆண்டில் செவ் வாய்க்கு விஞ்ஞானிகளை அனுப்பத் திட்டமிட்டுள்ள நிலையில் அங்கு மனிதர் களுக்கு தீங்கு விளைவிக்கும் கதிர்வீச்சு அதிகமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது
--நாசா--

விரைவுபடுத்துவதற்கு போதுமான உந்து சக்திக்கான தொழில்நுட்ப வசதி இன்னும் இல்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

செவ்வாய்க்கிரகத்துக்கு விண்கலத்தை அனுப்பிய அமெரிக்கா 2030 இல் விஞ்ஞானிகளை அனுப்பி ஆய்வு மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. அதே போன்று ஒரு தனியார் நிறுவனம் செவ்வாய்க் கிரகத்திற்கு ஆட்களை சுற்றுலா அனுப்பவும் திட்டமிட்டு அதற்கான வேலைகளில் ஈடுபட்டுள்ளது.

ஆனால், அங்கு கதிர்வீச்சு அதிகமாக இருப்பது தற்போது தெரியவந்துள்ளது. 50 சி.டி ஸ்கேஸ் அளவுக்கு கதிர்வீச்சு வெளிப்படும். அதன் மூலம் புற்று நோய் உருவாகும் என தெரியவந்துள்ளது.

கடந்த 8 1/2 மாதங்களாக என்டீவர் விண்கலம் செவ்வாயில் தரை இறங்கி ஆய்வு செய்து வருகிறது. இது குறித்து ஆய்வு மேற்கொண்ட போது அதில் கதிர்வீச்சு தாக்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் செவ்வாய்க்கிரகத்தில் மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் கதிர் வீச்சு இருப்பது நிரூபணமாகியுள்ளது. (அ-2)

## மீண்டும் பறவைக் காய்ச்சல்; 38 பேர் சீனாவில் மரணம்

பறவைக்காய்ச்சலுக்கு இலக்காகி சீனாவில் 38 பேர் பலியாகியுள்ளனர். சீன நாட்டின் ஷங்காய் நகரில் கடந்த பெப்ரவரி மாதம் 27 மற்றும் 87 வயதுடைய இருவர் பறவைக்காய்ச்சலுக்கான எச்7என்9 என்ற அறிகுறியுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த நோயாளிகள் இருவரும் சில வாரங்களில் இறந்து போயினர்.

இந்நிலையில் பறவைக்காய்ச்சல் நோய்க்காக ஷங்காய் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த ஷென் (வயது 59) என்பவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.


சீனவில் 131 பேருக்கு பறவை காய்ச்சலுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. இவர்களில் 38 பேர் பலியாகினர் என தெரிய வருகின்றது.

கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் எச்5 என்1 என்ற வைரஸ் கொண்ட பறவைக் காய்ச்சலால் 360க்கும் மேற்பட்டோரும் கோடிக் கணக்கான பறவையினங்களும் அழிந்தன என்று புள்ளிவிபரக்கணக்கீடுகள் கூறுகின்றன.

நோய்த்தொற்று பரவிய பண்ணைகளுடன் தொடர்பு வைத்திருந்த மக்களே இவ்வாறு பறவைக்காய்ச்சலால் பாதிப்புக்கு உள்ளாகினர் என்று உலக சுகாதரக் கழகம் தெரிவித்துள்ளது. (அ-2)

# பிலிப்பைன்சில் குண்டுவெடிப்பு; ஆறு பேர் உயிரிழப்பு

(மணிலா)



பிலிப்பைன்ஸ் குடியிருப்புப் பகுதியில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் 6 பேர் பலியாகினர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவின் புறநகரில் போர்ட் அடுக்குமாடிக் குடியிருப்பில் நேற்று முன்தினம் மாலை சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்று வெடித்தது. இதில் அறுவர் பலியாகினர்.


இதில் அங்குள்ள வீட்டில் இருந்த மூவர் பலியாகினர். மேலும் மூவர் வான் ஒன்றில் தப்பிச் செல்லமுயன்ற போது, இடிந்து விழுந்த சுவரின் இடிபாடுகளுக்கு இடையில் சிக்கி இறந்தனர். ஐவர் காயமடைந்தனர்.

குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட அந்தக் கட்டடத்தின் இடிபாடுகள் அந்தப் பகுதி எங்கும் சிதறிக் கிடந்தன. குண்டுவீச்சின் வேகத்தால் சில இடங்களில் பல மைல் தூரத்திற்கு அப்பாலும் கட்டடத்தின் சிதைவுகள் சென்று விழுந்தன. இதையடுத்து அந்தக் குடியிருப்பில் உள்ள அனைவரும் பத்திரமாக வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், பிலிப்பைன்ஸ் நாட்டு ஜனாதிபதி பெரிக்னோ அகுவிநோவும், உள்துறை செயலர் மார்ரோக்சாசும் விபத்து நடத்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டனர்.

இந்த விபத்துக் குறித்து தீவிர விசாரணை நடத்தப்படும் என்று உறுதியளித்த ஜனாதிபதி இதற்குக் காரணம் விபத்தா? அல்லது தீவிரவாதிகளின் செயலா? என்பதை உடனே கூற இயலாது என்று தெரிவித்தார். (அ-2)



அமெரிக்கா வந்துள்ள நேட்டோ செயலாளர் ஜெனரல் ஆண்டர்ஸ் போக் ராஸ்முசன் ஓவல் மாளிகையில் ஜனாதிபதி பராக் ஒபாமாவை சந்தித்து கைலாகு கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

# சிரிய கிளர்ச்சியை முடிவுறுத்த ஜெனீவாவில் பேச்சுவார்த்தை

(மொஸ்கோ)

சிரியாவில் தொடரும் கிளர்ச்சியை முடிவுக்கு கொண்டுவர ஜெனீவாவில் எதிர்வரும் 5 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

சிரியாவில் நடைபெற்று வரும் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவர ஐ.நா.தீவிர ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. இதன் ஒருபகுதியாக அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஐ.நா.அதிகாரிகள் பங்கேற்கும்பேச்சுவார்த்தை நிகழ்வு ஜெனீவா நகரில் நடைபெறவுள்ளது.

அதில் அமெரிக்கா சார்பில் துணை அமைச்சர் வென்டி ஷெர்மான், ரஷ்யா சார்பில் வெளியுறவு உதவி அமைச்சர் மிக்கேல் போஹாநோவ், ஐ.நா.சார்பில் ஜெப்ரி பில்த் மேன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இதன்பின் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி, ரஷ்ய வெளியுறவு அமைச்சர் ரோல் லாவ ரோவ் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (அ-2)

# பாக். இல் அம்மைநோய்; 120 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானில் அம்மை நோயால் பீடிக்கப்பட்டு 120 பேர் உயிரிழந்தனர். இவ்வாண்டு ஆரம்பம் முதல் இதுவரையில் உயிரிழந்தோர் பற்றிய புள்ளி விபரங்களின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் பாகிஸ்தானின் 70 நகரங்களில் அம்மை நோய் காரணமாக சுமார் 14 ஆயிரத்து 300 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் ஏற்பட்ட உயிரிழப்புகளில் 120 இற்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்கள் எனத் தெரிய வருகின்றது. அம்மை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுவதான நிலை நிலவுவதாக பாகிஸ்தான் சுகாதார அதிகாரிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, 30 மில்லியன் நோய்த் தடுப்பூசிக்கான தேவை உள்ள பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் தற்போது 7 மில்லியன் தடுப்பூசி மருந்துகளே உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# தங்க சுரங்க தொழிற்சாலையை கிர்கிஸ்தான் பொறுப்பேற்கவேண்டும் மக்கள் கோரிக்கை

(பிஷ்கெக்)

கனடாவின் கட்டுப்பாட்டில் உள்ள கும்டோர் தங்க சுரங்கத்தை கிர்கிஸ்தான் அரசு தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வர வேண்டுமென கோரி அந்நாட்டு மக்கள் போராட்டம் நடத்தி வரும் நிலையில் அங்கு அவசர கால நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

மத்திய ஆசிய நாடான கிர்கிஸ்தானின் வடக்கே உள்ள இஸ்ஸிக்குல் மாகாணத்தில் கும்டோர் தங்க சுரங்க தொழிற்சாலை செயற்பட்டு வருகிறது. ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் இது கனடா நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதை கிர்கிஸ்தான் நாட்டின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் என கோரி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சமீபத்தில் நடந்த போராட்டங்களின் போது 92 பேரை பொலிஸார் கைது செய்தனர். அவர்களை விடுதலை செய்யக் கோரி நேற்று முன்தினம் போராட்டங்கள் நடந்தன.

அப்போது பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அவர்களை கலைக்க அதிகாரிகள் கண்ணீர் புகைக் குண்டுகளையும், இறப்பர் குண்டுகளையும் பயன்படுத்தினர். இதில் இரு தரப்பிலும் 55 பேர் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, எதிர்வரும் 10 ஆம் திகதி வரை அவசரகால பிரகடனம் அமுலில் இருக்கும் என அரசு தெரிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவுக்கு...

சிவலிங்கம் சிவநாதன், அமெரிக்காவில் வெள்ளை மாளிகையினால் வழங்கப்படும் உயர்விருதான மாற்றத்திற்கான விசேட நபர் ("Champion of Change") விருது வழங்கி அண்மையில் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 30-ம் திகதி சிவலிங்கம் சிவநாதனுக்கு மதிப்பளிக்கும் வகையில் வெள்ளை மாளிகையில் வழங்கப்பட்ட விருதினை அடுத்தே இந்த தகவல் தெரியவந்துள்ளது.

அமெரிக்க பிரஜைகளை உலகில் சிறந்த மற்றும் முக்கியமான பிரஜைகளாக மாற்றுவதற்கு தமது அறிவை பயன்படுத்துபவர்களுக்கு இந்த கௌரவ விருது வழங்கப்படுவதாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் உள்ள இலினோயிஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றி வரும் சிவலிங்கம சிவநாதன், அல் -குவைதா தலைவர் ஓசாமா பின் லேடனை கண்டுப்பிடிக்கும் நடவடிக்கைக்கு தேவையான தொழில்நுட்பத்தை முழுமையாக கண்டுப்பிடித்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு தேவையான நைட விஷன் தொழில்நுட்பம் உள்ளிட்ட உபகரணங்களை பேராசியரே தயாரித்துள்ளார்.

பேராசிரியர் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்காவின் பிரதான தொழில்நுட்ப அதிகாரி டோட் பார்க், இப்படியான அறிவார்ந்தவர்கள் அமெரிக்காவுக்கு வந்து தாம் அவர்களுடன் பணியாற்ற கிடைத்தமை மதிப்புக்குரியது என தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் சாவகச்சேரி பிரதேசத்தில் பிறந்த பேராசிரியர் சிவலிங்கம், அணுமின் தொழில்நுட்பம் தொடர்பில் புகழ் பெற்றவர்.

அமெரிக்க பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வரும் அவருக்கு சகல வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டியது தமது கடமை எனவும் அவர் கூறியுள்ளார். (எ-11)

## உயர் பாதுகாப்பு...

கொண்டு சுமார் 12 ஆயிரம் ஏக்கர் காணிகள அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணப்படும் காணி பிரச்சினைகளுக்கு அடுத்த வருடத்திற்குள் தீர்வு காணப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)


## தலதா மாளிகை...

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் பூஜை பொருட்களின் தரம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

தானமாக வழங்கப்படுகின்ற பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகள் உரிய நடைமுறைக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தாய்லாந்து பிரதமரும் நேற்று முன்தினம் கண்டி தலதா மாளிகை விஜயம் செய்து வழிபாட்டில் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# தோனி மௌனத்தை கலைக்க வேண்டும் - கங்குலி



கிரிக்கெட் சூதாட்டம் பற்றி சச்சின் கருத்து தெரிவித்துள்ள நிலையில் முக்கிய பொறுப்பில் உள்ள இந்திய அணித் தலைவர் டோனி தனது மௌனத்தைக் கலைத்து கருத்து கூறுவது அவசியம் என்று முன்னாள் அணித்தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடக பேட்டி ஒன்றில் கங்குலி கூறுகையில், ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக அணித் தலைவர் தோனி தனது மௌனத்தைக் கலைத்து கருத்து தெரிவிக்க வேண்டும்.

அவர் நேரடியாக பதில் அளிக்காவிட்டாலும் "ஒன்-லைன்" மூலம் தனது கருத்துக்களை சொல்லலாம்.

தோனி இந்த நேரத்தில் கடினமான நிலையை எடுத்துள்ளார். அல்லது அவர் தற்போதைக்கு சம்பியன்ஸ் தொடரில் விளையாடுகிறோம். அதில் வெற்றி பெற்று எங்களது உண்மையை நிரூபிப்போம் என்றாவது சொல்லி இருக்கலாம்.

ஏனெனில் ஒவ்வொருவரும் தோனியின் கருத்தை எதிர்பார்க்கிறார்கள். கிரிக்கெட்டில் நடைபெறும் எல்லா தவறுகளுக்கும் அணித் தலைவர் பொறுப்பு ஏற்க முடியாது.



இந்த விடயத்தில் நான் டோனிக்கு ஆதரவாக இருக்கிறேன். கிரிக்கெட் சூதாட்டத்தை முன்கூட்டியே கண்டு பிடித்து தடுக்க ஐ.பி.எல். நிர்வாகத்தால் ஏன் முடியவில்லை என்று கேட்கிறார்கள். அது எளிதான காரியம் அல்ல.

ஒவ்வொரு வீரரையும் என்ன செய்கிறார் என்று கண்காணித்துக்கொண்டு இருக்க முடியாது என்றும் ஆனால் கவனமாக இருங்கள் என்று சொல்ல மட்டுமே முடியும் எனவும் கூறினார்.

## பாலசிங்கத்தை இழந்த புலிகள்...

வேளையில் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இறுதி மரியாதையை செலுத்தியதுடன் குடும்ப உறவினர்களுடன் தனது துயரத்தையும் பகிர்ந்து கொண்டார்.

இதன் பின்னர் அங்கு நின்ற ஊடகவியலாளர்களிடம் உரையாடும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு:-

"கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இழப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாக இருந்தது. ஏனெனில், அவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் தத்துவ ஆசிரியராக இருந்ததுடன் அரசியல் ரீதியில் மிக நுட்பமான முறையில் செயற்பட்டார்.

அதேமாதிரி இன்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் இழப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாபெரும் இழப்பாகும். ஏனெனில், அக்கட்சியின் அரசியல் நடவடிக்கைகளில் இவரின் மதிநுட்பம் மேலோங்கி இருந்தது.

இறக்கும்வரை ஐக்கிய தேசியக் கட்சியின பிரதிப் பொதுச் செயலாளராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன, அக்கட்சி 2002இல் ஆட்சியமைத்தபோது புனர்வாழ்வு அமைச்சராக 2004 வரை இருந்து திறம்பட சேவையாற்றினார். அந்தக் காலத்தில் நான் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தேன்.

அக்காலத்தில் ஒரு நாள் என்னை யாழ்ப்பாணத்திற்கு அமைச்சர் மகேஸ்வரனுடன் அழைத்துச் சென்ற ஜயலத் ஜயவர்த்தன அங்குள்ள மக்களுக்கு என்னை அறிமுகப்படுத்தி சில நிகழ்வுகளில் என்னை பங்குபற்றச் செய்தார். இவ்வாறு நல்ல பண்புகளைக் கொண்டவர் ஜயலத் ஜயவர்த்தன.

இவர் எனது அரசைக் கடுமையாக விமர்சித்தது உண்மைதான். எனினும், டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவின் நல்ல பண்புகளை நான் மறக்கமாட்டேன்" என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## கவுணாவத்தையில்...

கடா வெட்டப்பட்டு தலையும் படைக்கப்பட்டது.

தொடர்ந்து ஏனைய கடாக்கள் வெட்டப்பட்டன.

நேற்று இடம்பெற்ற இந்த வேள்வியில் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஆட்டுக்கடாக்கள் அதிகாலையில் உழவு இயந்திரங்கள் மற்றும் லாண்ட் மாஸ்டர்களில் கொண்டு வந்து இறக்கப்பட்டன.

இதனை விட சுமார் 300க்கும் மேற்பட்ட சேவல்களும் பலியிடப்பட்டன.

இந்த நிகழ்வில் சுமார் பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்து கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## சீனாவுடன் இலங்கை...

ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவின் சீன விஜயத்தின் போது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள குறித்த ஒப்பந்தங்களைத் தவிர, பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், இது குறித்து சீன வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஹாங் லீயிடம் செய்தியாளர் கேள்வி எழுப்பிய போது, இவ்விரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பிலான விபரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

இதனால் பாதுகாப்புத் தொடர்பாக சீனாவும், இலங்கையும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இது சீனாவுக்கும், இலங்கைக்கும் இடையேயான படைத்துறை சார்ந்த ஒத்துழைப்புக்களை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையில் இலங்கைக்கு அதன் முதலாவது தொடர்பாடல் செய்மதியை வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் சீனா கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட போதிலும், இந்த ஒப்பந்தம் தொடர்பிலான நிதி மற்றும் வேறு விடயங்கள் வெளியிடப்படவில்லை.

இவ்விரு தரப்பினருக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் இலங்கையில் சீனாவின் பிரசன்னத்தை மேலும் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் நெடுஞ்சாலைகள் மற்றும் புகையிரதப் பாதைகள் போன்றவற்றை அமைப்பதற்கு உதவிகளை வழங்குவதாக சீனா உறுதியளித்துள்ளது. குறிப்பாக கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான புதிய அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதற்கு உதவி வழங்குவதாக சீனா உறுதி வழங்கியுள்ளது.

கொழும்பு - யாழ்ப்பாண அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு - கண்டி - குருணாகல் அதிவேக நெடுஞ்சாலை மற்றும் தெற்கு அதிவேகப் பாதையின் மாத்தறை முதல் கதிர்காமம் வரையான பகுதி ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கு சீனா உதவி வழங்கவுள்ளது.

அதேவேளை, சீனாவுடனான இலங்கையின் உறவுகள் மேலும் வலுப்பெறுவது தொடர்பில் இந்திய ஊடகங்கள் கவலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்

## பற்றிக் பெஞ்சமின்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை, சம்புக்குளம் கல்மடுவை வசிப்பிடமாகவும் கொண்ட பற்றிக் பெஞ்சமின் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பற்றிக் - சவினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மேரி மெக்ரலினின் (தங்கராணி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லக்கண்டு, அமிர்தநாதர், அருட்தந்தை பற்றிக் ஞானபிரகாசம், மரியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்ரன், சாள்ஸ், ஜோய், தீபன், கஜசிந்தா, செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயவதி, றெஜினம்மா, மேபிள், பொபி, ராஜகுமார், தர்மலோகன் ஆகியோரின் அன்பு மாமனும், பென் அன்ரோ, பெனீசியா, றெனோ, அன்ரனற், பென்சன், சரணியா, ஜெனா, தனுஷன், தயான்ஸ், கிருஷாந், அபிஷாந், ஜோண் வர்ஷன், ஜோண் அன்டர்ஷன், பென் கிளின்டன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (ஞாயிறு) மாலை 4 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து சம்புக்குளம் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்

(2911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடிகை மனோரமா வைத்தியசாலையில்



(சென்னை)

நடிகை மனோரமாவுக்கு (வயது 70) நேற்று திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டதை அடுத்து தியாகராய நகரில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

இந் நிலையில் நேற்று முன் தினம் அனுமதிக்கப்பட்ட அவருக்கு வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

தற்போது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அபாய கட்டத்திலிருந்து அவர் மீண்டுள்ளதாகவும் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

ஏற்கனவே அவருக்கு மூட்டு வலி இருந்தது. இதற்காக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. வீட்டில் ஓய்வு எடுத்து வந்தார்.

உடல்நிலை பூரணமானதைத் தொடர்ந்து மீண்டும் படங்களில் நடித்தார். ஷாருக்கான் நடிக்கும் சென்னை எக்ஸ்பிரஸ் படத்திலும் முக்கிய வேடத்தில் நடித்ததை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இலங்கையின் போர்க்கப்பலை அகற்ற நடவடிக்கை எடுங்கள்

## வைகோ மன்மோகனுக்கு கடிதம்

கச்சதீவுக்கு அருகே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இலங்கைப் போர்க்கப்பல் அகற்றப்பட வேண்டும். அதற்கான நடவடிக் கைகளைத் தாங்கள் மேற்கொள்ள வேண்டுமென ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வைகோ பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கடிதம் ஒன்றை எழுதி அனுப்பி வைத்துள்ளார்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது.

கச்சதீவு அருகே இலங்கைக் கடற்படையின் போர்க்கப்பல் கொண்டு வந்து நிறுத்தப்பட்டு இருப்பதையும் இலங்கைக் கடற் படையினர் தமிழக மீனவர்களை மிரட்டி அச்சுறுத்தி இருப்பதையும் இக்கடிதத்தின் வாயிலாகத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

கடந்த பல ஆண்டுகளாக சர்வதேச கடற் பரப்பிலும் நமது கடற் பரப்பிலும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டு வருகின்றனர். மீன்பிடி படகுகளைச் சேதப்படுத்தி வலைகளை அறுத்து எறிகின்றனர்.

இந்நிகழ்வுகளை நான் பல முறை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வந்து இருக்கின்றேன். இதுவரையிலும் 578 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் மிருகத்தனமாக தாக்கிக் கொல்லப்பட்டு உள்ளனர்.

இந்தியக் கடற்படை தமிழக மீனவர்களைப் பாதுகாக்கவில்லை. கச்சத்தீவு தமிழகத்துக்குச் சொந்தமானது. தமிழக மீனவர்களின் உரிமை நலன்களைப் பறிக்கின்ற வகையில் 1974 ஆம் ஆண்டு இந்திய அரசு கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டது. அதற்காக, இந்திய நாடாளுமன்றத்தின் ஒப்புதலையும் பெறவில்லை.


இது தமிழக மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம் ஆகும். கச்சதீவைத் திரும்பப் பெற்று இந்தியாவோடு இணைக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி தமிழகச் சட்டமன்றம் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

இந்நிலையில் தற்போது கச்சத்தீவு அருகே இலங்கைக் கடற்படையின் போர்க்கப்பல் ஒன்று கொண்டு வந்து நிறுத்தப்பட்டு உள்ளது.

நாட்டுப்படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கைக் கடற் படையினர் அச்சுறுத்தி உள்ளனர். 45 நாட்கள் மீன்பிடித் தடைக்காலத்துக்குப் பின்னர் இயந்திரப் படகு மீனவர்கள் தற்போது கடலுக்குச் செல்லத் தொடங்கி உள்ளனர்.

கச்சத்தீவு அருகே சீனப் படகுகளும் இலங்கைப் போர்க்கப்பலில் சீன வீரர்களும் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இது நமது கடலிலும் சர்வதேசக் கடற் பரப்பிலும் இந்தியாவின் இறையாண்மைக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் ஆகும். போர்க்கப்பல்களைக் கொண்டு வந்து நிறுத்துவது ஒரு முன்னோட்ட எச்சரிக்கையே ஆகும்.

இந்தியப் பெருங்கடலில் இந்தியாவின் நலன்களைப் பாதுகாக்கவும், தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கவும் உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும். இலங்கைப் போர்க்கப்பல் அகற்றப்பட வேண்டும் அதற்கான நடவடிக்கைகளைத் தாங்கள் மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என்று அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)





மும்பை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியுடன் அளவளாவும் பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி.

# இலங்கை போர் கப்பல்களை கச்சதீவில் இருந்து அகற்றுக

## மத்திய அரசை கோருகிறது பா.ஜ.க.

தமிழக மீனவர்களை அச்சுறுத்தும் வகையில் கச்சதீவு பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இலங்கை போர் கப்பல்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளுக்கு தமிழக பா.ஜ.க. கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து பா.ஜ.க. மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

தமிழக மீன்பிடி தடைக் காலமான 45 நாட்கள் நேற்று முன் தினத்துடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து தற்போது கடலில் அதிக மீன்கள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் தங்களுடைய வாழ்வாதாரத்தை தேடி வங்கக்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு இலங்கை அரசின் இவ் அடாவடி நடவடிக்கை அச்சத்தையும் அவர்கள் வருங்காலம் குறித்த கேள்வியையும் எழச் செய்துள்ளது.

ஏற்கனவே இலங்கை அரசால் தமிழக மீனவர்கள் படும் துயரங்களை அளவிட முடியாத நிலையில் தற்போது கச்சதீவு பகுதியில் 10இற்கும் மேற்பட்ட போர்க்கப்பல்களை நிறுத்தி வைத்துள்ளதான செய்தி வெளியாகியுள்ளது.

கச்சதீவு பகுதிக்கு அருகே இந்திய கடற்படைக்கு சொந்தமான ஒரு கப்பல்கூட தமிழக மீனவர்களின் பாதுகாப்புக்காக இல்லாத நிலையில் இலங்கையின் 10இற்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது தமிழக மீனவர்களை மட்டுமல்ல ஒட்டுமொத்த இந்திய நாட்டையே ஆச்சரியங் கொள்ளச் செய்யும் செயலாகவே எண்ண வேண்டியுள்ளது.

மேலும் எல்லை தாண்டிச் செல்லும் மீனவர்களுக்கு இந்திய அரசாங்கமே அபராதம் வசூலிக்கவுள்ளதாக வரும் செய்தி எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாக அமைந்துள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு தெளிவான விளக்கம் அளிக்க வேண்டும். தமிழக மீனவர்கள் அச்சமின்றி கடலுக்குச் சென்று வர மத்திய, மாநில அரசுகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்நேரத்தில் எடுக்க வேண்டும்.

இந்திய தமிழ் மீனவர்களை அச்சுறுத்தும் வகையில் நிறுத்தப்பட்டுள்ள இலங்கை போர்க்கப்பல்களை அப்புறப்படுத்த வைப்பதோடு இந்திய தமிழ் மீனவர்களுக்கு இந்திய கடற்படை பாதுகாப்பை வழங்க வேண்டும் என அவர் கூறியுள்ளார். (அ-2)

## ஜெயலலிதா வழக்குகளை விசாரிக்கும் ஐஜி ஓய்வு

(சென்னை)

முதல்வர் ஜெயலலிதாவின் சொத்து குவிப்பு வழக்குகளை விசாரிக்கும் பொலிஸ் ஐஜி உட்பட இருவர் நேற்று முன்தினத்துடன் ஓய்வு பெற்றனர்.

முதல்வர் ஜெயலலிதா மீது தொடரப்பட்ட சொத்து குவிப்பு வழக்கை இலஞ்ச ஒழிப்புத்துறையின் சிறப்பு பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த பிரிவின் ஐஜி குணசீலன். அதேபோல, பொலிஸ் நவீனமயமாக்கல்துறை ஐஜியாக பணியாற்றியவர் பாலசுப்பிரமணியன். இவர்கள் இருவரும் நேற்றுடன் ஓய்வு பெற்றனர்.



எழும்பூரில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் விடுதியில் அவர்கள் இருவருக்கும் பாராட்டு விழா நடந்தது. அதில் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதற்கிடையில் இலஞ்ச ஒழிப்பு பிரிவு ஐஜியாக இருந்த குணசீலன் ஓய்வு பெற்றாலும் அவருக்கு மேலும் 2 ஆண்டுகளுக்கு நியமனம் வழங்க வேண்டும் என்று டிஜிபி அலுவலகத்தில் இருந்து உள்துறைக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இதனால் அவருக்கு மீண்டும் நியமனம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# இந்திய எல்லைக்குள் மீண்டும் அத்துமீறியது பாகிஸ்தான்

(புதுடில்லி)

இந்திய எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் 3ஆவது முறையாக அத்துமீறியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்திய நிலைகள் மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்று முன்தினம் துப்பாக்கி சூடு நடத்தினர்.

இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சிறிய ரக துப்பாக்கிகளைக் கொண்டு பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இதுபோன்ற சம்பவங்களால் இராணுவத்தினரின் கவனத்தை திசை திருப்பி இந்திய எல்லைக்குள் பயங்கரவாதிகள் ஊடுருவ முயற்சி செய்யலாம் என்பதற்காக கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் அத்துமீறி உள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் தூசியைக் கிளப்பி விடுகின்றோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகின்றோம். - பிஷப் பார்க்லி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேர்தலைத் தடுப்பவர்கள் பயங்கரவாதிகள் அல்லவா?

பயங்கரவாதம் என்ற சொற்பதத்தை ஆளுந் தரப்பு மட்டுமே பயன்படுத்த முடியும் என்றளவில் நிலைமை வந்துவிட்டது.

இலங்கையில் பயங்கரவாதம் என்றால் அது தமிழ்த் தரப்பு சார்ந்ததாக இருக்கும் என்பதே இப்போதைய முடிபு.

விடுதலைப் புலிகள் உட்பட விடுதலைப் போராட்டம் தொடர்பில் எழுகை பெற்ற இயக்கங்களை இலங்கை அரசு பயங்கரவாதிகள் என்று அழைத்தது.

பயங்கரவாதம் என்றால் என்ன? என்பதற்கு இன்னமும் நிறுதிட்டமான வரைவிலக்கணம் இல்லாத நிலையில்,

ஜனநாயக ஆட்சியை சீர்குலைப்பது பயங்கரவாதம் என்றோ அல்லது இயல்பு வாழ்க்கைக்கு தொடர்ச்சியாகப் பங்கம் செய்வது பயங்கரவாதம் என்றோ ஆளுந்தரப்புக் கருதிக் கொண்டு,

தமிழ் போராளிகளைப் பயங்கரவாதிகள் என்று பெயர் சூட்டியிருக்கலாம். அதேநேரம் தமிழ் மக்கள் விடுதலைப் போராளிகளை பார்க்கின்ற கோணம் வித்தியாசமானது.

எனவே, ஒரு தரப்பிற்கு பயங்கரவாதிகளாக தெரிபவர்கள் இன்னொரு தரப்பிற்கு மீட்பர்களாக இருக்கலாம் என்பது அறிஞர்களின் முடிபு.

இவை ஒரு புறம் இருக்க, ஆட்சியாளர்களின் மொழி நடையில், பயங்கரவாதம் என்று எடுத்துக் கொண்டு ஆராய்ந்தால், பயங்கரவாதம் தோற்றம் பெறுவதற்கான காரணம் யாது? என்ற கேள்வி எழும்.

ஆட்சியாளர்கள் ஜனநாயகத்தை துஷ்பிரயோகம் செய்வதால் அல்லது இனம், மதம், மொழி, நிறம் என்ற அடிப்படையில் ஆட்சிப் பீடங்கள் பேதமை காட்டுவதால், பயங்கரவாதம் என்பது எழுகை பெறவேண்டியதாயிற்று என்ற பதில் வெளிப்படும்.

இப்போது இலங்கை பற்றிச் சிந்தித்தால் இலங்கை அரசின் தகவல்களின் பிரகாரம் 2009ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதியுடன் நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது.

அதேநேரம் தமிழர்களின் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லையென்றும் இப்பிரச்சினையை தீர்ப்பதற்காகவே ஜே.ஆர்.ஜயவர்த்தனவும் ராஜீவ்காந்தியும் செய்து கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் உள்ளது என்பதும் இலங்கை அரசாங்கம் உறுதி செய்யும் தகவல்கள்.

ஆக, பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது என்ற அரசின் முடிபின் அடுத்த கட்டம் இனப் பிரச்சினைக்கான தீர்வு.

இனப்பிரச்சினைக்கான தீர்வை, யார் தடுத்தாலும் - அதனை யார் முன்னெடுக்க மறுத்தாலும் அத்தகையவர்கள் பயங்கரவாதிகள்.

ஏன் எனில் இவர்கள் ஜனநாயகத்தை - இன ஒற்றுமையை சீர்குலைக்கிறவர்கள். இந்தப் பயங்கரவாதிகள் ஒழிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த விடாமல் யார் தடுத்தாலும் அவர்கள் பயங்கரவாதிகளே !

இவர்களை ஒழிப்பதற்கு இந்தியாவிடமும் சீனாவிடமும் ஆயுத உதவி பெற்றுக்கொண்டாலும் அதில் எந்தத் தவறும் இல்லை.

ஆனாலும் பயங்கரவாதம் அந்தப் பக்கமா? இந்தப் பக்கமா? என்ற பார்வையில், மௌன இராகங்கள் இங்கு இசைக்கப்படுவதுதான் பெருந்துன்பம்.

# கொள்ளையர்கள் வீடு புகுந்து அட்டகாசம் இலங்கையர்கள் நால்வர் படுகாயம்

## அவுஸ்திரேலியாவில் சம்பவம்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் இலங்கை அகதிகள் மீது கொள்ளையர்கள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் நான்கு இலங்கைத் தமிழர்கள் கத்தி வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தனர்.

மேலும் அகதிகள் பலர் தாக்குதலுக்கு இலக்காகினர். படுகாயமடைந்த அகதிகள் நால்வரும் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியா, மெல்போர்ன் நகர அல்பியன்ஸ் பகுதியில் நேற்று சனிக்கிழமை நள்ளிரவு ஒரு மணியளவில் குறித்த இலங்கை அகதிகளின் வீட்டுக்குள், கத்தி, இரும்புக் கம்பி மற்றும் பொல்லுகளுடன் புகுந்த கொள்ளையர்கள் சுமார் இருபது பேர் அவர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தினர்.

இதன்போது நான்கு இலங்கை அகதிகள் கத்தி வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் பலர் தாக்குதலுக்கு இலக்காகினர். படுகாயமடைந்தவர்கள் அன்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை இலங்கை அகதிகளின் கைத் தொலை பேசிகள், மடிக் கணனிகள், பணம் என்பன கொள்ளையர்களால் சூறையாடப்பட்டுள்ளன.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சென்ற கையோடு மீண்டும் மதியம் 12 மணியளவில் அங்குவந்த கொள்ளையர்கள் பகிரங்கமான முறையில் குறித்த அகதிகள் மீது தாக்குதல் நடத்த முயன்றுள்ளனர்.

எனினும் அங்கிருந்த அகதிகள் அனைவரும் தப்பித்து ஓடியதால் அவர்களின் திட்டம் பலிக்கவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இலங்கை அகதிகள் தெரிவித்தவை வருமாறு,

நாங்கள் இருவர் கடையில் பொருட்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது கறுப்பினத்தைச் சேர்ந்தவர்கள் எம்மை இடைமறித்து நாம் வாங்கிவந்த பொருட்களை தந்து விட்டுச் செல்லுமாறு மிரட்டினர்.

ஆனால் நாங்கள் அவர்களின் மிரட்டலுக்குப் பணியாது வீடு சென்றுவிட்டோம். அதன் பின்னர் நள்ளிரவு ஒரு மணியளவில் வீட்டுக்குள் புகுந்த சுமார் 20 பேர் எங்களைக் கத்தியால் வெட்டியதுடன் பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.


நாம் தற்போது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் உள்ளோம். பொலிஸார் மீது எமக்கு நம்பிக்கையில்லை.

ஏன் எனில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களை அவர்கள் கைது செய்யவில்லை என்றனர்.

இதேவேளை குறித்த பகுதியில் இலங்கை அகதிகளிடம் பணம், பொருட்களைப் பறிப்பதுடன் தாக்குதல்களும் அண்மைக்காலமாக தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### ஔவை வாக்கி னருமை காண்க



உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகெனும்
ஒண்டொடி ஔவை தன்னுரை காண்க
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடுமெனுஞ்
சீருடை நன்மொழி சிறப்பே காண்க
எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகுமெனும்
வண்ணச் செய்யுளின் வளத்தினைக் காண்க
ஏவா மக்கள் மூவா மருந்தெனுந்
தேவா மிர்தஞ் சிந்தையிற் காண்க

# மனநிலையில் மாற்றம் பெற்று பகிர்தல் வாழ்வை வளப்படுத்துவோம்

இயேசு தம் திருவுடலையும் இரத்தத்தையும் நமக்கு உணவாகத் தருகிறார். அவரது பேரன்பைப்போற்றி இன்று அதை எண்ணி நாம் பெருவிழாவாகக் கொண்டாடுகின்றோம்.

உடல் என்பது ஒருவரது ஆளுமையின் மிகவெளிப்படையான கூறாகும். மனம், ஆன்மா, உணர்வுகள் என்பவை வெளியில் தெளிவாகக் காணக்கிடைக்காத ஆளுமையின் தளங்கள். ஆனால் உடல் மட்டுமே அனைவருக்கும் அறிமுகமான, வெளிப்படையான தளம். அது மட்டுமல்ல உடல்தான் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யத்தகுந்த மிகச்சிறந்த தளமும்கூட. அதனால்தான் இயேசு தம் உடலை இறைவனுக்காகவும் நமக்காகவும் கையளித்தார். இரத்தம் உயிரின் ஆதாரம். இரத்தம் சிந்துதல் தியாகத்தின் அடையாளம். "இரத்தம் சிந்துதலின்றி பாவமன்னிப்பு இல்லை"

### பரமபிதா காட்டிய பாதை

எனவே, எமக்காக தன்னைக் கையளித்த இயேசுவின் உடலுக்காக இரத்தத்திற்காக நாம் பிரதியுபகாரமாக நமது உடலை, இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றக் கையளிப்போம். நாம் இரத்தத்தைச் சிந்தாவிட்டாலும் பிறர் வாழ தியாகங்கள் செய்ய முன் வருவோம்.

நாம் கற்றறிந்த வரலாற்று உண்மையை இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவிற்கு ஒரு வரலாற்று உண்மையுண்டு.

1263 பராகுவேயைச் சார்ந்த ஒரு கத்தோலிக்க குருவானவர் தன் அழைத்தலைப் பற்றி பல்வேறு கேள்விகளோடு திருப்பணியாக உரோமை நகர்நோக்கிப் பயணமானார். பயணத்தின் பாதி வழியில் உரோமையிலிருந்து 70 கிலோமீற்றர் தொலைவிலுள்ள போல்சேனா என்ற இடத்தில் புனித கிறிஸ்தினால் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலுள்ள பீடத்தில் திருப்பலியாற்றினார். அப்போது அர்ச்சிப்பு வார்த்தையைச் சொல்லி அப்பத்தை உயர்த்தியவுடன் அது சதையாக மாறி இரத்தம் கசிய ஆரம்பமாகியது. இரத்தம் பீடத்தின் மேலுள்ள கார்ப்பரோல் என்ற விரிப்புத்துணிமீது படிந்தது. இந்த நற்கருணை அற்புதத்திற்குப் பின் 1264 திருத்தந்தை 4ஆம் அர்பன் இயேசுவின் திருவுடல் திரு இரத்தப்பெருவிழாவைத் தொடங்கி கொண்டாடக் கட்டளை பிறப்பித்தார். அன்றிலிருந்து இப்பெருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது.

பாத்திமாவிலிருந்து சிறிது தொலைவிலுள்ள பலசார் என்ற இடத்தில் 1904 இல் பிறந்து 1955 இல் இறந்த அலெக்சாண்டிரியா என்ற பெண் ஒரு விபத்தான சூழ்நிலையில் பாதிக்கப்பட்டு படுக்கையிலிருந்து 13 ஆண்டுகள் நற்கருணை மட்டும் பெற்று வாழ்ந்தது மருத்துவர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது என்பதும் வரலாற்றுப் பதிவாகியுள்ளது. விசுவசித்தால் திருவிருந்து தொடரும் என்றும் நம்மைத் தொடும்.



இப்படி எண்ணற்ற நற்கருணையின் அற்புதங்களை நாம் அறிந்திருக்கின்றோம். இவைகளெல்லாம் இது ஒரு தொடரும் திருவிருந்து என வெளிப்படுத்துகின்றன. அந்தக் குருவானவரின் சந்தேகத்திற்கு அவரைத் தொட்டு ஆழப்படுத்தியது போல நம்மையும் அந்தத் தொடர் மற்றும் தொடும் உணர்வுகளுக்கு அழைக்கின்றது.

இயேசு தமது இறுதி இராப்போசனத்தின்போது அப்பத்தையும் இரசத்தையும் தமது உடலும் இரத்தமும் எனக் கூறி அதனைத் தம் சீடர்களுக்கு பகிர்ந்தளித்தார். அப்பம் ஏந்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பகிர்தலின் ஞாபகம் நமக்கு உணர்த்தப்படுகின்றது.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

கல்மனம் படைத்தவர்களால் பகிர்ந்து வாழமுடியாது. அப்பத்தின் வடிவில் இயேசுவின் உடலையும் இரசத்தின் வடி வில் அவரது இரத்தத்தையும் பகிர்ந்து உண்ணும் நாம் அவரின் திருவுளப்படி வாழ முற் படுகிறோமா? நம்மில் அதற்கான மனமாற்றம் ஏற்படுகிறதா என்பதையும் சிந்திக்கவேண்டும். இத்தகைய சிந்தனைகள் ஏற்படுத்தும் மாற்றமே இப்பெருவிழாவை அர்த்தமுள்ளதாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சீனி' இன்று இராஜினாமா?



ஐபிஎல் சூதாட்ட விவகாரத்தில் நிர்வாகிகள் இராஜினாமா தொடரும் நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் (பிசிசிஐ) அவசர செயற்குழுக் கூட்டம் இன்று சென்னையில் கூடுகிறது.

இக்கூட்டத்தில் தமது பதவி விலகல் அறிவிப்பை பிசிசிஐ தலைவர் சீனிவாசன் வெளியிடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐபிஎல் சூதாட்ட விவகாரம் பெரும் புயலாக உருவெடுத்து இப்போது பிசிசிஐ தாக்கி வருகிறது. சூதாட்ட விவகாரத்தில் பிசிசிஐ த்லைவர் சீனிவாசனின் மருமகன் குருநாத் மெய்யப்பன் கைதானதால் அவருக்கு நெருக்கடி அதிகரித்தது. அவர் இராஜினாமா செய்யவேண்டும் என்று பல்வேறு தரப்பட்டோரி டம் இருந்து கோரிக்கைகள் வலியுறுத்தின.

ஆனால் பிசிசிஐ நிர்வாகிகள் மௌனம் காத்தனர். இந்த நிலையில் மெல்ல மெல்ல சீனிவாசன் இராஜினாமா செய்ய வேண்டும் என்று பிசிசிஐ நிர்வாகிகளும் வலியுறுத்தத் தொடங்கினர். மேலும் பிசிசிஐ செயலர் மற்றும் பொருளாளரும் இராஜினாமா செய்தனர். மேலும் பிசிசிஐயின் 5 துணைத் தலைவர்களும் இராஜினாமா செய்யப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் இன்று காலை 11 மணிக்கு சென்னையில் பிசிசிஐயின் அவசர செயற்குழுக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக் கூட்டத்தில் சூதாட்ட விவகாரம், சீனிவாசனின் இராஜினாமா உள்ளிட்ட அனைத்து விவகாரங்களும் விவாதிக்கப்பட இருக்கின்றன. அநேகமாக இன்றைய கூட்டத்தில் சீனிவாசன் தமது இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# சூதாட்டம் குறித்து பி.சி.சி.ஐ முன்னரே அறிந்திருந்தது

குருநாத் மெய்யப்பனின் சூதாட்ட நடவடிக்கைகள் குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு (பி.சி.சி.ஐ) முன்னரே அறிவுறுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சர்வதேசக் கிரிக்கெட் சபை இந்த எச்சரிக்கையை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு வழங்கியிருக்கிறது.

எனினும் அவ்வாறான எச்சரிக்கைகள் எவையும் தனக்கோ, ஏனைய இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களுக்கோ கிடைத்திருக்கவில்லை என அச்சபையின் தலைவர் என்.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

சூதாட்டத்தில் ஈடுபட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள குருநாத் மெய்யப்பனுக்கும், விந்து தரா சிங்கிற்குமிடையிலான தொலைபேசி உரையாடல்கள் ஆராயப்பட்டபோதே சர்வதேச கிரிக்கெட் சபையின் எச்சரிக்கை தொடர்பான விடயங்கள் வெளிப்பட்டன.


தன் நடவடிக்கைகள் தொடர்பாக சர்வதேசக் கிரிக்கெட் சபையானது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் முறையிட்டதாக விந்து தரா சிங்கிடம் குருநாத் மெய்யப்பன் தெரிவிக்கும் உரையாடல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தியன் பிறீமியர் லீக் தொடர் இவ்வாண்டு ஆரம்பிக்க முன்னர் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அவ்வாறான எச்சரிக்கைகள் எவையும் விடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும், ஏனைய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகளுக்கும் அதுகுறித்துத் தெரிந்திருக்கவில்லை என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரும், குருநாத் மெய்யப்பனின் மாமனாருமான என்.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

# பதவி விலகினர்





இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையின் செயலாளர், பொருளாளர் ஆகியோர் தங்கள் பதவிகளிலிருந்து விலகியுள்ளனர். செயலாளரான சஞ்சய் ஜகதலே, பொருளாளரான அஜய் ஷேர்க்கே ஆகிய உயரதிகாரிகளே தங்கள் பதவிகளிலிருந்து விலகியுள்ளனர்.

இவர்களிருவரும் குறுகிய நேர இடைவெளியில் தங்கள் பதவிகளிலிருந்து விலகிக் கொண்டனர்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரின் மருமகனும், அவரது அணியான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முக்கிய முகாமைத்துவ உறுப்பினரும், ஏ.வி.எம் நிறுவனத்தின் முகாமைதுவ உறுப்பினருமான குருநாத் மெய்யப்பன் கைது தொடர்பான விசாரணைகளில் திருப்தியின்மை குறித்தே செயலாளர், பொருளாளர் இருவரும் தங்கள் பதவிகளிலிருந்து விலகியுள்ளனர்.

இந்த கைதுக்குப் பின்னர் அவ்விடயம் தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடந்து கொண்ட விதம் திருப்தியளிக்கவில்லை எனவும், இவ்விடயங்கள் தன்னை அதிகம் வருத்தமடையச் செய்வதாகவும் பதவி விலகிச் செல்லும் செயலாளர் சஞ்சய் ஜகதலே தெரிவித்துள்ளார்.

அத்தோடு புதிய முகங்கள் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை வழிநடத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை செயலாளரான அஜய் ஷேர்க்கே தனது பதவி விலகலை உறுதிப்படுத்தியுள்ளதோடு, இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே தான் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளதாகவும், மேலதிகமாகக் கதைக்க விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இவர்களிருவரும் தவிர, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மேலும் ஐந்து துணைத் தலைவர்கள் தங்கள் பதவிகளிலிருந்து விரைவில் விலகவுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நியூசிலாந்திடம் வீழ்ந்தது இங்கிலாந்து




இங்கிலாந்து அணிக்கும் நியூசிலாந்து அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது.

இப்போட்டியில் நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இலண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டக்காக 10.2 ஓவர்களில் 45 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, ஒரு கட்டத்தில் 2 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதிலும், அதன் பின்னர் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்து 5 விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களையும், 7 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களையும் பெற்றுத் தடுமாறியிருந்தது. துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜொனதன் ட்ரொட் 53 பந்துகளில் 37 ஓட்டங்களையும், கிறிஸ் வோக்ஸ் 53 பந்துகளில் 36 ஓட்டங்களையும், அலஸ்ரெயர் குக், ஜோ றூட் இருவரும் தலா 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ரிம் சௌதி 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், மிற்சல் மக்லநகன், நேதன் மக்கலம் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், கைல் மில்ஸ், கேன் வில்லியம்ஸன் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

228 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 46.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. முதலாவது ஓவரிலேயே ஓர் ஓட்டத்திற்கு 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய அவ்வணி சார்பாக, 3வது விக்கெட்டுக்காக 119 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தன.

ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுக்களை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றுச் சற்றுத் தடுமாற்றத்தை எதிர்கொண்ட போதிலும், மார்ட்டின் கப்ரில் சிறப்பான சதத்தை வெளிப்படுத்தி தனது அணிக்காக வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார். துடுப்பாட்டத்தில் மார்ட்டின் கப்ரில் 123 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களையும், றொஸ் டெய்லர் 77 பந்துகளில் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன் 3 விக்கெட்டுக்களையும், ஜேட் டேரன்பைக், கிறேம் ஸ்வான் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக மார்ட்டின் கப்ரில் தெரிவானார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவுக்கு...

சிவலிங்கம் சிவநாதன், அமெரிக்காவில் வெள்ளை மாளிகையினால் வழங்கப்படும் உயர்விருதான மாற்றத்திற்கான விசேட நபர் ("Champion of Change") விருது வழங்கி அண்மையில் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 30-ம் திகதி சிவலிங்கம் சிவநாதனுக்கு மதிப்பளிக்கும் வகையில் வெள்ளை மாளிகையில் வழங்கப்பட்ட விருதினை அடுத்தே இந்த தகவல் தெரியவந்துள்ளது.

அமெரிக்க பிரஜைகளை உலகில் சிறந்த மற்றும் முக்கியமான பிரஜைகளாக மாற்றுவதற்கு தமது அறிவை பயன்படுத்துபவர்களுக்கு இந்த கௌரவ விருது வழங்கப்படுவதாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் உள்ள இலினோயிஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றி வரும் சிவலிங்கம சிவநாதன், அல் -குவைதா தலைவர் ஒசாமா பின் லேடனை கண்டுப்பிடிக்கும் நடவடிக்கைக்கு தேவையான தொழில்நுட்பத்தை முழுமையாக கண்டுப்பிடித்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு தேவையான நைட விஷன் தொழில்நுட்பம் உள்ளிட்ட உபகரணங்களை பேராசியரே தயாரித்துள்ளார்.

பேராசிரியர் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்காவின் பிரதான தொழில்நுட்ப அதிகாரி டோட் பார்க், இப்படியான அறிவார்ந்தவர்கள் அமெரிக்காவுக்கு வந்து தாம் அவர்களுடன் பணியாற்ற கிடைத்தமை மதிப்புக்குரியது என தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் சாவகச்சேரி பிரதேசத்தில் பிறந்த பேராசிரியர் சிவலிங்கம், அணுமின் தொழில்நுட்பம் தொடர்பில் புகழ் பெற்றவர்.

அமெரிக்க பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வரும் அவருக்கு சகல வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டியது தமது கடமை எனவும் அவர் கூறியுள்ளார். (எ-11)

## உயர் பாதுகாப்பு...

கொண்டு சுமார் 12 ஆயிரம் ஏக்கர் காணிகள அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணப்படும் காணி பிரச்சினைகளுக்கு அடுத்த வருடத்திற்குள் தீர்வு காணப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)


## தலதா மாளிகை...

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் பூஜை பொருட்களின் தரம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

தானமாக வழங்கப்படுகின்ற பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகள் உரிய நடைமுறைக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தாய்லாந்து பிரதமரும் நேற்று முன்தினம் கண்டி தலதா மாளிகை விஜயம் செய்து வழிபாட்டில் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# தோனி மௌனத்தை கலைக்க வேண்டும் - கங்குலி



கிரிக்கெட் சூதாட்டம் பற்றி சச்சின் கருத்து தெரிவித்துள்ள நிலையில் முக்கிய பொறுப்பில் உள்ள இந்திய அணித் தலைவர் டோனி தனது மௌனத்தைக் கலைத்து கருத்து கூறுவது அவசியம் என்று முன்னாள் அணித்தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடக பேட்டி ஒன்றில் கங்குலி கூறுகையில், ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக அணித் தலைவர் தோனி தனது மௌனத்தைக் கலைத்து கருத்து தெரிவிக்க வேண்டும்.

அவர் நேரடியாக பதில் அளிக்காவிட்டாலும் "ஒன்-லைன்" மூலம் தனது கருத்துக்களை சொல்லலாம்.

தோனி இந்த நேரத்தில் கடினமான நிலையை எடுத்துள்ளார். அல்லது அவர் தற்போதைக்கு சம்பியன்ஸ் தொடரில் விளையாடுகிறோம். அதில் வெற்றி பெற்று எங்களது உண்மையை நிரூபிப்போம் என்றாவது சொல்லி இருக்கலாம்.

ஏனெனில் ஒவ்வொருவரும் தோனியின் கருத்தை எதிர்பார்க்கிறார்கள். கிரிக்கெட்டில் நடைபெறும் எல்லா தவறுகளுக்கும் அணித் தலைவர் பொறுப்பு ஏற்க முடியாது.



இந்த விடயத்தில் நான் டோனிக்கு ஆதரவாக இருக்கிறேன். கிரிக்கெட் சூதாட்டத்தை முன்கூட்டியே கண்டு பிடித்து தடுக்க ஐ.பி.எல். நிர்வாகத்தால் ஏன் முடியவில்லை என்று கேட்கிறார்கள். அது எளிதான காரியம் அல்ல.

ஒவ்வொரு வீரரையும் என்ன செய்கிறார் என்று கண்காணித்துக்கொண்டு இருக்க முடியாது என்றும் ஆனால் கவனமாக இருங்கள் என்று சொல்ல மட்டுமே முடியும் எனவும் கூறினார்.

## பாலசிங்கத்தை இழந்த புலிகள்...

வேளையில் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இறுதி மரியாதையை செலுத்தியதுடன் குடும்ப உறவினர்களுடன் தனது துயரத்தையும் பகிர்ந்து கொண்டார்.

இதன் பின்னர் அங்கு நின்ற ஊடகவியலாளர்களிடம் உரையாடும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு:-

"கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இழப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாக இருந்தது. ஏனெனில், அவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் தத்துவ ஆசிரியராக இருந்ததுடன் அரசியல் ரீதியில் மிக நுட்பமான முறையில் செயற்பட்டார்.

அதேமாதிரி இன்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் இழப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாபெரும் இழப்பாகும். ஏனெனில், அக்கட்சியின் அரசியல் நடவடிக்கைகளில் இவரின் மதிநுட்பம் மேலோங்கி இருந்தது.

இறக்கும்வரை ஐக்கிய தேசியக் கட்சியின பிரதிப் பொதுச் செயலாளராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன, அக்கட்சி 2002இல் ஆட்சியமைத்தபோது புனர்வாழ்வு அமைச்சராக 2004 வரை இருந்து திறம்பட சேவையாற்றினார். அந்தக் காலத்தில் நான் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தேன்.

அக்காலத்தில் ஒரு நாள் என்னை யாழ்ப்பாணத்திற்கு அமைச்சர் மகேஸ்வரனுடன் அழைத்துச் சென்ற ஜயலத் ஜயவர்த்தன அங்குள்ள மக்களுக்கு என்னை அறிமுகப்படுத்தி சில நிகழ்வுகளில் என்னை பங்கு பற்றச் செய்தார். இவ்வாறு நல்ல பண்புகளைக் கொண்டவர் ஜயலத் ஜயவர்த்தன.

இவர் எனது அரசைக் கடுமையாக விமர்சித்தது உண்மைதான். எனினும், டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவின் நல்ல பண்புகளை நான் மறக்கமாட்டேன்" என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## கவுணாவத்தையில்...

கடா வெட்டப்பட்டு தலையும் படைக்கப்பட்டது.

தொடர்ந்து ஏனைய கடாக்கள் வெட்டப்பட்டன.

நேற்று இடம்பெற்ற இந்த வேள்வியில் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஆட்டுக்கடாக்கள் அதிகாலையில் உழவு இயந்திரங்கள் மற்றும் லாண்ட் மாஸ்டர்களில் கொண்டு வந்து இறக்கப்பட்டன.

இதனை விட சுமார் 300க்கும் மேற்பட்ட சேவல்களும் பலியிடப்பட்டன.

இந்த நிகழ்வில் சுமார் பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்து கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## சீனாவுடன் இலங்கை...

ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவின் சீன விஜயத்தின் போது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள குறித்த ஒப்பந்தங்களைத் தவிர, பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், இது குறித்து சீன வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஹாங் லீயிடம் செய்தியாளர் கேள்வி எழுப்பிய போது, இவ்விரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பிலான விபரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

இதனால் பாதுகாப்புத் தொடர்பாக சீனாவும், இலங்கையும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இது சீனாவுக்கும், இலங்கைக்கும் இடையேயான படைத்துறை சார்ந்த ஒத்துழைப்புக்களை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையில் இலங்கைக்கு அதன் முதலாவது தொடர்பாடல் செய்மதியை வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் சீனா கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட போதிலும், இந்த ஒப்பந்தம் தொடர்பிலான நிதி மற்றும் வேறு விடயங்கள் வெளியிடப் படவில்லை.

இவ்விரு தரப்பினருக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் இலங்கையில் சீனாவின் பிரசன்னத்தை மேலும் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் நெடுஞ்சாலைகள் மற்றும் புகையிரதப் பாதைகள் போன்றவற்றை அமைப்பதற்கு உதவிகளை வழங்குவதாக சீனா உறுதியளித்துள்ளது. குறிப்பாக கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான புதிய அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதற்கு உதவி வழங்குவதாக சீனா உறுதி வழங்கியுள்ளது.

கொழும்பு - யாழ்ப்பாண அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு - கண்டி - குருணாகல் அதிவேக நெடுஞ்சாலை மற்றும் தெற்கு அதிவேகப் பாதையின் மாத்தறை முதல் கதிர்காமம் வரையான பகுதி ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கு சீனா உதவி வழங்கவுள்ளது.

அதேவேளை, சீனாவுடனான இலங்கையின் உறவுகள் மேலும் வலுவடைவது தொடர்பில் இந்திய ஊடகங்கள் கவலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்

## பற்றிக் பெஞ்சமின்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை, சம்புக்குளம் கல்மடுவை வசிப்பிடமாகவும் கொண்ட பற்றிக் பெஞ்சமின் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பற்றிக் - சவினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மேரி மெக்ரலினின் (தங்கராணி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லக்கண்டு, அமிர்தநாதர், அருட்தந்தை பற்றிக் ஞானபிரகாசம், மரியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்ரன், சாள்ஸ், ஜோய், தீபன், கஜசிந்தா, செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயவதி, றெஜினம்மா, மேபிள், பொபி, ராஜகுமார், தர்மலோகன் ஆகியோரின் அன்பு மாமனும், பென் அன்ரோ, பெனீசியா, றெனோ, அன்ரனற், பென்சன், சரணியா, ஜெனா, தனுஷன், தயான்ஸ், கிருஷாந், அபிஷாந், ஜோண் வர்ஷன், ஜோண் அன்டர்ஷன், பென் கிளின்டன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (ஞாயிறு) மாலை 4 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து சம்புக்குளம் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்

(2911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சிஜா ரெயிலரிங் அன் இன்ஸ்ரிரியூட்



*வெளிநாடு செல்ல இருக்கும் பெண்களுக்காகவும் மற்றும் மேலதிக வருமானத்தை நோக்கியிருக்கும் இல்லத்தரசிகளுக்குமான ஓர் இனிய செய்தி.

* 3 மாதத்தில் இலகுவான முறையிலான முழுமையான தையல் வகுப்புக்கள்.

உங்கள் வசதிக்குகேற்ற நேரத்தை தெரிவு செய்யலாம்.

3 மாதகாலப் பயிற்சி ஆரம்பம்: 05.06.2013

உடனே அழையுங்கள்: 0771882507, 0776421662

(C-3485)


## அடம்பிடிக்கும்...

காணி என்பதால் புனரமைப்பு செயவதில் பிரச்சினைகள் உள்ளன. இதன் காரணமாகவே அந்த இடத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில் குறித்த இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது" என்றார்.

பௌத்த மக்கள் இல்லாத இடத்தில் புத்தர் சிலை வேண்டாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உள்ளூர் மக்களும் இணைந்து நடத்திய ஆர்பாட்டம் தொடர்பாக அவரிடம் கேட்ட போது, "இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு. எங்களால் புத்தர் சிலை வைக்கமுடியாமல் போனால் வேறு யாரால் வைக்க முடியும்"? என்று கூறினார்.

நாட்டில் 10 தமிழ்க் குடும்பங்கள் வாழும் இடங்களில் கூட உயரமான இந்து ஆலயங்கள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-11)


## நிரந்தர வேலை வாய்ப்புகள்

கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் நிரந்தர வேலை வாய்ப்புகள். நவீன பிரதான தொழிற்சாலை ஜேம், கோடியல், pvc, கிளவுஸ், ஆடைத் தொழிற்சாலை, பிளாஸ்டிக் போன்றவற்றுக்கு உற்பத்தி உதவியாளர்/லேபல்/ பொதியிடல் பிரிவுக்கு ஆண்-பெண் 18-50 வயதினர் தேவை. சம்பளம் 18,000/=, 25,000/=, 32,000/= உணவு தங்குமிடம் சகாய விலைகளில். வருகைதரும் நாளில் நிரந்தர வேலைவாய்ப்பு. (நண்பர்கள், குழுக்களாகவும்) தொடர்பு கொள்ளவும்.

0778430179, 0775561883 வவுனியா

கொழும்பு விமானத்துறையிலும் துறைமுகத்திலும் (தனியார்) வேலை செய்வது உங்கள் கனவா? உடனே அழையுங்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். விமானத்துறை சுத்திகரிப்பாளர்/துறைமுகத்தில் சாதாரண ஊழியர்கள்/வேல்டிங்/பெயின்டர் போன்றோரும் தேவை வயது 18-50. "சம்பளம்" (தொழில் அடிப்படையில்) 18,000/=, 45,000/= உணவு தங்குமிடம் வழங்கப்படும்

விரைவாக அழையுங்கள்:-0775561883 வவுனியா

கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவரா நீங்கள்? அப்படியாயின் அழையுங்கள் கொழும்பு/மல்லாவி/பிரதேசங்களில் மேசன், கையுதவியாளர், தேவை மற்றும் கொழும்பு பிரதேசங்களுக்கு பிளம்பர்/பெயின்டர்/இலற்றீசனும் தேவை சம்பளம் 20,000/=, 45,000/= உணவு தங்குமிடம் வழங்கப்படும் (C-3463)

அழையுங்கள்:-0775561883

## Shakthy microtec

Hotline: 0779120842

Computer wholesaler



Rs.13,000/- Rs.14,000/- Rs.15,000/-

19"-Rs.7,000/-
17"-Rs.6,000/-
15"-Rs.5,000/-

அனைத்து வகையான Branded கணனிகளையும் 13000 ரூபா முதல் 35000 வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

100ற்கு மேற்பட்ட கணனிக் கொள்வனவிற்கு விஷேட விலைக்கழிவு

Head Office: 4500, Sheppard Ave, East, unit 27, Toronto, ON, M1S 1V2, Canada.

Branches: No.191/1, Grand pass Road, Colombo - 14

No.170, Palaly Road, Vigneswara Building, Kondavil East, Jaffna. Hotline : 0779120842

## தேவை

மிக்ஷர் செய்யக் கூடியவர்களும், பொதிகள் செய்யக் கூடியவர்களும் உடனடியாக தேவை

தொடர்பு:-0776042858 ஆனைக்கோட்டை (C-3488)

## வேலையாள் தேவை

பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் உள்ள கொமினிக்கேஷன் ஒன்றுக்கு கொம்பியூட்டர் ரைப்பிங் செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை.

தொடர்பு:0771882507 (C-3486)

## Financial Sponsorships

Students / Visits / Migrations to U.K, U.S.A, Australia, Canada, New Zealand, Etc... From Banks / Finance Companies

தொடர்புகளுக்கு 077 3013060 071 1781771 (C-3479)

மாபெரும் விசேட விலைக்கழிவு

## Jet D Express Courier Service




உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய

| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 kg 1100/= | |
| Canada | Over 5 kg 1200/= | |
| Norway | Over 5 kg 1100/= | |
| Italy | Over 5 kg 1100/= | |
| France | Over5kg 1000/= | Over11kg 800/= |
| Germany | Over5kg 1000/= | Over 11kg 800/= |
| London | Over 5kg 1000/= | Over 11kg 700/= |
| Australia | Over 5kg 1000/= | Over 11lg 850/= |
| Netharland | Over 5kg 1000/= | Over 11kg 850/= |
| Swiss | Over 5kg 1100/= | Over 11kg 950/= |
| Denmark | Over 5kg 1100/= | Over 11kg 850/= |

(#-3777)

Note: 25kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு



உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக் கொள்ளலாம்.

Note : * கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும் வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இல 27, முதலாம் மாடி, நவீன சந்தை. (தனம்ரெக்ஸ் மேல்) யாழ்ப்பாணம். தொ.பே:- 021 221 9150, 072187 301

No: 77E. Manning Place, Wellawatta, Colombo 06, T.P:- 0112363873 0776509909

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

af

பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்). France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். இன்றே பதிவு செய்யுங்கள்.

புதிய வகுப்பு :விரைவில் ஆரம்பமாகிறது...2 pm-4 pm (சனி, ஞாயிறு)

61, Kachchery-Nallur Road, Jaffna. T.P.:0212228093

கச்சேரி பஸ் தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம் (2804)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு: T.P: 021 321 0815, E-mail: valampurii@yahoo.com

## வல்வெட்டித்துறையில் உதயமாகியுள்ளது

## மாதுஜன் மருத்துவ ஆலோசனை நிலையம்

யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த வைத்திய நிபுணர்களை ஒன்றிணைத்த தினசரி வைத்தியசேவை.

### வருகை தரும் வைத்திய நிபுணர்கள்



- ✓ குழந்தை வைத்திய நிபுணர்கள்
- ✓ சத்திர சிகிச்சை நிபுணர்கள்
- ✓ தோல் வைத்திய நிபுணர்கள்
- ✓ கண் வைத்திய நிபுணர்கள்
- ✓ காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள்
- ✓ உளநல வைத்திய ஆலோசனை
- ✓ பொது வைத்திய நிபுணர்கள்
- ✓ மகபேற்றியல் நிபுணர்கள்
- ✓ இதய சிகிச்சை நிபுணர்கள்

'First to Care'



ECG ஸ்கான்

இரத்தப் பரிசோதனை



Mathujan Medical Consulting Center

மாதுஜன் மருத்துவ ஆலோசனை நிலையம்

மருதடி வல்வெட்டி, யாழ்.வீதி, வல்வெட்டித்துறை.

தொ.பே: 021 205 5105 (2540)

## காணி விற்பனைக்கு

இடம்:- பூந்தோட்டம் தெல்லிப்பளை

தொடர்புகளுக்கு: மகி 0779332764 (2893)

## ஒப்படைக்கவும்

வற்றாப்பளைகண்ணகியம்மன் ஆலய பொங்கல் தினத்தன்று புடைவைகள் அடங்கிய நான்கு பெரிய பொதிகள் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்து உதவவும்.

தொடர்பு: கா.சிவகாந்தன் ஏழாலை மத்தி, ஏழாலை. 0776055013 (C-3484)

## வீடு/கடை வாடகைக்கு

யாழ்.நகரிற்கு அண்மையில் 3 கடை மற்றும் வீடு (7 அறை) வாகன தரிப்பிட வசதியுடன் நீண்ட காலத்திற்கு வாடகைக்கு உண்டு. கல்வி நிறுவனங்கள், தனியார் வைத்தியசாலை, அலுவலகங்கள், நிறுவனங்கள் மற்றும்ரெஸ்ரோரன்டுகளுக்கும் ஏற்றது.

தொடர்பு -0779371896 0212219767 (2907)

## சாய்ராம் கல்யாண மண்டபம்

விளையாட்டரங்க வீதி கோப்பாய் தெற்கு. (2905)

T.P.077 923 4961

## வாடகைக்கு உண்டு

பருத்தித்துறை 1-ம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள 20 அடி நீளம், 23 அடி அகலம் கொண்ட கடை உடன் வாடகைக்கு உண்டு.

## காணி விற்பனைக்கு

முடக்காட்டு சந்தி, நெல்லியடியில் அமைந்துள்ள 3 1/2 பரப்பு வெறுங்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. (2880)

தொடர்புகளுக்கு: திரு.ராஜ் பிரகாஷ் 077 886 5833


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org